# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் : 24
வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

சுடர்: 29 கதிர்: 097 வள்ளுவர் ஆண்டு: 2045 மாசி 19, திங்கள் 03.03.2014


## பளை வரை நாளை ரயில் சேவை ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 3
வடக்குக்கான ரயில் சேவை நாளை தொடக்கம் பளை வரை இடம்பெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுளளது.
இதற்கான நிகழ்வில் போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம கலந்துகொள்ளவுள்ளார்.
கிளிநொச்சி வரை இது வரை நடைபெற்றுவந்தரயில்சேவை, பாதை அமைப்புப் பணி முடிந்ததை அடுத்து நாளையில் இருந்து பளை வரை விரிவாக்கப்படவுள்ளது. அடுத்த மாதத்தில் யாழ்ப்பாணம் வரை சேவையை நீடிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது. (ஐ-9)

## மன்னார் புதைகுழியை தோண்டும் பணி இன்று

கொழும்பு, மார்ச் 3
இதுவரையில் 80 பேரின் மண்டையோடுகள் மற்றும் எலும்பு எச்சங்கள் மீட்கப்பட்ட மன்னார் புதைகுழி 32 ஆவது தடவையாக இன்று மீண்டும் தோண்டப்படுகிறது. சிவராத்திரி தினத்தை முன்னிட்டு கடந்த 24ஆம் திகதி புதைகுழி தோண்டும் பணி நிறுத்தப்பட்டது. வழிபாடுகள்

21 ஆம் பக்கம் பார்க்க

# ஆரம்பமே அதிரும்

## ஜெனிவா கூட்டத் தொடர் இன்று ஆரம்பம் இலங்கையை துவைக்க நாடுகள் காத்திருப்பு

ஜெனிவா.மார்ச்.03
ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இந்த வருடத்துக்கான முதல் அமர்வு இன்று ஆரம்பமாகிறது. முதல் நாளிலேயே இலங்கைக்கு எதிராகக் காட்டமான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படவுள்ளன என்று ஜெனிவா செய்திகள் கூறுகின்றன. அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் கனடா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் இலங்கை தொடர்பான தமது இறுக்கமான நிலைப்பாட்டை ஆரம்ப உரையிலேயே வெளிப்படுத்துவர் என்று கூறப்படுகிறது.
இந்தக்கூட்டத்தொடரில், இலங்கை விவகாரம் முக்கியமான விவாதப் பொருளாக மாறியுள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தொடரின் ஆரம்ப நாளான இன்று, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை மற்றும் ஐ.நா. பொதுச்செயலர் பான் கீ மூன் ஆகியோர் உரையாற்றுவர்.

அமெரிக்க நிலைப்பாடு

அதையடுத்து, உயர்மட்டப் பிரதிநிதிகளின் உரைகள் இடம்பெறவுள்ளன. அமெரிக்கா சார்பில், ஐ.நாவுக்கான தூதுவரான சமந்தா பவர் உரையாற்றவுள்ளார்.
இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை அமெரிக்கா மீண்டும் முன்வைக்கவுள்ளதால், சமந்தா பவரின் உரை பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. ஒபாமா அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள சமந்தா பவர், தனது உரையில், இலங்கை தொடர்பாக அமெரிக்கா எடுத்துள்ள நிலைப்பாடு குறித்து கருத்து வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நவநீதம்பிள்ளைக்கு ஆதரவு

ஏற்கனவே அவர், கடந்த 27ஆம் திகதி வெளியிட்ட டுவிற்றர் செய்தியில், ஜன

21 ஆம் பக்கம் பார்க்க

## கடலில் தான் விரித்திருந்த வலையில் சிக்கி நேற்று மீனவர் பரிதாபச் சாவு

### மன்னார் கடலில் நேற்றுக் காலை சம்பவம்

மன்னார், மார்ச் 3
கடற்றொழிலுக்குச் சென்ற மீனவர் ஒருவர் தான் விரித்த வலையிலேயே சிக்கி பரிதாபமாக உயிரிழந்துள்ளார். வலையில் சிக்கிய நிலையில் அவரது சடலத்தை மீட்ட தலை மன்னார் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.
மன்னார் பேசாலை கடற்பரப்பில் நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை மீன்பிடிக்கச் சென்ற பேசாலையைச் சேர்ந்த காட்டுராஜா நல்லதம்பி (வயது-36) எனும் 3 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தார்.
இவர் படகு ஒன்றில் மீன்பிடிக்கச் சென்றார் என்றும் தனது வலை கடலில் சிக்குண்டதை அடுத்து அதனைச் சீர்செய்ய படகைவிட்டு கடலில் குதித்தார் என்றும் அப்போது அவர் வலையில் சிக்கிக் கொண்டார் என்றும் பொலிஸாரின் விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அவருடன் சென்றவர்களில் எவருக்கும் நீச்சல் தெரியாத காரணத்தால் அவரைக் காப்பாற்ற முடியாமல் போய்விட்டது என்றும் கூறப்படுகிறது.

21 ஆம் பக்கம் பார்க்க

## சுதந்திர ஈழமே எமது இலக்கு

### வைகோ நேற்று முழக்கம்

சென்னை,மார்ச்.03
சுதந்திர ஈழமே எங்களின் இலக்கு. அதற்கான சூழல் கனிந்து வருகிறது. விடுதலைப் புலிகள் இயக்கம் தீவிரவாத இயக்கம் இல்லை என்று இத்தாலி நீதிமன்றம் கூறியுள்ளது. இதனால், ஐரோப்பாவில் விடுதலைப் புலிகள் மீதான தடை நீங்கும். இந்தியாவிலும் விடுதலைப் புலிகள் மீதான தடை நீங்கும்.
இவ்வாறு தெரிவித்தார் மறுமலர்ச்சி திராவிடர் முன்னேற்றக் கழகத் தலைவர் வைகோ.
இந்தியாவின் பிரதமராக நரேந்திரமோடி வரவேண்டும் என்பதே ஈழத் தமிழர்களின் விருப்பமாக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.
காந்திய மக்கள் கட்சியின் தலைவர் தமிழருவி மணியன் நடத்தி வரும் ரௌத்திரம் இதழின் இரண்டாம் ஆண்டு தொடக்க விழாவில் கலந்து கொண்டு உரையாற்றினார் வைகோ. அவர் மேலும் தெரிவித்ததாவது:
தமிழீழ விடுதலைப் புலிகள் போரில் வெல்லப்பட முடியாத படைகளைக் கொண்டவர்கள். ஆனால் இலங்கை அரசுக்குப் படைகளையும், ஆயுதங்களையும் வழங்கி, திட்டங்களையும் இந்தியா வகுத்துக் கொடுத்ததால்தான் விடுதலைப் புலிகள் போரில் தோற்றனர்.

தமிழர்களுக்கு துரோகம் வாஜ்பாய் ஆட்சி காலத்தில்

21 ஆம் பக்கம் பார்க்க

## பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் கோபிதாஸின் உடல் அடக்கம்

யாழ்ப்பாணம்,மார்ச்.03
சிறையில் உயிரிழந்த தமிழ் அரசியல் கைதி கோபிதாஸின் இறுதிச் சடங்கு பெரும் பொலிஸ் பாதுகாப்புடன் அவரது சொந்த ஊரான புலோலியில் நேற்று நடைபெற்றது. இறுதிச் சடங்கில் அரசியல் தலைவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் பங்கெடுத்திருந்தனர்.
தமிழ் அரசியல் கைதியான விஸ்வலிங்கம் கோபிதாஸ் (வயது -43) கடந்த 24 ஆம் திகதி மகஸின் சிறைச் சாலையில் 'சி' தளத்திலுள்ள மலசலகூடத்தில் உயிரிழந்திருந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.
இவரது சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இதயத்துக்குச் செல்லும் நரம்பு வெடித்ததாலேயே மரணம் சம்பவித்ததாக உடற்கூற்று பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. சிறைச்

21 ஆம் பக்கம் பார்க்க

## கடைசி நேர இராஜதந்திர முயற்சியில் ஜி.எல்.பீரிஸ்

### நவிபிள்ளையை நேரில் சந்தித்து விளக்குவார்

கொழும்பு,மார்ச்.03
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடர் ஜெனிவாவில் இன்று ஆரம்பமாகின்ற நிலையில் இலங்கை தொடர்பில் காட்டமான நகர்வுகள் எதற்கும் அது போகாமல் இருப்பதற்கான இறுதிக்கட்ட இராஜதந்திர முயற்சிகளில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மிகத் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.
கடைசி முயற்சியாக அவர் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவிபிள்ளையை (நவநீதம் பிள்ளை) நேரில் சந்தித்து இலங்கை அரசு தரப்பு நியாயங்களை எடுத்துக் கூறவுள்ளார்.
இந்தக் கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பான அறிக்கையை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை

21 ஆம் பக்கம் பார்க்க

## கோபிதாஸின் இறப்புக்கு நீதி கேட்டு வடமராட்சியில் நேற்றுப் போராட்டம்




யாழ்ப்பாணம்,மார்ச்.03
மகஸின் சிறைச்சாலையில் மர்மமான முறையில் உயிரிழந்த தமிழ் அரசியல் கைதியான கோபிதாஸின் இறப்புக்கு நீதி வேண்டி, அவரது வீட்டுக்கு அருகாமையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற

21 ஆம் பக்கம் பார்க்க



மகஸின் சிறைச்சாலையில் உயிரிழந்த கோபிதாஸின் இறுதிக்கிரியைகள் நேற்று அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அடக்கத்துக்காக எடுத்து செல்லும் போது மனிதாபிமானம் உள்ள பொலிஸார் ஒருவர் கோபிதாஸின் உடலுக்கு மரியாதை செலுத்துகின்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மதில் சுவர் அமைக்கும் பணி

## இ.போ.ச.பஸ் நிலையத்துக்கு அமைக்கப்படுகிறது மதில் சுவர்

யாழ்ப்பாணம். மார்ச் 3
இலங்கைப் போக்குவரத்து சபைக்கும் தனியார் பஸ் சேவைக்கும் இடையில் அடிக்கடி நிகழும் முரண்பாடுகளை தவிர்க்கும் வகையில் யாழ்.மத்திய பஸ் நிலையத்தில் இரண்டு பகுதிகளையும் பிரித்து மதில் அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.
யாழ்ப்பாணம் மத்திய பஸ் தரிப்பிடத்தில் இலங்கைப் போக்குவரத்து சபை ஊழியர்களுக்கும் மின்சார நிலைய வீதியில் நிறுத்தி வைக்கப்படும் தனியார் பஸ் உரிமையாளர்களுக்கும் இடையில் அடிக்கடி முரண்பாடுகள் ஏற்பட்டுவந்தன.
அரச மற்றும் தனியார் பஸ்கள் மக்களுக்கான சேவையை வழங்க வேண்டிய நிலையில் இருதரப்புக்குமிடையில் முரண்பாடு ஏற்படுவதால் பயணிகளே பாதிக்கப்படுகின்றனர்.
இந்த நிலையில் முரண்பாட்டைத் தவிர்க்கும் வகையில் இரு பகுதியையும் பிரித்து தற்போது மதில் அமைக்கப்பட்டு வருகிறது.
இது தொடர்பாக இலங்கைப் போக்குவரத்து சபையின் வட பிராந்திய முகாமையாளர் அஸ்கருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது.
இ.போ.ச. பஸ்நிலையத்தில் சுற்றுவேலி குறைந்த உயரத்தில் கம்பியால் அடைக்கப்பட்டுள்ளன. அவை தற்போது சேதமடைந்துள்ளதால் மீளவும் மதிற் சுவர் மூலம் அறுக்கை இடப்படுகிறது என்றார்.
இது குறித்து தனியார் பஸ் சங்கத்தின் தலைவர் பொ.கெங்காதரனுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது.
மதில் அமைப்பதில் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் அவற்றுக்கிடையில் 3 பாதைகளை விடும்படி கோரியுள்ளோம். அமைக்கப்பட்டால் பயணிகளுக்கு போக்குவரத்து பாதிப்புகள் இருக்காதுஎன்றார். (ஐ-14-21)

# அமெரிக்கத் தீர்மான முன்வரைவு முடிந்தது

### பொறிமுறை பற்றிய விவரம் வெளியாகவில்லை

கொழும்பு, மார்ச் 3
ஜெனிவாவில் மனித உரிமைகள் சபையில் அமெரிக்காவால் இலங்கைக்கு எதிராக தாக்கல் செய்யப்படவிருக்கும் தீர்மான முன் வடிவத்தின் வாசகம் கடந்த வாரம் முற்றாக்கப்பட்டுள்ளது.
உறுப்பு நாடுகளுக்கு வழங்குவதற்கு முன்னர் சில முக்கிய நாடுகள் மத்தியில் மட்டும் பரப்புரைக்காக அது பகிர்ந்து கொள்ளப்பட்டுள்ளது.
தீர்மான நகல் வடிவம் இலங்கையின் போர்க் குற்றங்கள் தொடர்பாகச் சர்வதேச விசாரணை ஒன்று நடத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துவதாக அமையும் என்று இராஜதந்திர வட்டாரங்கள் கூறுகின்றன. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை தமது அறிக்கையில் தெரிவித்துள்ளவற்றை இந்தத் தீர்மானம் வரவேற்பதாக இருக்கும் என்றும் கூறப்படுகிறது.
கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்று இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது. அச்செய்தியில் காணப்படும் மேலும் சில தகவல்கள்:-
நவிப்பிள்ளையின் மனித உரிமைகள் சபைக்கான அறிக்கை கடந்த மாதம் 27ஆம் திகதி வெளியிடப்பட்டது. அவ்வாறான ஒரு விசாரணை எவ்வாறு அமையும் என்பதுதான் இப்போது விளக்கம் இல்லாமல் இருக்கின்றது.
ஐ.நா. மனித உரிமைகள் சபை இவ்வாறான சந்தர்ப்பங்களில் 3 வித்தியாசமான நடைமுறைகளைக் கைக்கொள்வது வழக்கம் என்று ஜெனிவாவில் உள்ள ராஜதந்திரிகள் கூறுகிறார்கள். அவைகள் (அ) சிறப்பு அறிக்கையாளர் நியமனம் (ஆ) விசாரணை ஆணைக்குழு ஒன்றை நியமிப்பது (இ) சுயாதீன தீர்ப்பாயம் ஒன்றை நிறுவுவது
மனித உரிமைகள் ஆணையாளர் சபையின் 24ஆவது வருடாந்த மாநாட்டில் தமது வாய் மூலமான அறிக்கையில் துணை ஆயுதப் படைகள் குறித்து தெரிவிக்கையில், "அவைகள் பெரும்பாலும் கலைக்கப்பட்டு விட்டன இருந்தாலும் இது வரை காலமும் இரண்டு முக்கிய துணை ஆயுதப் படைத் தலைவர்கள் தொடர்பாக எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அவர்கள் இப்போது அமைச்சர் பதவிகளில் அமர்ந்திருக்கிறார்கள். டக்ளஸ் தேவானந்தா. விநாயகமூர்த்தி முரளிதரன் மற்றும் முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் இவர்கள் அனைவரும் ஆயுதப் போரின்போது மிகப் பாரதூரமான குற்றங்களைப் புரிந்தவர்கள் என்று குற்றச்சாட்டுக்கு உள்ளானவர்கள். கருணாவும் பிள்ளையானும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தளபதியாக இருந்தவர்கள். பிற்காலத்தில் அதில் இருந்து பிரிந்து கருணா பிரிவை உருவாக்கியவர்கள். இது பற்றி நல்லிணக்கக் குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. பின்னர் ஆயுதப் போர் மற்றும் சிறுவர்கள் தொடர்பான செயலாளர் நாயகத்தின் அறிக்கைகளிலும் கூறப்பட்டுள்ளது. போர்க்குற்றமானது சிறுவர்களைப் போரில் இணைத்தமை தொடர்பாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது'' என்றுள்ளது.
ஆணையாளர் இராணுவ விசாரணை நீதிமன்றங்கள் குறித்தும் குறிப்பிட்டிருந்தார். "அவையும் நம்பிக்கையை ஊட்டும் படியாக சுயேச்சையாக இருக்கவில்லை. இந்த நீதிமன்றங்களை நியமித்தவரான இராணுவத்தின் தளபதியானவர் போரின் முக்கிய மோதல் களத்தில் பாதுகாப்புப் படைகளின் தளபதியாக இருந்தவர். மேலும் முழு இராணுவத் திட்டமிடல் மற்றும் செயற்பாடுகளில் வினைத்திறனுடன் செயற்பட்டவர்.
இராணுவத்தால் அல்லது ஆயுதப் படைகளால் மனித உரிமை மீறல்கள் நிகழ்த்தப்பட்டதான குற்றச்சாட்டுக்களில் சிவில் அதிகார பகுதிகளினாலேயே விசாரிக்கப்பட வேண்டும். ஆயுதப் படைகள் தம்மாலேயே அது நடத்தப்படக் கூடாது" என்றும் நவி பிள்ளை தெரிவித்திருந்தார்.
"உண்மையைக் கண்டறியும் எந்தவொரு பொறிமுறையும், போர்க்குற்றம், இனக்கொலை, மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் மனித உரிமைகளை முழுமையாக மீறியமை, பால் நிலைக் குற்றங்கள் அடங்கலானவற்றுக்குப் பொறுப்பான குற்றவாளிகளுக்குமன்னிப்பு வழங்கி விசாரணையை தடுப்பது அனுமதிக்கப்படலாகாது'' என்றும் அவர் வலியுறுத்தியிருக்கிறார். (ப)

## மஹிந்த இன்று மியன்மாருக்கு

வங்காள விரிகுடாவை சூழவுள்ள நாடுகளின் பொருளாதார ஒத்துழைப்பு அமைப்பான பிம்ஸ்டேக் அமைப்பின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இன்று மியன்மார் செல்கிறார்.
பிம்ஸ்டேக் அமைப்பின் மாநாடு நாளை மியன்மாரில் இடம்பெறவுள்ளது.
இந்த மாநாட்டில். பங்களாதேஷ். இந்தியா. மியன்மார். தாய்லாந்து. பூட்டான். நேபாளம். இலங்கை ஆகிய நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.
அதேவேளை இந்த மாநாட்டில் கலந்து கொள்ளும் இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சந்தித்து பேசுவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)



மகசீன் சிறைச்சாலையில் உயிரிழந்த கோபிதாஸின் இறுதிக்கிரிகைகள் நேற்று அவரது இல்லத்தில் நடை பெற்றபோது.

## சர்வதேச பொறிமுறை வரும் பிரிட்டன் அசையா நம்பிக்கை

கொழும்பு.மார்ச்.03
உள்ளக விசாரணையை நடைமுறைப்படுத்தப்படாவிட்டால். ஐ.நா மனித உரிமை ஆணையாளர் ஊடாக சர்வதேச விசாரணைக்கான பொறிமுறை நடைமுறைப்படுத்தப்படும் என்று நம்புவதாக பிரிட்டன் தெரிவித்துள்ளது.
இலங்கையில் கடந்த வருடம் நவம்பர் மாதம் இடம்பெற்ற பொதுநலவாய தலைவர்களின் மாநாட்டுக்கு வருகை தந்திருந்த பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன். எதிர்வரும் மார்ச் மாதத்திற்குள் நம்பகமான உள்நாட்டு விசாரணை நடத்தப்பட வேண்டும். இல்லாவிட்டால் சர்வதேச விசாரணைக்கான கோரிக்கை விடுக்கப்படும் என்று தெரிவித்திருந்தார்.
இந்த நிலையில் ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடர் இன்று ஆரம்பமாகிறது. இதில் பிரிட்டனின் நிலைப்பாடு தொடர்பாக. இலங்கைக்கான பிரிட்டன் தூதரகத்தின் பேச்சாளரிடம்கொழும்பு ஊடகம் ஒன்று வினவியது.
இலங்கையின் போர்க்குற்றம் தொடர்பில் நம்பகத்தன்மையான - வெளிப்படையான - சுதந்திரமான உள்ளக விசாரணை அதன் தராதரத்துக்கு நடத்தப்பட வேண்டும். அவ்வாறு செய்யாது விட்டால். ஐ.நா. மனித உரிமைகள் சபையில். ஆணையாளர் நவநீதம்பிள்ளையினூடாக சர்வதேச விசாரணைக்கான பொறிமுறைக்கான தீர்மானம் நிறைவேற்றப்படும் என்று தாம் நம்புவதாக பிரிட்டன் தெரிவித்துள்ளது. (உ-5)

# காணாமற் போனோருக்கு இல்லாதமைக்கான சான்றிதழ்

### இலங்கையில் முதன் முறையாக வழங்கத் திட்டம்

கொழும்பு.மார்ச் 3
காணாமற் போனவர்களின் குடும்பங்களுக்கு. அவர்கள் இல்லாதமைக்கான சான்றிதழ் வழங்கப்படவுள்ளதாகவும். அதற்குரிய வகையில் இலங்கை அரசு புதிய சட்டமொன்றை இயற்றவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

"காணாமற்போனவர்கள் உயிரிழந்து விட்டதாக வழங்கப்படும் மரணச் சான்றிதழை ஏற்றுக்கொள்ள மறுக்கும், நெருங்கிய உறவினர்களுக்கு காணாமற்போயுள்ள தாகவே அறிக்கை வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதன் படி காணாமற்போனவர்கள் உயிரிழந்து விட்டதாக வழங்கப்படும் மரணச் சான்றிதழை ஏற்றுக்கொள்ள மறுக்கும். நெருங்கிய உறவினர்களுக்கு காணாமற் போயுள்ளதாகவே அறிக்கை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
காணாமற் போய்விட்டதாகத் தெரிவித்து இதுவரையில் இலங்கையில் எவருக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டதில்லை. முதன் முறையாக இவ் வகையாக சான்றிதழ் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக அரசு தெரிவிக்கிறது.
இதற்கென புதிய சட்டம் ஒன்றை இயற்றும் நடவடிக்கையில் தாம் எடுத்துள்ளதாகவும் அரசு அறிவித்துள்ளது. (ஐ-5)

## நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தியமை கையேடு வெளியிடுகிறது சனல் 4 ஊடகம்

### இலங்கை அரச ஆதரவாளர்களுக்கு எதிராக

கொழும்பு.மார்ச்.03
இலங்கையில் இறுதிக் கட்ட போரின்போது இடம்பெற்ற பல்வேறு மீறல்கள் தொடர்பாக சனல் 04 தொலைக்காட்சி சேவை ஒளிபரப்பிய காணொலிகள் குறித்து இலங்கை அரச ஆதரவாளர்களால் வெளியிடப்படும் கருத்துக்களுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் கையேடு ஒன்றை வெளியிடவுள்ளதாக சனல் 04 தொலைக்காட்சிச் சேவை அறிவித்துள்ளது.
இதுகுறித்து அந்தத் தொலைக்காட்சி சேவை விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
சனல் 04 தொலைக்காட்சி சேவையின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்கும் நோக்குடனும். போர்க்குற்றங்கள் தொடர்பான சாட்சியங்களை வெளியிடுவதை எதிர்த்தும். இலங்கை அரச ஆதரவானவர்கள் 222 பக்கங்களைக் கொண்ட Corrupted Journalism: Channel 4 and Sri Lanka என்னும் பெயரில் புத்தகம் ஒன்றை வெளியிட்டுள்ளனர். இந்த நூலானது உலகெங்கும் பரந்து வாழும் இராஜதந்திரிகள். ஊடகவியலாளர்கள் மற்றும் புத்திமான்கள் போன்றவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த நூலின் ஆசிரியர்கள் யார் என்பது இன்னமும் வெளியிடப்படவில்லை. இதேபோன்று இந்த நூலை ஆக்குவதற்கான நிதியை வழங்கியவர்கள் யார் என்பது வெளியிடப்படவில்லை.
இலங்கை அரச ஆதரவாளர்களால் எமது தொலைக்காட்சி சேவைக்கு எதிராக வெளியிடப்பட்டுள்ள இந்த நூலை எதிர்த்து. சனல் 04 தொலைக்காட்சி சேவையானது 20.000 வார்த்தைகளைக் கொண்ட கறைபடியாத உண்மைகள் - The Uncorrupted Truth' என்கின்ற கையேடு ஒன்றை வெளியிடுவதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளது. இக்கையேட்டின் ஆசிரியர் சனல் 04 தொலைக்காட்சி சேவையின் இலங்கை போர்க்குற்றக் காணொலிகளின் இயக்குநர் கலும் மக்ரே என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மாற்றுத்திறனாளியுடன்

# போர்க்கால சாட்சிகளாக மாற்றுத் திறனாளிகள்

*கூறுகிறார் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம்*

கிளிநொச்சி, மார்ச் 3

தமிழர்களின் போர்க்கால மற்றும் வரலாற்றுச் சின்னங்களை அரசு திட்டமிட்டு அழித்துவரும் நிலையில் போர்க்காலத்தை நினைவுபடுத்தும் சாட்சிகளாக மாற்றுத் திறனாளிகள் காணப்படுகின்றனர்.

இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

கிளிநொச்சி பரந்தனில் உள்ள விழிப்புலனற்றோர் சங்கத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற உலர் உணவு வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் ;

சுவிற்ஸர்லாந்தில் செயற்படும் எழுகை அமைப்பின் உதவியால் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு உதவிகளை வழங்க முடிகின்றது.

எவரும் உதவி செய்யும் நிலையில் மாற்றுத் திறனாளிகள் இல்லை என்பதோடு சொந்தக் காலில் அவர்கள் நிற்க வேண்டியநிலையை உருவாக்கவேண்டும். எழுகை அமைப்பு விழிப்புலனற்றவர்களுக்குத் தொடர்ந்தும் உதவி வருகின்றது.

இதில் 220 பேருக்கு தலா 85 ஆயிரம் ரூபாவும், 220 பேருக்கும் ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபாவும் வழங்கியுள்ளது.

34 மாணவர்களின் கல்விக்கு உதவி வழங்கி வருகின்றது.

14 மாணவர்களுக்கு மிதிவண்டி வழங்கியுள்ளது. 13 பேருக்கு இதய அறுவைச் சிகிச்சைக்கு உதவியுள்ளார்கள் . 150 மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. எழுகை அமைப்பு தொடர்ந்தும் உதவிகளை வழங்குமென நம்புகின்றோம். விடுதலையுணர்வு புலம் பெயர்ந்த எமது உறவுகளிடம் உள்ளதால் அரசு பயம் கொள்கிறது.

எமது வரலாறுகள் அழிக்கப்பட்டால் எமது எதிர்காலச் சந்ததியினருக்கு இங்கு நடந்த ஒன்றுமே தெரியவருவதற்கான வாய்ப்புக் கிடைக்காது.

அரசு வரலாற்றைத் திரித்துக் கூறுவதால் ஒன்றை மட்டும் மறைக்க முடியாது.

மாற்றுத் திறனாளிகள் எமது போராட்டத்தின் சின்னங்களாகத் திகழ்கின்றனர். மாற்றுத்திறனாளிகள் எமது போராட்ட வரலாற்றை எதிர்காலச் சந்ததிக்குக் கொண்டு செல்வார்கள் -என்றார்.

வன்னி விழிப்புலனற்றோர் சங்கத் தலைவர் ச.ரூபராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அருட் தந்தை லிங்கேஸ்வரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாவட்ட அமைப்பாளர் அ.வேழமாலிகிதன், சங்கப் பொருளாளர் கு.நந்தகோபால் ஆகியோரும் இங்கு உரை நிகழ்த்தினர்.

150 பேருக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இந்தச் சங்கத்துக்கு 2 லட்சம் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

# யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு ஓய்வூதிய கொடுப்பவு நாளை முதல்

யாழ்ப்பாணம், மார்ச் 3

யாழ். மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவுகள் நாளைமறுதினம் புதன்கிழமை முதல் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி கடந்த தை மாதத்துக்கான ஓய்வூதியக் கொடுப்பனவுகளைப் பெறத் தகுதியுடைய விவசாயிகள் கீழ் குறிப்பிடப்படும் திகதிகளில் தத்தமது கமநலசேவை பிரிவுகளுக்குரிய இடங்களில் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இதன் போது தேசிய அடையாள அட்டை, ஓய்வூதியப் புத்தகம் என்பவற்றுடன் நேரடியாக வந்து தத்தமது பிரிவு கமநல சேவை நிலையங்களில் ஓய்வூதியத்தை பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

நாளைமறுதினம் காலை 9 மணிமுதல் 12 மணிவரை புலோலி கமநல சேவை நிலையத்திலும் பி.ப. 1 மணிமுதல் பி.ப. 4 மணிவரை கரவெட்டி கமநல சேவை நிலையத்திலும் -

எதிர்வரும் 6 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணிவரை உடுவிலிலும், பி.ப. 1 மணி முதல் பி.ப. 4 மணிவரை சண்டிலிப்பாயிலும் -

7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 12 மணிவரை சாவகச்சேரியிலும், பிற்பகல் 1 மணி தொடக்கம் பி.ப. 4 மணிவரை கைதடியிலும்,

10 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிமுதல் 12 மணி வரை தொல்புரத்திலும் பி.ப. 1 மணிமுதல் பி.ப. 4 மணிவரை காரைநகரிலும்

11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிமுதல், நண்பகல் 12 மணிவரை கீரிமலையிலும், பி.ப. ஒரு மணிமுதல் பி.ப. 4 மணிவரை புத்தூரிலும்,

1 2 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 9 மணிமுதல் 12 மணி வரை வேலணையிலும் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை குறிப்பிட்ட திகதிகளில் ஓய்வூதியத்தைபெற்றுக் கொள்ள முடியாதவர்கள் எதிர்வரும் 13ஆம், 14 ஆம் திகதிகளில் பலாலி வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள கமத்தொழில் காப்புறுதிச் சபையின் மாவட்ட காரியாலயத்தில் வந்து பெற்றுக்கொள்ள முடியும் என கமத்தொழில் காப்புறுதி உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ-400)

## மும்மொழித் திட்டத்தை நடைமுறையில்

மும்மொழித் திட்டத்தை வடக்கு மாகாணத்தில் உள்ள சகல திணைக்களங்களிலும் நடைமுறைப்படுத்துமாறு வடமாகாண பிரதம செயலாளர் அறிவுறுத்தியுள்ளார்.

மும்மொழிகளிலும் சகல பெயர்ப் பலகைகளை தயாரித்தல், மாகாணப் பாதைகளை மும்மொழிகளிலும் பெயரிடுதல், மொழிப் பயிற்சி நெறிகள் ஒழுங்குபடுத்துதல், மொழி பெயர்ப்புக்கு அவசியமான நூல்களை கொள்வனவு செய்தல் போன்ற திட்டங்களை உடன் நடைமுறைப்படுத்துமாறும் அது தொடர்பான முன்னேற்ற அறிக்கைகளை அனுப்பி வைக்குமாறும் சகல திணைக்களத் தலைவர்கள் மாகாண செயலாளர்கள் உட்பட அனைவருக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ-400)

# வேகச் சவாரி விபத்தில் முடிந்தது 7 பேர் வைத்தியசாலையில்

வலி. வடக்கு, மார்ச் 3

யார் யாரை முந்திச் செல்வது என்று கே.கே.எஸ். வீதியில் போட்டி போட்டு இரண்டு மோட்டார் சைக்கிளில் சென்றவர்கள் அவை ஒன்றுடன் ஒன்று மோதுண்டு எதிரே வந்த இரண்டு மோட்டார் சைக்கிளையும் மோதித் தள்ளினர். இதில் நான்கு மோட்டார் சைக்கிள்களில் பயணித்த 7 பேர் காயமடைந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்று பிற்பகல் 4.30 மணியளவில் கே.கே.எஸ். வீதியிலுள்ள கோண்டாவில் மேற்கு உப்புமடம் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் இடம்பெற்றது.



விபத்தில் சிக்கிய மோட்டார் சைக்கிள்கள்

சுன்னாகத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வேகச் சவாரி செய்தவர்கள் செலுத்தி வந்த இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதுண்டு எதிரே வந்த மோட்டார் சைக்கிள்களையும் மோதின. சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ஐ-86)





பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கு கல்லூரியின் பழைய மாணவரும், ஜேர்மனி ஹம்பக் செனட்டருமான கே.கரனின் நிதியுதவியுடன் சுமார் 6 கோடி ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 'அயன் கரன் மாணவர் விடுதி' நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது. புதிய மாணவர் விடுதியின் முகப்புத் தோற்றத்தையும் திறப்பு விழாவுக்கு வருகைதந்த ஜேர்மன் தூதுவர் கலாநிதி யேகன் மோஹறாட் உட்பட விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் காணலாம். (ஓ-400-422)

# மொழிபெயர்ப்புக்காக அலைந்து திரியும் தமிழ் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள்

*கல்வி அமைச்சின் சுற்றறிக்கைகள் தனிச்சிங்களத்தில்அனுப்பப்படுவதால்*

அச்சுவேலி, மார்ச் 3

கல்வி அமைச்சின் சுற்றறிக்கைகள்,கடிதங்கள் தனிச் சிங்களத்தில் அனுப்பி வைக்கப்பட்டதால் தமிழ் பாடசாலைகளின் ஆசிரியர்கள், அதிபர்கள் மொழி பெயர்த்து அறிந்து கொள்வதற்கு அலைகின்றனர். கல்வி அமைச்சின் இணை யத்தளத்திலும் மொழி பெயர்ப்புக்கள் இல்லாமல் சிங்களத்திலேயே அதிகமான தகவல்கள் வெளியிடப்படுவதாக கவலை தெரிவிக்கப்படுகின்றது.

ஆசிரியர்கள், அதிபர்களின் சம்பள உயர்வுகள் மற்றும் பாடசாலைகளின் அபிவிருத்தி மற்றும் கல்விச் செயற்பாடுகள் தொடர்பான முக்கிய சுற்றறிக்கைகள் தனிச்சிங்களத்தில் மொழி பெயர்ப்புக்கள் எதுவும் இன்றி கல்வி அமைச்சால் அனுப்பி வைக்கப்படுவதால் தமிழ் ஆசிரியர்கள், அதிபர்கள் மட்டுமல்ல தமிழ் பிரதேசங்களில் உள்ள கல்வி வலயங்கள் மற்றும் கோட்ட கல்வி அலுவலகங்களிலும் அவற்றை உரிய முறையில் புரிந்துகொள்ள முடியாமல் இடர்ப்படுகின்றனர்.

குறித்த செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதில் காலதாமதம் மட்டுமல்ல சில சந்தர்ப்பங்களில் அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் முன்னெடுக்கப்படாமல் முடக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்மொழி நடைமுறைப்படுத்தலுக்கும் அதனை உரிய முறையில் சமகாலத்தில் சுற்றறிக்கைகளில் கையாளுவதற்கும் விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள நிலையில் கல்வி அமைச்சு தமிழ்மொழி நடைமுறையை உரிய முறையில் கையாளுவதை கைவிட்டு தனிச்சிங்களத்தில் சுற்றறிக்கைகள் கடிதங்களை அனுப்பி வைப்பதோடு அந்த வகையிலேயே இணையத்தளத்திலும் தகவல்களை வெளியிடுவது தொடர்பாக தமிழர் தரப்பில் இருந்தும். இன நல்லுறவை விரும்புவோர் தரப்பிலும் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

தமிழ்மொழி மொழி பெயர்ப்பு இன்றி சிங்களத்தில் மட்டும் சுற்றறிக்கை அனுப்பி வைப்பது தொடர்பாக தொழிற்சங்கப் பிரமுகர்கள், தமிழ் ஆர்வலர்கள் கல்வி அமைச்சருடன் தொடர்பு கொண்டு விசாரிக்கும் போது "தமிழ் மொழி பெயர்ப்புக்கு ஆளணி குறைவாக இருப்பதால் உரிய வேளையில் மொழி பெயர்ப்பு செய்ய முடியவில்லை" என்று பதில் அளிக்கப்படுகின்றது.

அமைச்சு மட்டத்திலான செயற்பாடுகளில் அதுவும் கல்வி அமைச்சில் இந்த நிலை காணப்படுவதால் தமிழ் மாணவர்களின் கற்றல்- கற்பித்தல் செயற்பாடுகளில் மட்டுமல்ல தமிழ் பாடசாலைகளின் அபிவிருத்தியிலும் எதிர்பாராத பாதிப்புக்கள் ஏற்படக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது" என்று விசனம் தெரிவிக்கப்படுகின்றது. (வ-11)

**தமிழ் ஆசிரியர்கள், அதிபர்கள் மட்டுமல்ல தமிழ் பிரதேசங்களில் உள்ள கல்வி வலயங்கள் மற்றும் கோட்ட கல்வி அலுவலகங்களிலும் அவற்றை உரிய முறையில் புரிந்துகொள்ள முடியாமல் இடர்படுகின்றனர்**

# அடிப்படை வசதிகள் குறித்த விவரம் திரட்டும் நடவடிக்கை

*யாழ்.மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களிடம்*

வலி.வடக்கு, மார்ச் 3

யாழ்.மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு அடிப்படை வசதிகளான மலசலகூடம் மற்றும் குடிதண்ணீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் அவை குறித்த விவரங்களைத் திரட்டும் நடவடிக்கைகள் மீள்குடியேற்ற அமைச்சால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மீள் குடியேற்ற அமைச்சால் மேற்கொள்ளப்படவுள்ள குறிப்பிட்ட நடவடிக்கை தொடர்பில் மாவட்டச் செயலகங்கள் ஊடாக பிரதேச செயலகங்களுக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து கிராம அலுவலர்கள் மூலம் இத்தகைய தகவல்கள் சேகரிக்கும் பணி இடம்பெற்று வருகின்றது.

யாழ்.மாவட்டத்தில் இத்தகைய விவரங்களைப் பெறுவதில் கிராம அலுவலர்கள் மீள்குடியேற்ற கிராம அமைப்புகள் சங்கங்களுடன் தொடர்பு கொண்டு இதனைப் பெறுவதில் ஈடுபட்டுள்ளனர். (வ-86)

# பேசாலைக் கடலில் மூழ்கி மீனவர் ஒருவர் சாவு

மன்னார், மார்ச் 3

பேசாலைக் கடலில் மீனவர் ஒருவர் கடலில் மூழ்கி நேற்று உயிரிழந்துள்ளார்.

பேசாலை காட்டாஸ் பத்திரியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையாகிய காட்டுராஜா நல்லதம்பி (வயது-33) என்பவரே நீரில் மூழ்கி உயிரிழந்தவராவார்.

நேற்றுக் காலை 8 மணியளவில் இரண்டு படகுகளில் 7 பேர் பேசாலை கடற்பகுதியில் சுமார் 5மைல் தூரம் சென்று கடற்றொழிலில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்தவர்களில் ஒருவர் கடற்பரப்பில் தொழிலுக்கென போடப்பட்டிருந்த வலையில் சிக்குண்ட நிலையில் மீளமுடியாமல் நீரில் மூழ்கி உயிரிழந்தார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கச்சதீவு உடன்படிக்கையை ஏன் மறுபரிசீலனை செய்யமுடியாது

### வாசன் கேள்வி



ஜி.கே.வாசன்

சென்னை, மார்ச் 3

இலங்கையிடம் கச்சதீவை கையளிக்கும் வகையில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையை ஏன் மறு பரிசீலனை செய்ய முடியாது என்று இந்திய மத்திய கப்பல் துறை அமைச்சர் ஜி.கே.வாசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த உடன்படிக்கையை மறு பரிசீலனை செய்யும் நடவடிக்கைக்கு தமிழக மீனவர்கள் மட்டுமல்லாது, மக்களும் ஆதரவு தெரிவிப்பதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

கச்சதீவை மீண்டும் இந்திய நிர்வாகத்தின் கீழ் கொண்டு வர வேண்டும் என்று வெளியாகும் கோரிக்கைகள் குறித்து செய்தியாளர் களிடம் பேசியபோதே அவர் இந்த கருத்துக்களை வெளியிட்டதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கச்சதீவு உடன்படிக்கையை மறுபரிசீலனை செய்வதற்கு காத்திரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் அண்மையில் வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருந்தது. எவ்வாறாயினும் கச்சதீவு விவகாரம் ஏற்கனவே தீர்வு காணப்பட்ட ஒரு விடயம் என இந்திய மத்திய அரசு தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றது. (வ)

## சோனியா, மன்மோகனுக்கு எதிராக உடன் வழக்குப் பதிவு செய்யுங்கள்

### கச்சதீவு மீட்பு இயக்கத்தினர் பொலிஸில் முறைப்பாடு

சென்னை, மார்ச் 3

கச்சதீவு விவகாரத்தில் இலங்கையுடன் கூட்டு சதியில் ஈடுபட்டதாக சோனியா, பிரதமர் மன்மோகன்சிங், மத்திய அமைச்சர்கள் மீது வழக்குப் பதியக் கோரி இராமேஸ்வரம் பொலிஸில் கச்சதீவு மீட்பு இயக்கத்தினர் முறைப்பாடு கொடுத்தனர்.

இதுகுறித்து அந்த இயக்க முதன்மை ஒருங்கிணைப்பாளர் சீதையின் மைந்தன் தெரிவித்ததாவது:-

"கச்சத்தீவு அருகே தமிழக மீனவர்கள் மீன் பிடிக்கும் உரிமை உள்ளது. ஆனால் மீனவர்களை, இலங்கை கடற்படை தாக்குதல் நடத்தி, கைது செய்கிறது. பல கோடி மதிப்புள்ள படகுகளை மூழ்கடித்தது.

அதைத் தடுக்காமல், மத்திய அரசு வேடிக்கை பார்க்கிறது. மேலும் கச்சதீவு இந்தியாவுக்குச் சொந்தம் இல்லை; இதில் மீன்பிடிக்கும் உரிமை தமிழக மீனவர்களுக்கு இல்லை என்று மத்திய அரசு அறிவித்தது. இதனால், தமிழக மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இது தமிழக மீனவர்களுக்கு எதிராக இலங்கை அரசு தொடுத்த மறைமுக போர் ஆகும். இதை தடுத்து மீனவர்களைப் பாதுகாக்கத் தவறிய காங்கிரஸ் தலைவர் சோனியா, பிரதமர் மன்மோகன்சிங், மத்திய அமைச்சர்கள் சல் மான் குர்ஷித், ஏ.கே.அந்தோனி, எஸ்.எம்.கிருஷ்ணா, பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் மீது வழக்குப் பதியக் கோரி முறைப்பாடு கொடுத்துள்ளோம்"- என்றார். (வ)

**கச்சதீவு இந்தியாவுக்குச் சொந்தம் இல்லை; இதில் மீன்பிடிக்கும் உரிமை தமிழக மீனவர்களுக்கு இல்லை என்று மத்திய அரசு அறிவித்தது. இதனால், தமிழக மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.**



சோனியா மன்மோகன் சிங்



கோப்புப் படம்

## மீண்டும் தொழிலுக்குச் சென்றனர் தமிழக விசைப்படகு மீனவர்கள்

சென்னை, மார்ச் 3

தமிழக விசைப்படகு மீனவர்கள் நேற்று முன்தினம் தொடக்கம் தங்களின் மீன்பிடி நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பித்திருக்கின்றனர்.

கடந்த ஜனவரி மாதம் சென்னையில் இடம்பெற்ற இலங்கை மற்றும் தமிழக மீனவர்களுக்கு இடையிலான பேச்சுவார்த்தையின் போது, ஒரு மாத காலத்துக்கு விசைப் படகுகளின் மீன்பிடியை தவிர்ப்பதாக தமிழக மீனவர்களால் இணங்கப்பட்டிருந்தது.

இதன்படி கடந்த பெப்ரவரி மாதம் 13 ஆம் திகதி முதல் அவர்கள் மீன்பிடி நடவடிக்கைகளைத் தவிர்த்து வந்தனர்.

எனினும் உடன்படிக்கையின் படி மேலும் 2 வாரங்கள் இருக்கின்ற போதும், அவர்கள் குறித்த உடன்படிக்கையை மீறி நேற்று முன்தினம் தொடக்கம் மீன்பிடியில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இரண்டு தரப்புக்கும் இடையிலான நம்பிக்கையை ஏற்படுத்திக் கொள்ளும் வகையிலேயே இந்த இணக்கப்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

எனினும் இதனால் தங்களின் தொழில் பாதிக்கப்படுவதாக தெரிவித்து, தமிழக மீனவர்கள் மீண்டும் தொழிலை ஆரம்பித்திருக்கின்றனர். (வ)

## காங்கிரஸுக்கு இன்னும் இரத்தவெறி அடங்கவில்லை

### நாஞ்சில் சம்பத் காட்டம்



நாஞ்சில் சம்பத்

மதுரை, மார்ச் 3

மத்தியில் ஆளும் காங்கிரஸ் அரசுக்கு இன்னும் இரத்த வெறி அடங்கவில்லை. தமிழனுக்கு எதிரான நடவடிக்கை எடுப்பதில் தான் அவர்கள் இன்னும் குறியாக உள்ளனர் என்று அ.தி.மு.க. கொள்கை விளக்க துணைச் செயலாளர் நாஞ்சில் சம்பத் தெரிவித்துள்ளார்.

மதுரை, ஜவகர்புரத்தில் முதலமைச்சர் ஜெயலலிதாவின் பிறந்த நாள் விழா பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதில் நாஞ்சில் சம்பத் கலந்து கொண்டு பேசுகையிலேயே இவ்வாறு கூறினார். இதன் போது அவர் மேலும் கூறுகையில்,

"ராஜீவ்காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு 23 ஆண்டுகளுக்கு மேல் சிறையில் அடைக்கப்பட்டுள்ள 7 பேரை உச்சநீதிமன்ற உத்தரவின் பேரில், மாநில அரசின் அதிகாரத்தைப் பயன்படுத்தி அவர்களை விடுதலை செய்ய முதல்வர் சட்டசபையில் அறிவித்தார்.

இது அவர் செய்த சாதனைகளிலேயே முதன்மையானது. உலகை தமிழ் இனமே முதல் வரைப் பாராட்டுகிறது. ஆனாலும் மத்தியில் ஆளும் காங்கிரஸ் அரசுக்கு இன்னும் இரத்தவெறி அடங்கவில்லை. தமிழனுக்கு எதிரான நடவடிக்கை எடுப்பதில்தான் அவர்கள் குறியாக உள்ளனர். இன்னும் சில மாதங்களில் காங்கிரஸ் அரசு தூக்கி எறியப் படும்.

முதல்வரின் இந்த அறி விப்பை பா.ஜ.க. தலைவர்களாக ரவி சங்கர் பிரசாத், அருண்ஜெட்லி போன்றோர் அரசியல் நடவடிக்கை என்று குற்றம் சாட்டி வருகின்றனர்-என்றார். (வ)

## நாம் தமிழர் கட்சியினர் 44 பேர் கைது

சென்னை, மார்ச் 3

தமிழகத்தின் நெல்லையில் நேற்று காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்களைக் கண்டித்து போராட்டம் நடத்திய நாம் தமிழர் கட்சியினர் 44 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெல்லையில் நேற்று போராட்டத்தில் குதித்தனர். தென் மண்டல அமைப்பாளர் உட்பட ஏராளமானோர் சந்திப்பு ரயில் நிலையம் முன்பாகத் திரண்டனர்.

காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்களான ஜான்ஜேக்கப், பிரின்ஸ் ஆகியோரின் உருவப் பொம்மைகளை எரித்தனர்.

இதன்போது நாம் தமிழர் கட்சியை சேர்ந்த 44 பேரை பொலிஸார் கைது செய்தனர். (வ)


## மரண அறிவித்தல்

### திருமதி றோசலின் (ஜேமணி) திருச்செல்வம்



புதுக்குடியிருப்பு 8 ஆம் வட்டாரம் மந்துவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட றோசலீன் (ஜேமணி) திருச்செல்வம் நேற்று (02.03.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சவிரிமுத்து அடைக்கலம் - மாகிறேற் தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான கிறிஸ்ரோன் மரியான் - அன்னம்மா தம்பதியரின் மருமகளும் மரியான் திருச்செல்வம் (சின்னத்துரை) அவர்களின் அன்புமனைவியும் காணாமல்போன அருட்தந்தை திருச் செல்வம் ஜிம்புறோன் அடிகளார், அலோசியஸ் (பிரான்ஸ்), யாழினி (பிரான்ஸ்), கலிஸ்ரா (லண்டன்), ஜெறோட்றீகன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும் அடைக்கலம் செபஸ்தியாம்பிள்ளை (பிரான்ஸ்), மனோகரன் புஸ்பம் (புதுக்குடியிருப்பு), அடைக்கலம் யேசுதாசன் (புதுக்குடியிருப்பு) ஆகியோரின் அன்புச்சகோதரியும் சியாமளா (பிரான்ஸ்), ஜான்சன் (பிரான்ஸ்), மில்ரன் (லண்டன்), டயானா (மன்னார்) ஆகியோரின் அன்புமாமியும் அனோட், ஜெறீனா, யதுர்ஷா, ஜிம்சோன், கன்சிகா, ரதுசா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் மரியான் சூசைமுத்துவின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க நிகழ்வுகள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

TP : 077 4981204,
TP : 076 6623418

தகவல் :
மரியான் திருச்செல்வம்
(கணவர்)


## இலங்கை கலை நிகழ்ச்சிக்கும் எங்களுக்கும் தொடர்பில்லை

### விஜய் தொலைக்காட்சி தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 3

இலங்கை கலை நிகழ்ச்சிக்கும் எங்களுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்று விஜய் தொலைக்காட்சி அறிக்கை வெளியிட்டுள்ளது.

அந்தத் தொலைக்காட்சி சார்பில் நேற்று முன்தினம் சனிக்கிழமை வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:-

"தமிழர்களின் உணர்வுகளை மதிப்பதிலும், தமிழ் மண் ணின் மாண்பை நிலை நிறுத்துவதிலும் என்றென்றைக்கும் உறு தியான நிலைப்பாடுகளுடனே விஜய் தொலைக்காட்சி இருந்திருக்கிறது.

இதனாலேயே அதன் ஒவ்வொரு செயற்பாட்டுக்கும் உலகத் தமிழர்களின் அன்பும், ஆதரவும் பெருகி கொண்டே இருக்கிறது. இந்த நிலையில் விஜய் தொலைக்காட்சி குறித்து வரும் உண்மைக்கு புறம்பான சில செய்திகளுக்கு விளக்கம் அளிக்க விரும்புகிறோம்.

இலங்கையில் நடைபெறும் கலை நிகழ்ச்சிக்கும் விஜய் தொலைக்காட்சிக்கும், எந்த தொடர்புமும் இல்லை. அது மட்டுமல்ல இதற்கு முன் விஜய் தொலைக்காட்சி இலங் கையில் எந்த ஒரு கலை நிகழ்ச்சியையும் நடத்தியது இல்லை. இந்தத் தொலைக் காட்சி குறித்து இது போன்று வரும் செய்திகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை.

விஜய் தொலைக்காட்சி எப்போதும் தமிழர்களின் மன உணர்வுகளைப் புரிந்துகொண்டு பொறுப்புடன் செயற்பட்டு வந்திருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்" இவ்வாறு அந்த செய்திக் குறிப்பில் தெரி விக்கப்பட் டுள்ளது. (வ)


## மரண அறிவித்தல்

### சங்கரப்பிள்ளை நாகமுத்து (PHFO)



கைதடி தெற்கைப் பிறப்பிடமாகவும், கைதடி மத்தி குமரநகரை வதிவிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை நாகமுத்து நேற்று (02.03.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - பொன்னி தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான தம்பியன் - கதிரி தம்பதியரின் அன்பு மருமகனும் தெய்வானையின் அன்புக் கணவரும் கோகுலரோகினி, பிரணவராஜன் (ஜேர்மனி), சசிகரன் (லண்டன்), துவாரகன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கோடீஸ்வரன் (அரச முதியோர் இல்லம்), லலிதா (ஜேர்மனி), ஜெயலலிதா (லண்டன்), தாட்சாயினி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமனும் கஜிதரன் ( சுகாதாரஅமைச்சு அலுவலகம் - வடமாகாணம்), வேணுகா (உள்ளகப்பயிற்சி ஆசிரியை யாழ். தேசிய கல்வியியற்கல்லூரி), தனுஜா (மாணவி, சாவகச்சேரி இந்துக்கல்லூரி), பிரசாந்தன், தனுசன், சிந்துஜா, அஜோச், அனுசியா, அபிசன், சியானா, லிர்சன், கரிஷ் ஆகியோரின் பேரனும்ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

குமரநகர்,
கைதடி மத்தி, கைதடி

தகவல் :
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதீனிய ஒழிப்புக்கு களத்தில் இறங்குகிறது விசேட அணி

## நாளை மறுதினம் புதன்கிழமை தொடக்கம்

அச்சுவேலி, மார்ச் 3
வடபகுதியில் இருந்து பாதீனியத்தை முற்றாக இல்லாமல் அழிப்பதற்கு வடக்கு மாகாண விவசாய அமைச்சு ஏற்பாடு செய்த 400 பேர் கொண்ட விசேட அணி நாளை மறுதினம் புதன்கிழமை தொடக்கம் களத்தில் இறங்குகின்றது.

அணியில் இணைந்துள்ளவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்கள். கிராம அலுவலர் பிரிவு ரீதியில் அவர்கள் அணி திரப்பட்டுள்ளனர்.


400 பேர் கொண்ட பாதீனியம் ஒழிப்பு விசேட அணி 10 பேர் கொண்ட குழுக்களாகப் பிரிந்து ஒரே வேளையில் 40 இடங்களில் பாதீனியம் ஒழிப்புப் பணியில் ஈடுபடவுள்ளது. காலை 7 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை தினமும் ஐந்து மணித்தியாலங்கள் பணியில் ஈடுபடவுள்ளது. முதற்கட்டப் பணிகள் 15 தினங்களுக்கு நடைபெறவுள்ளது.
400 பேரைக் கொண்ட குறித்த விசேட அணியினருக்கான விசேட கூட்டம் வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் எஸ். சிவகுமார் தலைமையில் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரியில் நடைபெற்றது.
கூட்டத்தில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் த.சித்தார்த்தன், அ.பரஞ்சோதி, எஸ்.கஜதீபன், யாழ்.மாவட்ட விவசாயப்பணிப்பாளர் கி.ஸ்ரீபாலசுந்தரம் மற்றும் உயர் அதிகாரிகள் விவசாயப் போதனாசிரியர்கள் கலந்துகொண்டனர்.
உலக உணவுத் திட்டத்தின் உணவுக்கான வேலைத்திட்டத்தின் கீழ் பாதீனியம் ஒழிப்புப் பணியில் ஈடுபடுவோருக்கு அரிசி, பருப்பு, மா, மரக்கறி எண்ணெய் உள்ளிட்ட உணவுப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன.
பணியில் ஈடுபடும் தொண்டர்களுக்கு கையுறை, சுவாசத்துக்கான கவசம், தொப்பி என்பன வழங்கப்படவுள்ளது.
அணியில் இணைந்துள்ளவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்கள். கிராம அலுவலர் பிரிவு ரீதியில் அவர்கள் அணி திரப்பட்டுள்ளனர். 18- 40 வயதுக்கு உட்பட்டவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
யாழ்.மாவட்டத்தில் வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் அளவுக்கு அதிகமாக பாதீனியம் பெருகி காணப்படுவதால் முதற்கட்டப் பணிகள் வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-11)

## சேதமுற்ற நிலையில் முகமாலை வேளாங்கண்ணி ஆலயம்

பளை, மார்ச் 3
கத்தோலிக்க மக்களின் யாத்திரைத் தலங்களில் ஒன்றான முகமாலை அன்னை வேளாங்கண்ணி மாதா ஆலயம் புனரமைக்கப்படாதது குறித்து மக்கள் கவலை தெரிவித்தனர்.
போர் வேளையில் ஆலய கட்டடம், குருமார் விடுதி, றோ.க.த.க. பாடசாலை ஆகியவை முற்றாகச் சேதமடைந்து ஆலய முகப்பில் நடப்பட்டிருந்த சிலுவை சேதங்களுடன் காணப்படுகிறது.
ஆலய வளாகத்தில் காணப்பட்ட பாடசாலையை மீண்டும் இயக்குவதற்காகவும் மக்களின் வழிபாட்டுக்காகவும் ஆலய சுற்றாடல் இரண்டு வருடங்களுக்கு முன்பாக வெடிபொருள்கள் அகற்றப்பட்டுவிட்டன.
இது குறித்து படையினர் அறிவித்திருந்த போதிலும் ஆலயம் மற்றும் பாடசாலை ஆகியவை புனரமைக்கப்படாத நிலையில் பற்றைகளால் மூடப்பட்டுக் காணப்படுகின்றன. (ஓ-9)

## வலிகாமம் பாடசாலைகளில் ஆசிரியர்கள் பற்றாக்குறை

வலி.வடக்கு, மார்ச் 3
வலிகாமம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாக பாடசாலைகளின் அதிபர்களால் தெரிவிக்கப்படுகின்றது.
கடந்த மாதம் இடம்பெற்ற ஆசிரியர்களின் இடமாற்றம் காரணமாக இத்தகைய ஆசிரியர்களின் பற்றாக்குறை பாடசாலைகளில் ஏற்பட்டுள்ளதாக அதிபர்களால் குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்பட்ட நிலையில் இது குறித்து வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் சந்திரராசாவிடம் கேட்ட போது:
இடமாற்றம் செய்யப்படுவதற்கு முன்னரே வலிகாமம் கல்வி வலயத்தில் 65 ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை காணப்பட்டது. ஆனாலும் தொடர்ந்து 7 வருடங்களுக்கு மேல் ஒரு பாடசாலையில் கடமையாற்றியவர்கள் என்ற வகையில் ஆசிரியர்களின் இடமாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
இதன் காரணமாக இடமாற்றத்துக்கு முன்னர் குறிப்பிட்ட பாடசாலையில் இருந்த ஆசிரியர் ஒருவர் இடமாற்றத்துக்கு உள்ளாகிய போதிலும் அந்த இடத்துக்கு புதிய ஆசிரியர் நியமனம் செய்யப்படாமையால் இத்தகைய பற்றாக்குறை நிலைமை காணப்படுகின்றது.
வலிகாமம் கல்வி வலயத்தில் கணிதம், தகவல் தொழில்நுட்பம், சித்திரம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர்களின் பற்றாக்குறை காணப்படுவதாகவும் இது தொடர்பாக வடமாகாண கல்வி அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.- என்றார். (வ-86)



விபத்துக்குள்ளான ஓட்டோ

## தடம் புரண்டது ஓட்டோ

### அதில் பயணித்த ஐவர் காயம்

தென்மராட்சி, மார்ச் 3
வவுனியாவிலிருந்து வந்த ஓட்டோ சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியில் முன்னால் சென்ற மோட்டார் சைக்கிளுடன் மோதி தடம் புரண்டதில் அதில் பயணித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பெண்கள் 7 வயதுச் சிறுவன் உட்பட சாரதியுடன் 5 பேர் காயமடைந்தனர். ஓட்டோ பலத்த சேதமடைந்தது. இந்தச் சம்பவம் நேற்றுக் காலை சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு முன்பாக ஏ-9 வீதியில் இடம்பெற்றது.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பெண்கள் 7 வயதுச் சிறுவன் உட்பட சாரதியுடன் 5 பேர் காயமடைந்தனர். ஓட்டோ பலத்த சேதமடைந்தது.

நயினாதீவு அம்பாள் ஆலயத்துக்குச் செல்வதற்காக வந்த ஓட்டோவே தடம்புரண்டது.
வவுனியா, தோணிக்கல், சிவன் கோயில் வீதியைச் சேர்ந்த கந்தசாமி பாக்கியலட்சுமி (வயது-50) இவரது பிள்ளைகளான கந்தசாமி சுதர்சினி (வயது-24), கந்தசாமி ஜான்ஸி (வயது-7) ஓட்டோ சாரதியின் மகனான செந்தூரன் நிஷாந் (வயது-7) ஆகியோர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஓட்டோ சாரதியான வேலாயுதபிள்ளை செந்தூரன் (வயது-33) சிறுகாயங்களுக்கு உள்ளானார். (வ-9)

## இலவச மருத்துவ முகாம்

### பச்சிலைப்பள்ளி மக்களுக்காக

பளை, மார்ச் 3
பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச் சங்கத்தின் ஆதரவுடன் சாவகச்சேரி லயன்ஸ் கழகம், சாவகச்சேரி ஆதார மருத்துவமனை நீரிழிவு சிகிசை நிலையம், உரும்பிராய் லயன்ஸ் கழகம் ஆகியவை இணைந்து பச்சிலைப்பள்ளி பிரதேச மக்களுக்கான இலவச மருத்துவ பரிசோதனை முகாமை நடத்தவுள்ளனர்.
இந்தப் பரிசோதனை முகாம் எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பளை மத்திய கல்லூரியில் நடத்தப்படவுள்ளது.
கண், இரத்த அமுக்கம், நீரிழிவு, பொது மருத்துவம் ஆகிய பரிசோதனைகள் மேற் கொள்ளப்பட்டு உரிய சிகிச்சை அளிக்கப்படும்.
கண் பரிசோதனையில் பார்வையில் குறைபாடு காணப்படுவோருக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடி வழங்கப்படும்.
அத்துடன் பிரதேசத்தைச் சேர்ந்த கர்ப்பிணிப் பெண்களுக்கு சத்துணவும் வழங்கப்படவுள்ளதாக சங்கத் தலைவர் கு.ந.பாலச்சந்திரன் தெரிவித்தார். (வ-9)

## சட்டவிரோதமாக மணல் ஏற்றிய 6 டிராக்டர்கள் மடக்கிப் பிடிப்பு



கோப்புப்படம்

தென்மராட்சி, மார்ச் 3
கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலாவிப் பகுதி அரச காணியொன்றில் சட்டவிரோதமாக மணல் அகழ்ந்து எடுத்துச் சென்ற 6 டிராக்டர்களை சாவகச்சேரி பொலிஸார் மடக் கிப் பிடித்து அவற்றின் சாரதி கள் உட்பட 14 பேரை கைது செய்தனர்.
அந்தப் பகுதி மக்கள் யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விமல சேனவுக்கு முறையிட்டதை அடுத்து அவரின் பணிப்பின் பேரில் சாவகச்சேரி பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று கையும் மெய்யுமாகப் பிடித்தனர்.
பிடிக்கப்பட்ட டிராக்டர்களையும் சாரதிகளையும் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர்.

6 டிராக்டர்களை சாவகச்சேரி பொலிஸார் மடக்கிப் பிடித்து அவற்றின் சாரதிகளைக் கைது செய்தனர்.

தினமும் மணல் அகழ்வு இடம்பெறுவதாக அந்தப் பகுதி மக்கள் கொடிகாமம் பொலிஸாருக்கு தகவல் வழங்கியும் எந்தவித நடவடிக்கை எடுக்கப்படாததால் பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு முறையிட்டதாகத் தெரிய வருகிறது.
இதேவேளை கடந்த மாதம் விசாரணை ஒன்றுக்காகச் சென்ற கொடிகாமம் பொலிஸ் உத்தியோகத்தர்களை சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட பத்துக்கு மேற்பட்டோர் பொலிஸாரைத் தாக்க முற்பட்டது தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காததால் பொலிஸார் அங்கு செல்ல மறுத்து வருவதாக மற்றொரு தகவல் தெரிவித்தது. (வ-9)

## போக்குவரத்துப் படியை உரிய முறையில் வழங்குக

### வலி.தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர்கள் கோரிக்கை

வலி.தென்மேற்கு, மார்ச் 3
வலி.தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர்களின் போக்குவரத்துப் படியாக வழங்கப்படும் மாதாந்தக் கொடுப்பனவு ஒழுங்காக வழங்கப்படுவதில்லை. இது குறித்து விசனம் தெரிவித்துள்ள உறுப்பினர்கள் கொடுப்பனவை உரிய காலத்தில் வழங்குவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு செயலாளரைக் கோரியுள்ளனர்.
போக்குவரத்துப் படியாக அரசால் தவிசாளருக்கு 10 ஆயிரம் ரூபாவும், உப தவிசாளருக்கு 7 ஆயிரத்து 500 ரூபாவும் மற்றும் சாதாரண உறுப்பினர்களுக்கு 5 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படுகின்றது.
வலி.தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவு ஒழுங்காக அந்தந்த மாதங்களில் வழங்கப்படுவதில்லை. 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்துக்குரிய கொடுப்பனவு பெப்ரவரி மாதம் முடிவடைந்த நிலையிலும் வழங்கப்படவில்லை.
மாதந்தோறும் 5 ஆம் திகதிக்கு முன்பு வழங்கப்பட்டு வந்த குறித்த கொடுப்பனவு தற்போது வழங்கப்படாமை குறித்து உறுப்பினர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (வ-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கிரஸை வீழ்த்தவே பா.ஜ.கவுடன் கூட்டணி

## ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ தெரிவிப்பு

சென்னை, மார்ச் 3

காங்கிரஸ் கட்சியை வீழ்த்தவே பா.ஜ.கவுடன் கூட்டணி அமைத்தோம். மோடி தலைமையிலான பாரதிய ஜனதாக் கூட்டணி எதிர்வரும் நாடாளு மன்றத் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியமைக்கும் என்று தெரிவித்துள்ளார் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ.

சென்னையில் நடைபெற்ற பொது நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மோடி தலைமையில், மத சார்பற்ற, ஊழலற்ற, சமூக நீதிகொண்ட ஆட்சி அமையும் என்று நாம் நம்புகின்றோம். இலங்கையில் தமிழர்கள் வஞ்சிக்கப்பட்டதற்கு தற்போதுள்ள காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசே காரணம். காங்கிரஸ் அரசை வீழ்த்தவே நாம் பா.ஜ.கவுடன் கூட்டணி அமைத்துள்ளோம். இந்தியாவில் மோடி அரசு உருவாக வேண்டும் என்றே ஈழத்தமிழர்களும் விரும்பு கின்றனர்" - என்று தெரிவித்துள்ளார். (ற)



"இலங்கைத் தமிழர்களை வஞ்சித்தது காங்கிரஸ் கட்சி தலைமையிலான இந்திய அரசு. அவர்களை ஆட்சியில் இருந்து அகற்றவே பா.ஜ.க. கூட்டணி குறித்து நாம் ஆலோசித்தோம். ஈழத் தமிழர்களும் ஆட்சி மாற்றத்தையே விரும்புகின்றனர். மோடி தலைமையிலான அரசு அமைவதை வரவேற்கின்றார்கள்"

*- வைகோ*



*முன்னாள் இராணுவத் தளபதி பி.கே.சிங் மற்றும் பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர் ராஜ்நாத் சிங்.*

## பா.ஜ.கவில் முன்னாள் தளபதி

புதுடில்லி, மார்ச் 3

இந்திய முன்னாள் இராணுவத் தளபதி வி.கே.சிங் பாரதிய ஜனதா கட்சியில் முறைப்படி இணைந்து கொண்டார்.

புதுடில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வி.கே.சிங் மற்றும் ஓய்வு பெற்ற இராணுவத்தினர் பலர் பாரதிய ஜனதா தலைவர் ராஜ்நாத் சிங் முன்னிலையில் அந்தக்கட்சியில் இணைந்தனர்.

பாரதிய ஜனதாக் கட்சியில் முறைப்படி இணைந்தபின்னர் கருத்துத் தெரிவித்த வி.கே. சிங், "இராணுவத்தில் பணி புரிந்து நாட்டுக்குச் செய்த சேவையைஅரசியலில்தொடர்ந்து செய்யப் போகின்றேன்" என்று தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு இராணுவத் தலைமை தளபதி பதவியில் இருந்து வி.கே.சிங் ஓய்வு பெற்றார். இந்திய அரசியல் களத்தில் இராணுவத் தளபதியாக இருந்த ஒருவர், அரசியலில் ஈடுபடுவது இதுவே முதல் முறையாகும். (ற)

## கூட்டணிக்கு அவகாசம் இருக்கின்றது

### மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன் கருத்து

சென்னை, மார்ச் 3

இந்திய நாடாளுமன்றத் தேர்தலுக்கான திகதி இதுவரை அறிவிக்கப்படாத நிலையில் கூட்டணி அமைப்பதற்கு கால அவகாசம் இருக்கின்றது என்று தெரிவித்துள்ளார் மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,



*மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன்.*

"நாடாளுமன்றத் தேர்தலுக்கான திகதியை தேர்தல் ஆணையம் இன்னமும் அறிவிக்கவில்லை. எனவே தேர்தல் கூட்டணி குறித்து நாம் அவசரப்படத் தேவையில்லை. மக்களின் நம்பிக்கையைப் பெறும் வகையில் ஒரு வெற்றிக்கூட்டணிஒன்றைகாங்கிரஸ் கட்சி அமைக்கும். அது குறித்து விரைவில் அறிவிக்கப்படும்" என்று தெரிவித்துள்ளார். (ற)

## பா.ஜ.கட்சியின் மூத்த தலைவர் பங்காரு லட்சுமணன் சாவு

ஐதராபாத், மார்ச் 3

பாரதிய ஜனதா கட்சியின் முன்னாள் தலைவர் பங்காரு லட்சுமணன் காலமானார். 75 வயதான பங்காரு லட்சுமணன் நீண்ட காலமாக நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். நேற்று சிகிச்சை பயனின்றி அவர் உயிரிழந்தார். இவர் 2000 மற்றும் 2001ஆம்ஆண்டுகளில் பா.ஜ.க. தலைவராகவும், 1999 ஆம் ஆண்டு முதல் 2000 ஆம் ஆண்டு வரை இந்திய ரயில்வே அமைச்சராகவும் பதவி வகித்திருந்தார். (ற)

## பக்கச் சார்பான மோடி தலைவராக முடியாது



*சிதம்பரம்*

சிவகங்கை, மார்ச் 3

ஒரு சமூகத்தைச் சார்ந்து இருக்கும் மோடி பன்முகம் கொண்ட இந்தியாவுக்கு எவ்வாறு தலைமை ஏற்க முடியும்? என்று கேள்வி எழுப்பியுள்ளார் இந்திய மத்திய அமைச்சர் ப.சிதம்பரம்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,

"எல்லோருக்கும் அடையாளம் இருக்கிறது. நமது நாட்டில் மட்டும் தான் சாதி எனும் அடையாளமும் சேர்ந்து இருக்கிறது. எல்லோரும் அனைத்துத் தொழில்களையும் செய்யலாம் என்ற நிலை வந்தால் இந்த வேற்றுமைகள் இருக்காது. இந்தியாவில் இந்த அடக்கு முறைக்காகத் தொடர்ந்து போராடி வந்த இயக்கம் காங்கிரஸ் இயக்கம். அதை மறுக்க முடியாது.

ஊங்குவாக்களியுங்கள்சீனாவை மிரட்டுவேன், நான் பிரதமரானால் கச்சதீவை மீட்பேன் என்று நரேந்திர மோடி கூறுகிறார். நான் கேட்கிறேன் ஆர்.எஸ்.எஸ். அமைப்பில் இருந்து பாரதிய ஜனதா கட்சியாக பரிணாமித்தீர்களோ இதுவரை அனைத்து ஆண்டுகளைப் பாருங்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்ன செயதுள்ளீர்கள். தாழ்த்தப்பட்ட மக்களே நீங்கள் சிந்தித்து பாருங்கள் அவர்கள் ஆட்சிக்கு வந்தால் நீங்கள் பாதுகாப்பாக இருக்க முடியுமா?

பா.ஜ கட்சியின் பிரதம வேட்பாளராக இருந்து கொண்டு ஒரு மாநிலத்தை மட்டுமே பற்றி பேசிக் கொண்டு ஒரு சமுகத்தை மட்டுமே சார்ந்து கொண்டு பல முகத்தன்மை, பல மத கோட்பாடு என அனைத்திலும் பன்முகங்களை கொண்ட இந்தியாவிற்கு எப்படி தலைமை தாங்க முடியும்?" என்று தெரிவித்துள்ளார். (ற)



கடந்த வாரம் மும்பையில் இடம்பெற்ற நீர்மூழ்கிக் கப்பல் விபத்தில் இரு இந்தியக் கடற்படையினர் உயிரிழந்தனர். அவர்களின் அஞ்சலி நிகழ்வுகள் குன்னூர் கடற்படைத் தளத்தில் இடம்பெற்றன. உயிரிழந்த கடற்படையினரின் உடல்களுக்கு இராணுவ மரியாதையுடன் இறுதி அஞ்சலி செலுத்தப்பட்டது.

## கொன்றுவிட்டு மன்னிப்பு கேட்கின்றனர்

*- முலாயம் சிங்*



அலாகாபாத், மார்ச் 3

குஜராத்தில் நடந்த கலவரத்தின்போது முஸ்லிம்களைக் கொன்று விட்டு தற்போது பா.ஜ.கவினர் மன்னிப்புக் கேட்கின்றனர் என்று விமர்சித்துள்ளார் முலாயம் சிங் யாதவ்.

உத்தரபிரதேசத்தில் இடம் பெற்ற பரப்புரைக் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"லக்னோவில் நடைபெறும் பா.ஜ.க. பொதுக்கூட்டத்தை விட நமது கூட்டம் மிகவும் பெரியது. குஜராத்தில் கலவரம் நடந்த போது படுகொலைகளைத் தடுக்க அந்த மாநிலத்தின் முதலமைச்சராக இருந்த நரேந்திர மோடி தவறிவிட்டார். பா.ஜ.கவினர் முதலில் முஸ்லிம் மக்களைக் கொலை செய்தனர். தற்போது மன்னிப்பு கேட்கின்றனர். முஸ்லிம்களுக்கு அநியாயம் இழைக்கப்படுவதை சமாஜ்வாடி கட்சி பார்த்துக் கொண்டு இருக்காது. குஜராத் கலவரம் நடந்தபோது நான் அங்கு எந்த ஒரு பாதுகாப்பும் இல்லாமல் சென்றேன். அது என்னுடையை தைரியத்தை வெளிப்படுத்தியது" - என்று தெரிவித்துள்ளார். (ற)

## ஸ்டாலினை கைகூப்பித் தொழும் நரேந்திர மோடி சர்ச்சையைக் கிளப்பியது தி.மு.கவின் சுவரொட்டி

சென்னை, மார்ச் 3

தி.மு.க. பொருளாளர் மு.க. ஸ்டாலினின் பிறந்ததினத்தை முன்னிட்டு அவரை நரேந்திர மோடி வணங்குவது போன்ற சுவரொட்டிகள்தி.மு.க. ஆதரவாளர்களால் ஒட்டப்பட்டது. அதையடுத்து அதுகுறித்து பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவு செய்துள்ளது பாரதிய ஜனதாக் கட்சி.

கடந்த சனிக்கிழமை மு.க.ஸ்டாலின் பிறந்ததினம் கொண்டாடப்பட்டது. அதையொட்டி தி.மு.கவின் மதுரை இளைஞரணியினர்ஸ்டாலினைவாழ்த்தி சுவரொட்டிகள் ஒட்டினர். அதில் மு.க. ஸ்டாலினைப் பார்த்து பிரதமர் மன்மோகன்சிங், பா.ஜ.க. பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி, காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, துணைத் தலைவர் ராகுல் காந்தி ஆகியோர் சிரம் தாழ்த்தி வணங்குவது போன்ற படங்கள் அச்சிடப்பட்டிருந்தன.

அதையடுத்து குறித்த சுவரொட்டிகளுக்குப் பா.ஜ.கவினர் மத்தியில் கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. நரேந்திர மோடியை அவமதிக்கும்வகையில் குறித்த சுவரொட்டி உள்ளது என்று தெரிவித்து பா.ஜ.க. பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவு செய்துள்ளது.




*பா.ஜ.கவினரை கொதிக்க வைத்த சுவரொட்டி*

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த பொலிஸார், "பா.ஜ.கவின் முறைப்பாடு குறித்து விசாரணை நடத்தி வருகின்றோம். அதில் உள்ள தி.மு.க. இளைஞரணி அமைப்பாளரின் பெயரும், படமும் உள்ளதால் இதுகுறித்து அவரிடம் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளோம்" - என்று தெரிவித்துள்ளனர். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணில்பட்டவர் எல்லாம் வெட்டிச்சாய்ப்பு

## *சீன ரயில் நிலையத்தில் வெறியாட்டம்; 30 பேர் சாவு; 130 பேர் படுகாயம்*

பீஜிங், மார்ச் 3
சீனாவின் தென்கிழக்குப் பகுதியில் உள்ள குன்மிங் நகரில் உள்ள ரயில் நிலையமொன்றில் நின்றிருந்த பொதுமக்கள் மீது அடையாளம் தெரியாத கும்பல் ஒன்று கத்திகளால் சரமாரியாகத் தாக்குதல் நடத்தியுள்ளது. அதில் 30 பேர் உயிரிழந்துள்ளனர். 130க்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர்.



ரயில் நிலையத்தை சுற்றிவளைக்கும் பொலிஸார்

உள்ளூர் நேரப்படி இரவு சுமார் 9 மணியளவில் இந்த கொலைவெறித் தாக்குதல் நடந்துள்ளது. சுமார் 10 பேர் கொண்ட இனந்தெரியாத குழுவொன்றே இந்தத் தாக்குதலை மேற்கொண்டது என்று சம்பவத்தை நேரில் கண்டவர்கள் கூறுகின்றனர். தாக்குதல் நடத்தியவர்கள் கறுப்பு உடை அணிந்து காணப்பட்டுள்ளனர். ரயில் நிலையத்தில் நின்றிருந்த பொதுமக்களைத் துரத்தித் துரத்தி அவர்கள் வெட்டிச் சாய்த்துள்ளனர். வெட்டுக் காயங்களுக்கு உள்ளான மக்கள் அலறியவாறு ரயில் நிலையம் எங்கும் ஓடினர்.
குறித்த சம்பவத்தில் 30 பேர் உயிரிழந்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன், 130க்கும் அதிகமானவர்கள் படுகாயங்களுடன் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று மருத்துவமனை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.
சம்பவம் குறித்து உடனடியாகப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. குறித்த ரயில் நிலையத்தைச் சுற்றிவளைத்த பொலிஸார் தாக்குதல் நடத்தியவர்களில் 5 பேரைச் சுட்டுக் கொன்றுள்ளனர் என்று கூறப்படுகின்றது. அந்தக் கும்பலைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று அந்நாட்டு ஊடகங்கள் தகவல் வெளியிட்டபோதும் அதனை உறுதிப்படுத்த முடியவில்லை. இது முன்கூட்டியே திட்டமிடப்பட்ட பயங்கரவாதச் செயற்பாடு என்று பொலிஸார் கூறுகின்றனர். இதுவரை இந்தத் தாக்குதலுக்கு எந்த அமைப்பும் உரிமைகோரவில்லை. எனினும் இந்தச் சம்பவத்துக்கும் பிரிவினைவாதிகளுக்கும் தொடர்பு இருக்கலாம் என்று கூறப்படுகின்றது. தற்போது குறித்த பகுதி சுற்றி வளைக்கப்பட்டு பொலிஸார் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர். (ற)



உறவுகளைத் தேடும் மக்கள்

## ஆபிரிக்காவில் அமைதி திரும்பும்

பரிஸ், மார்ச் 3
மத்திய ஆபிரிக்கக் குடியரசில் தீவிரவாதிகளை ஒடுக்கி அமைதி திரும்பச் செய்வதற்கான பணிகளில் பிரான்ஸ் படையினர் அர்ப்பணிப்புடன் செயற்படுவார்கள் என்று தெரிவித்துள்ளார் பிரான்ஸ் ஜனாதிபதி பிரான்சுவா ஹொலாந்த்.
மத்திய ஆபிரிக்கக் குடியரசின் தலைநகர் பாங்கீயில் அந்நாட்டின் இடைக்கால ஜனாதிபதி கேத்தரின் சம்பான் பான்சாலைச் சந்தித்துக் கலந்துரையாடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். சந்திப்பின் பின்னர் மத்திய ஆபிரிக்கக் குடியரசில் நிலைகொண் டுள்ள பிரான்ஸ் படையினர் மத்தியிலும் பிரான்சுவா உரையாற்றியுள்ளார். (ற)



பிரேஸிலின் புகழ்பெற்ற சம்பா திருவிழா நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியுள்ளது. ஆண்டுதோறும் நடைபெறும் இந்த விழாவில் ஆயிரக்கணக்கான நடனக் கலைஞர்கள் கலந்துகொண்டுள்ளனர்.

## சோகத்தில் முடிந்த கேளிக்கை நிகழ்ச்சி

லண்டன், மார்ச் 3
பொலிவியாவில் கேளிக்கை நிகழ்ச்சி ஒன்றில் ஏற்பட்ட விபத்தால் 4 பேர் உயிரிழந் துள்ளனர். 60க்கும் மேற்பட்டோர் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.



மீட்புப் பணியில் பொலிஸார்

பொலிவியாவின் தென்மேற்கு பகுதியில் இருக்கும் ஒரூரோ நகரில் கேளிக்கை திருவிழா தொடக்க விழா ஒன்றை முன்னிட்டுபிரம்மாண்டபேரணி நடந்தது. அந்தப் பேரணியில் 35 ஆயிரம் நடன கலைஞர்களும், 6 ஆயிரம் இசைக் கலைஞர்களும் கலந்து கொண்டனர். அதைக் கண்டுகளிக்க 3 லட்சம் பேர் திரண்டனர்.
கோலாகலமாகப் பேரணி சென்று கொண்டிருந்த போது ஒரு பாலம் திடீரென்று இடிந்து விழுந்தது. அதில் இசைக் கலைஞர்கள் உட்பட 4 பேர் உயிரிழந்தனர். 60க்கும் மேற்பட்டோர் படுகாயங்களுக்கு உள்ளாகினர்.அதனையடுத்து பேரணி வேறு வழியாக திருப்பப்பட்டது.
குறித்த சம்பவம் தொடர்பாக உடனடியாக விசாரணை மேற்கொண்டு அறிக்கையிடுமாறு பொலிவிய ஜனாதிபதி பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (ற)


## அமெரிக்காவில் வெள்ள அபாயம்

நியூயோர்க், மார்ச் 3
அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் பெய்து வரும் கன மழை காரணமாக வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
அசுஸா, மோன்ரோவியா போன்ற நகரங்களில் உள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டு வருகின்றனர். அதேவேளை, பசுபிக் புயல்கள் உருவாகலாம் என்று அந்நாட்டு தேசிய வானிலை சேவை மையம் எச்சரிக்கை விடுத்துள்ளதுடன் கடலோர பகுதிகளில் வெள்ள பாதிப்பு அதிகமாக இருக்கும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.
கடும் காற்றுக் காரணமாக கடல் அலைகள் அதிக உயரத்திற்கு எழுவதாகவும், கடலோர தடுப்புகளையும் மீறி வீதிகளில் கடல்நீர் புகுந்துள்ளது. (ற)

## உக்ரைனுக்கு ரஷ்ய இராணுவம்

### *அந்நாட்டு நாடாளுமன்றம் அனுமதி*

மொஸ்கோ, மார்ச் 3
உக்ரைனுக்கு ரஷ்ய இராணுவத்தினரை அனுப்புவதற்கு ரஷ்யாவின் மேல்சபை ஒப்புதல் வழங்கியுள்ளது.
உக்ரைனில் நிலவும் அரசியல் சூழ்நிலை குறித்து விவாதிப்பதற்காக ரஷ்ய நாடாளுமன்றத்தின் அவசர கூட்டம் கூட்டப்பட்டது. அங்கு இடம்பெற்ற விவாதங்களின் முடிவிலேயே உக்ரைனுக்கு படைகளை அனுப்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.



*உக்ரைன் விடயம் தொடர்பாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியுள்ளார் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா.*

அதன்படி உக்ரைனின் க்ரிமியா மாகாணத்துக்கு ரஷ்ய இராணுவத்தை அனுப்புவதற்கு ஜனாதிபதி புடினுக்கு முழு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்று அந்த நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர் விக்டர் ஆஃஜெராவ் தெரிவித்துள்ளார். இந்த தீர்மானத்தை ரஷ்ய மேலவையில் உள்ள 87 உறுப்பினர்களும் ஆதரித்து வாக்களித்துள்ளனர் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.
அதேவேளை, ரஷ்யா உக்ரைன் நாட்டு விவகாரத்தில் அத்துமீறியுள்ளது என்று அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கண்டனம் தெரிவித்தார். இந்த நடவடிக்கைக்கான பின்விளைவுகளை சந்திக்க வேண்டியிருக்கும் எனவும் அவர் ரஷ்யாவிற்கு எச்சரிக்கை விடுத்தார்.
இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள ஐக்கிய நாடுகள் சபை இந்த விவகாரத்தை முறையான பேச்சுக்கள் மூலம் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளது. (ற)

## எதிர்க்கட்சித் தலைவருக்கு ஆதரவாகப் போராட்டம்

### *வெனிசுவேலா தலைநகர் முடங்கியது*

கராக்கஸ், மார்ச் 3
எதிர்க்கட்சித் தலைவரை விடுவிக்குமாறு கோரி வெனிசுவேலா தலைநகர் கராக்கஸில் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
சிறையில் உள்ள எதிர்க்கட்சி தலைவர் லியோபோல்டோ லோபெஸுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் சிறையை நோக்கி நூற்றுக்கணக்கான அவரது ஆதரவாளர்கள் முன்னேறி வருகின்றனர். லியோபோல்டோ லோபெஸை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று அவர்கள் கோஷங்களை எழுப்பினர்.
அரசுக்கெதிரான போராட்டங்களை மேற்கொள்பவர்களை ஜனாதிபதி மதுரோவின் நியாயமற்ற முறையில் அடக்குகின்றார் என்று போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். இந்தப் பிரமாண்டமான பேரணியை அடுத்து சிறைச்சாலை வளாகத்தை சுற்றி பாதுகாப்புத் தரப்பினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.
கடந்த ஒரு மாத காலமாக நடைபெற்று வரும் போராட்டங்களினால் இதுவரை 17 பேர் உயிரிழந்தனர்.
அதேவேளை, தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் போராட்டங்களால் கராக்கஸில் உள்ள மக்களின் இயல்பு நிலை முற்றாகப் பதிக்கப்பட்டுள்ளது. அங்குள்ள மக்கள் தமது அத்தியாவசியப் பொருள்களுக்குப் பெரிதும் திண்டாடுகின்றனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)



வெனிசுவேலா அரசுக்கெதிரான பேரணியில் பொதுமக்கள்

## 60 ஆண்டுகளாக நீடிக்கும் அணுக் கதிர்வீச்சு

நியூயோர்க், மார்ச் 3
அமெரிக்காவின் மார்ஷல் தீவுகளில் உள்ள பிகினி அடொல் என்னுமிடத்தில் கடந்த 60 ஆண்டுகளாக அணுக்கதிர்வீச்சின் தாக்கம் காணப்படுகின்றது.
இந்த இடத்தில்தான் அமெரிக்கா 1954ஆம் ஆண்டு மார்ச் 1 ஆம் திகதி தனது அணுகுண்டுச் சோதனையை நடத்தியது. சோதனை செய்யப்பட்ட அணுகுண்டு, ஜப்பானின் ஹீரோஷிமா நகரில் வீசிய அணுகுண்டை விடவும் ஆயிரம் மடங்கு சக்தி வாய்ந்தது. அந்தச் சோதனையால் மார்ஷல் தீவுகளும் அதனைச் சூழ்ந்த பிரதேசங்களும் கதிர்வீச்சு அபாயத்தால் பாதிக்கப்பட்டன.
அணுகுண்டு சோதனைக்கு நட்டஈடாக அமெரிக்கா மார்ஷல் தீவுகளுக்கு 150 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்கியிருந்தது.
அங்கு வசித்த மக்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். இன்றுவரை தமது இருப்பிடங்களை விட்டு வேறு இடங்களிலேயே அவர்கள் வசித்து வருகின்றனர். அணுகுண்டு சோதனையால் தமது வாழ்வும், தமது சந்ததியின் எதிர்காலமும் பாதிக்கப்பட்டுள்ளது என்று அவர்கள் கவலை வெளியிடுகின்றனர்.
அங்கு அணுகுண்டு சோதனை நடத்திய 60ஆவது ஆண்டு நினைவு நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் கொண்டாடப்பட்டுள்ளன. 60 ஆண்டுகள் கழிந்துள்ள நிலையிலும் அங்கு இன்னும் கதிர்வீச்சு அபாயம் இருக்கின்றது என்று கூறப்படுகின்றது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனித உரிமை மீறல்கள் நாட்டில் இடம்பெறவில்லை

### பிரதி அமைச்சர் சரத் அமுனுகம இந்திய மாநாட்டில் தெரிவிப்பு



சரத் அமுனுகம

கொழும்பு,மார்ச் 3
இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான போரின் இறுதிக் காலப்பகுதியில் எந்தவொரு மனித உரிமை மீறல்களும் இடம்பெறவில்லை என்று பிரதி அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்தார்.
இந்தியாவின் மத்திய பிரதேசத்தில் இடம்பெற்ற சர்வதேச மாநாடு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.
இலங்கையின் போர்க் குற்றங்கள் குறித்து ஐக்கிய நாடுகள் சபை முன்வைக்கும் விசாரணையை மறுத்த பிரதி அமைச்சர், இலங்கை போர்க் குற்றங்களில் ஈடுபட்ட வில்லை என்று கூறினார்.
புலம்பெயர் தமிழர்கள் அரசை வீழ்த்துவதற்காக குற்றஞ் சாட்டுகின்றனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# தமிழர் பிரதேசங்களில் மனிதப் புதைகுழிகள்

### இவ்வாறான சம்பவங்கள் படையினர் குடியிருந்த பகுதியில்தான் என்கிறார் மாகாணசபை உறுப்பினர்

மட்டக்களப்பு,மார்ச் 3
தமிழர் பிரதேசங்கள் எல் லாம் இன்று படுகொலை செய்து புதைக்கப்பட்ட மண்டையோடு எலும்புக்கூடு நிறைந்த பூமியாகக் காணப்படுகின்றது என்று கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.



கோவிந்தன் கருணாகரம்

மனிதப்புதைகுழிகள் வெளிப்பட்டு வருகின்றமை குறித்துக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
சாத்வீக வழிமுறையூடாக தமிழர் தம் வாழ்வுரிமையை பெறலாம் என்ற கருத்தியலில் வாழ்ந்த தந்தை செல்வா சாத்வீக வழிமுறைகள் பெரும்பான்மை இனவாதத்தின் முன்னால் தோற்றுப் போன நிலைமையில் தான், இந்த நாட்டு தமிழர்களைக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும் என்று கூறினார்.
அதன் பின்பு தமிழர்களின் தலைவிதி ஆயுதப் போராட்டத்தால் தீர்மானிக்கப்பட்டது. அதுவும் முள்ளிவாய்க்காலோடு முடிவுக்கு வந்தது. அதன் பின்பு தமிழர் தம் வாழ்வியலை சர்வதேசம், புலம்பெயர் சமூகம், தமிழ்தேசியக் கூட்டமைப்பு என்பன தீர்மானிக்கும் ஒரு புள்ளியில் நின்று நிலைகொண்டிருக்கிறது.
படையினர் குடியிருந்த புனித பூமிகள் எல்லாம் தமிழரது புதைகுழிகளாக்கப்பட்டுள்ளதாகவே காட்டுகின்றன.
திருக்கேதீஸ்வர புதைகுழியும், திருக்கோணேஸ்வர புதைகுழியும் காலமறிந்து கடவுள் காட்சியாக வெளிப்படுத்துவது கடந்த போரால் நடைபெற்ற கொடூரங்களின் உச்சக்கட்டம் என்பதாகவே நான் கருதுகின்றேன்-என்றார். (ச)

## காணாமற் போனவர்களின் குடும்பங்களுக்கு சான்றிதழ்

### புதிய சட்டத்தை அறிமுகம் செய்யத் தயாராகிறது அரசு

கொழும்பு,மார்ச் 3
காணாமற்போனவர்களின் குடும்பங்களுக்கு உதவியளிக்கக் கூடிய வகையில் புதிய சட்டமொன்றை அரசு அறிமுகம் செய்யவுள்ளது.
காணாமற்போனவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு விசேட சான்றிதழ் ஒன்றை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
காணாமற் போனவர்கள் உயிரிழந்து விட்டனர் என்று வழங்கப்படும் மரணச் சான்றிதழை ஏற்றுக்கொள்ள மறுக்கும் நெருங்கிய உறவினர்களுக்கு காணாமற் போயுள்ளதாகவே அறிக்கை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.
காணாமற் போய்விட்டதாகத் தெரிவித்து இதுவரையில் இலங்கையில் எவருக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.
உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு அமைவாக இந்த சான்றிதழ் வழங்கப்பட உள்ளது.
காணாமற் போனவர்களுக்காக அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு இதுவரை காலமும் மரணச் சான்றிதழ் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. (ச)

**காணாமற் போய்விட்டதாகத் தெரிவித்து இதுவரையில் இலங்கையில் எவருக்கும் சான்றிதழ் வழங்கப்படவில்லை**



தேசிய காங்கிரஸிலிருந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்க்குத் தாவிய கிழக்கு மாகாண சபையின் முன்னாள் தவிசாளர் எச்.எம்.எம். பாயிஸ்க்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அங்கத்துவப் பணிப்பாளர் பதவி வழங்கப்பட்டுள்ளது. பதவியேற்பு வைபவத்தில் பாயிஸ்க்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் கைலாகு கொடுத்து வாழ்த்துவதை படத்தில் காணலாம். (ஒ-10)

## தேர்தல் சட்டத்தை மீறும் அமைச்சர்கள்

கொழும்பு,மார்ச் 3
அமைச்சர்கள் தேர்தல் சட்டங்களை மீறிச் செயற்பட்டு வருகின்றனர் என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் குற்றம் சுமத்தியுள்ளன.
தெற்கில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் பல்வேறு தேர்தல் அலுவலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் தெரிவித்தன.
தென் மாகாணத்தில் பல்வேறு அரசியல்வாதிகள் மக்களுக்கு தேர்தல் கால நிவாரணங்களை வழங்கி வருகின்றன.
அமைச்சர்கள் பல்வேறு வழிகளில் தேர்தல் சட்டங்களை மீறிச் செயற்பட்டு வருகின்றனர் என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் தெரிவித்தன. (ச)

## குளவி கொட்டி 22 பேர் பாதிப்பு

மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காட்மோர் தோட்டத்தில் தேயிலைக் கொழுந்து பறித் துக்கொண்டிருந்தபோது 22 பேர் குளவிக் கொட்டுக்குள்ளாகியுள்ளனர்.
அவர்களில் 15 பேர் தொடர்ந்து மஸ்கெலியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றுள்ளது.

## வலயக்கல்விப் பணிப்பாளர் நியமனத்தில் புறக்கணிப்பு


### ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

அம்பாறை, சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் நியமனத்தில் சிரேஷ்ட அதிகாரிகள் மூவர் புறக்கணிக்கப்பட்டு அரசியல் செல்வாக்கில் நியமனம் இடம்பெற்றுள்ளது என்று இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.
சம்மாந்துறை வலயக் கல்விப்பணிப்பாளர் நியமனத்தில் சிரேஷ்ட அதிகாரிகள் புறக்கணிக்கப்பட்டுள்ளதைக் கண்டித்து இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மத்தியகுழு உறுப்பினர் பி. உதயரூபன் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிக்கப்பட்டுள்ளது.
இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-
இந்த விடயத்தில் கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக் குழு வெளிப்படைத்தன்மையான நியமிப்பை மேற்கொள்ளவில்லை.
சம்மாந்துறை வலய கல்விப் பணிப்பாளரின் நியமனமானது சட்டவிதிகளை மதித்தல், ஜனநாயக சமூகமொன்றிலுள்ள மனித உரிமைகளைப் பாதுகாத்தல் போன்றவற்றை நிச்சயப்படுத்துவதை வேண்டியுள்ளது.
நல்ல அரசாட்சிக்கு எந்த வடிவத்திலுள்ள பாரபட்சங்களையும் ஏற்றுக் கொள்வதில்லை, பாரபட்சங்கள் மனித உரிமை மீறல்களுக்கும் வழி வகுத்து நிற்கின்றது.
எனவே இந்த விடயத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் நியாயமான காரணங்களை முன்வைத்து பொறுப்புக் கூற வேண்டும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## முகநூலைத் தடை செய்தால் அரசுக்கு எதிராகப் போராட்டம்

### ரணில் விக்கிரமசிங்க எச்சரிக்கை

கொழும்பு,மார்ச் 3
இணைய சமூக வலையமைப் பான முகநூலை அரசு தடை செய்தால், வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்த நேரிடும் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
மக்களை அணி திரட்டி வீதியில் இறங்கி முகநூல் தடைக்கு எதிராக போராட்டம் நடத்தப்படும் என்று அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.
அண்மைக் காலமாக இடம் பெற்ற சில சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு சமூக வலையமைப்புக்களை அரசு தடை செய்ய முயற்சித்து வருகின்றது என்று அவர் கூறினார்.



ரணில் விக்கிரமசிங்க

எனினும் இந்த முயற்சியை ஐக்கிய தேசியக்கட்சி ஏற்றுக் கொள்ளாது என்று அவர் சுட்டிக்காட்டினார்.
ஊடகங்கள் அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டு வரும் நிலையில் அரசின் ஊழல் மோசடிகளை வெளிப்படுத்தும் இவ்வாறான சமூக வலைமைப்புக்களை கட்டுப்படுத்துவது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

**மக்களை அணி திரட்டி வீதியில் இறங்கி முகநூல் தடைக்கு எதிராக போராட்டம் நடத்தப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூங்காவுக்கு ஒதுக்கிய காணியை அபகரிக்க முயன்றார் தனிநபர்

## அரசியல் செல்வாக்கை தகர்த்தெறிந்தது மன்னார் நகரசபை

மன்னார்.மார்ச் 3

மன்னார் சாவற்கட்டு 30 வீட்டுத்திட்ட பகுதியில் பொது தேவைகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த சுமார் ஒரு ஏக்கர் காணியை நபரொருவர் அபகரிக்க முற்பட்ட போது மன்னார் நகர சபையினர் தடுத்து நிறுத் தினர். அரசி யல் செல்வாக்கை பயன்படுத்தி குறித்த காணியை ஒருவர் அபகரிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வந்தார். நேற்று முன்தினம் அவர் குறித்த காணியை சுற்றி வேலி அமைக்கும் பணியில் ஈடுபட்ட போது அப்பகுதி மக்கள் ஒன்று திரண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். அத்துடன் இது குறித்து மன்னார் நகர சபையிடமும் தகவல் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்கு வந்த மன்னார் நகர சபையின் உப தலைவர் ஜேம்ஸ் ஜேசுதாஸ் மற் றும் உறுப்பினர் இ.குமரேஸ் ஆகியோர்வேலிஅமைக்கும்நடவடிக்கையை தடுத்து நிறுத்தினர்.

1977 ஆம் ஆண்டு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் மன்னார் சாவற்கட்டு கிராமத்தில் 30 வீட்டுத்திட்டம் அறிமுகப்படுத் தப்பட்டது.


வேலி அமைக்க முற்பட்ட வேளை திரண்ட மக்கள்

இதன்போது அக்கிராம மக்களின்நலன்கருதிபொதுதேவைகளுக்காக ஒரு ஏக்கர் காணியும் வழங்கப்பட்டது.

எனினும் குறித்த காணியில் பொதுக் கட்டடங்கள் எதுவும் அமைக்கப்படவில்லை. தற்போது அப்பகுதி இளைஞர்கள் விளையாட்டு மைதானமாக அந்தக்காணியை பயன்படுத்தி வருகின்றனர்.

குறித்த காணி தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமானதாக உள்ளதால் அதனை மன்னார் நகர சபையினர் தமது நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த முடியாது என தெரிவிக்கப்பட்டது.

இதன்படி தேசிய வீடமைப்பு அதிகார சபையுடன் தொடர்பு கொண்டு அவர்களின் அனுமதியுடன் அந்தக் காணியில் பூங்கா அமைப்பதற்கு தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

இந்த நிலையிலேயே குறித்த காணியை தனியார் ஒருவர் அரசியல் செல்வாக்கின் அடிப்படையில் அபகரிக்க முயன்றுள்ளார்.

காணி அபகரிப்பு தொடர்பில் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினருக்கு தகவல் வழங்கப்பட்டது. இந்த நிலையில் குறித்த தனி நபரை காணியில் இருந்து வெளியேற்றி நகரசபையினர் நடவடிக்கை எடுத்தனர். (ஜ-56)


வருகை தந்த விருந்தினர்கள் அவதானிப்பு

# கணினிமயப்படுத்தப்பட்டது நகரசபை வருமானப் பிரிவு

மன்னார்.மார்ச் 3

மன்னார்நகரசபையில்கணினிமயப்படுத்தப்பட்ட வருமானப் பகுதி கடந்த 28 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது. மன்னார் நகரசபைத் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் வைபவ ரீதியாக கணினிப் பகுதியை திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக உள்ளூராட்சி, கூட்டுறவு அபிவிருத்தி, தொழிற்றுறை, சமூக நலன் மற்றும் காணிகள் அமைச்சின் வடமாகாணச் செயலாளர் சி.திருவாகரன், சிறப்பு விருந்தினர்களாக ஆசிய மன்றத்தின் பொருளாதார ஆளுகைத்திட்ட பணிப்பாளர் கலாநிதி கோபாலகுமார் தம்பி, வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எம்.ஜெகூ,உள்ளூராட்சி பெருளாதார ஆளுகைத் திட்ட பிரதி குழு தலைவர் ஏ.சுபாகரன், மன்னார் பிரதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எம்.ஏ. ஜே.துரம் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஜ-56)

**முதற்கட்டமாக நகரசபைக்குட்பட்ட வருமானத்தை கணினி மூலம் கையாளும் நடவடிக்கை**

# மூப்பன் குளம் புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு

முல்லைத்தீவு, மார்ச் 3

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் உள்ள மூப்பன் குளம் புனரமைப்புக்கென நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தப் பகுதி விவசாயிகளின் கோரிக்கைக்கு அமைவாக குளத்தை புனரமைப்பதற்கு 25 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (ஜ-402)

# வீதியோரங்களில் மாணவர்கள் விபத்துக்கள் ஏற்படும் அபாயம்

ஒட்டுசுட்டான், மார்ச் 3

முல்லைத்தீவு மாவட்டத்தில் வீதியோரங்களிலுள்ள பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் பாடசாலை முடிந்ததும் வீதியோரங்களில் நீண்ட நேரமாக காத்திருப்பதால் விபத்துக்கள் ஏற்படும் சந்தர்ப்பங்கள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலை முடிந்ததும் பெற்றோரின் வருகைக்காகவும் பஸ். வாகனாங்களில் வருகைக்காகவும் மாணவர்கள் காத்து நிற்கின்றனர் இதன்போது வீதிகளில் குறுக்கு மறுக்காக செல்வதால் விபத்துக்கள் ஏற்படும் சந்தர்ப்பங்கள் அதிகரித்துள்ளன. இவ்வாறான சந்தர்ப்பங்களை தவிர்க்கும் வகையில் பாடசாலை நிர்வாத்தினரும், பெற்றோரும் கவனம் எடுக்க வேண்டுமென ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர். (ஜ-500)


வவுனியா பொது வைத்தியசாலையில் இரத்த வங்கிக்கான கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு துரித கதியில் இடம் பெற்று வருகின்றன.

# துப்புரவு பணியில் இராணுவத்தினர்

முல்லைத்தீவு, மார்ச் 3

முல்லைத்தீவு மாவட்ட வீதிகளில் இருமருங்கிலும் இராணுவத்தினர் துப்பரவு செயது பேணி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. நகரத்தை சுத்தமாக வைத்திருப்போம் என்ற தொனிப்பொருளில் இராணுவத்தினர் வீதியோரங்களை துப்பரவு செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

டெங்கு மற்றும் தொற்று நோய்களை தடுக்கும் பொருட்டும், நகரத்தை சுத்தமாக வைத்திருக்கும் பொருட்டும் மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் இராணுவத்தினர் கோரியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பொது இடங்களை சுத்தமாக பேணும் வகையில் சனசமூக நிலையங்கள், பொது நோக்கு மண்டபங்கள், நூலகங்கள் உள்ளிட்ட இடங்களை துப்புரவு செய்யும் பணியிலும் உள்ளூர் இளைஞர் குழுக்கள் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-500)

# சிவில் பாதுகாப்புக் குழுக்களை தடையின்றி இயங்க முயற்சி


சிவில் குழுவினரும் பொலிஸாரும்

வவுனியா, மார்ச் 3

சிவில் பாதுகாப்பு குழுக்களை தடையின்றி இயங்க வைப்பதற்கான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் வவுனியா கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வுக்கு வட மாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டார்.

வவுனியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட 70 கிராம சேவையாளர் பிரிவுக்கு உட்பட்ட சிவில் பாதுகாப்பு குழுக்களும் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

இந்தக் கலந்துரையாடலில் கிராமங்கள் தோறும் நடைபெறும் குற்றச்செயல்களை கட்டுப்படுத்துதல், ஊழலை கட்டுப்படுத்துதல், சிவில் பாதுகாப்பு குழுக்களை இயங்கச் செய்தல், சமூகப் பிரச்சினைகளை சிவில் பாதுகாப்பு குழுக்களுக்கு ஊடாக இலகுவாக தீர்த்தல் உள்ளிட்ட விடயங்களை விரிவாக கலந்துரையாடப்பட்டன. (ஜ-402)

# வன்னேரிக்கான பஸ் சேவை; நேரத்தை மாற்ற கோரிக்கை

கிளிநொச்சி, மார்ச் 3

கிளிநொச்சியில் இருந்து தினமும் காலை 7.30 மணிக்கு வன்னேரிக்குளம் செல்லும் இ.போ.ச. பஸ்ஸை நேர மாற்றம் செய்து பாடசாலை வரை சேவையில் ஈடுபடுத்துமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சியில் இருந்து இ.போ.ச.பஸ் தினமும் 7.30 மணிக்கு புறப்பட்டு வன்னேரிக்குளம் ஆரம்ப சுகாதார நிலையம் வரை செல்கிறது. அதிலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரம் வரையிலேயே வன்னேரிக்குளம் மகா வித்தியாலயம் அமைந்துள்ளது. எனவே பாடசாலை வரை குறித்த பஸ் சேவையை நீடிப்பு செய்யுமாறு அத்துடன் காலை 7 மணிக்கு கிளிநொச்சியில் இருந்து புறப்படக் கூடிய வகையில் நேர மாற்றம் செய்ய வேண்டும் எனவும் மக்கள் கூறுகின்றனர்.

குறிப்பாக பாடசாலைக்கு செல்லும் ஆசிரியர்கள் இந்த பஸ் சேவையையே நம்பி உள்ளனர். குறித்த பஸ் மருத்துவமனையுடன் நிறுத்தப்படுவதால் அவர்கள் மேலதிகமாக ஒரு கிலோ மீற்றர் தூரம் வரை நடந்தோ அல்லது சைக்கிளிலோ பாடசாலை செல்ல வேண்டியுள்ளது எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை 1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் கிளிநொச்சியிலிருந்து திருமுறிகண்டி ஊடாக வன்னேரிக்குளம் வரை நடைபெற்ற இ.போ.ச பஸ்சேவையை மீள ஆரம்பிக்க வேண்டுமென அவர்கள் கோரியுள்ளனர். (ஜ-18)

**1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் கிளிநொச்சியிலிருந்து திருமுறிகண்டி ஊடாக வன்னேரிக் குளம் வரை நடைபெற்ற இ.போ.ச பஸ் சேவையை மீள ஆரம்பிக்க வேண்டுமென அவர்கள் கோரியுள்ளனர்.**

# கரைச்சியில் சமுர்த்தி வங்கிகள்

வவுனியா, மார்ச் 3

கிளிநொச்சி, வட்டக்கச்சி, ஸ்கந்தபுரம் ஆகிய பகுதிகளில் சமுர்த்தி வங்கிகள் ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக இயங்கி வருவதாக கரைச்சி பிரதேச செயலர் கோ. நாகேஸ்வரன் தெரிவித்தார்.

கரைச்சிப் பிரதேச செயலக பிரிவின் கீழ் உள்ள 42 கிராமங்களை உள்ளடக்கி சமுர்த்தி வங்கிகள் அமைக்கப்பட்டுள்ளன. 2012 ஆம் ஆண்டு நடைமுறைக்கு கொண்டு வரப்பட்ட சமுர்த்தி திட்டத்தின் கீழ் 2 மில்லியன் ரூபா செலவில் கிளிநொச்சி நகரம், வட்டக்கச்சி, ஸ்கந்தபுரம் ஆகிய பகுதிகளில் வங்கிகள் அமைக்கப்பட்டுள்ளன. கடந்த புதன் கிழமை முதல் இந்த வங்கிகள் மக் களுக்கு சிறப்பான சேவைகள் வழங்கவுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (ஜ-402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திலுள்ள தெரிவு செய்யப்பட்ட வறிய குடும்பங்களை சேர்ந்த 823 மாண வர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கும் நிகழ்வு வவுணதீவு .குறுஞ்சாமுனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.
இந்தநிகழ்வில் மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் பொன்னையா ஜோசப் கலந்துகொண்டு மாணவி ஒருவருக்கு கொப்பிகளை வழங்கினார். அருகில் மட் டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம். சாள்ஸ் காணப்படுகின்றார்.

# தமிழரை திரட்டி பேரணி நடத்தச் சிலர் சூழ்ச்சி

## ஜெனிவாத் தீர்மானத்துக்கு எதிராக

மட்டக்களப்பு,மார்ச் 3
ஜெனிவாத் தீர்மானத்துக்கு எதிராக தமிழ் மக்களை ஒன்றி ணைத்து எதிர்வரும் 9 ஆம் திகதி பேரணி ஒன்றை நடத்து வதற்கு சில குழுக்கள் திட்டம் தீட்டியுள்ளன. இந்தச் சதி வலை யில் தமிழர்கள் சிக்க வேண் டாம் என்று கூட்ட மைப்பு உறுப்பினர்கள் கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளனர்.
இந்த அறிக்கையை அம்பாறை மாவட்ட கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களான த.கலைய ரசன், மு.இராஜேஸ்வரன் மற் றும் கல்முனை மாநகரசபை உறுப்பினர்களான அ.அமிர் தலிங் கம், அ.விஜயரெட்ணம், வி.கமலநாதன், சி.ஜெயக் குமார் ஆகியோர் இணைந்து வெளியிட்டுள்ளனர்.
இந்தக் கூட்டறிக்கையில் தெரி விக்கப்பட்டிருப்பதாவது:-
எதிர்வரும் 9 ஆம் திகதி ஆர்ப் பாட்டப் பேரணியை தமிழர் களை கொண்டு நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளது. இதில் தமிழ் மக்களைக் கலந்து கொள்ள வைப்பதற்காக வறுமைக் கோட் டுக்குக் கீழுள்ள குடும்பங்க ளையும், மகளிர் சங்கங்களை யும் மற்றும் அப்பாவித் தமிழ் மக் களையும் அழைக்கும் பொருட்டு ஆங்காங்கே கலந்து ரையாடல் கள் நடத்தப்பட்டு வருகின்றன.
கல்முனை தமிழ் பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்து வதற்கு நாம் ஜனாதிபதிக்கு ஆதரவாக ஒரு பேரணியை நடத்த வேண்டுமெனவும் இதில் கலந்து கொள்ளாதவர் களுக்கு அரச உதவி எதையும் பெற முடி யாது எனவும் எச்சரிக்கைத் தொனியுடன் பேசி கூட்டங்கள் நடைபெற்று வரு கின்றன.
இந்த முறை கொண்டுவரப்ப டவுள்ள ஜெனிவாத் தீர்மானம் மிகவும் முக்கியத்துவம் உடை யது என்று ஆய்வாளர்களும் ஊடகங்களும் வெளிப்படுத் திக்கொண்டிருக்கும் இந்தக் காலப்பகுதியில் இவ்வாறான ஆர்ப்பாட்டங்களைச் செய்வ தன் உள்நோக்கம் என்ன என்பதனை உண்மையான தமிழன் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும்.
ஜெனிவா தீர்மானம் நிறை வேறவுள்ள இந்த நேரத்தில் தமிழ் மக்களை பேரணி மூலம் ஒன்றிணைந்து அதை ஜெனி வாத் தீர்மானத்துக்கு எதிராக பிர யோகிக்க எடுக்கும் நடவடிக் கைக்கு தமிழ் மக்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும் தமிழர்களுக்குக் கிடைக்க இருக் கும் தீர்வு விடயத்தில் ஒற்றுமை யாக இருந்து செயற்பட முன்வர வேண்டும்.
இப்படியான போலிப் பரப்புரை களை நம்பி தமிழர்கள் வீதிக ளில் இறங்க வேண்டாம்.
இந்த மாத இறுதியில் நடைபெற இருக்கும் ஜெனிவா கூட்டத் தொடர் முடியும் வரை தமிழ் மக்கள் எந்தக் கூட்டங்களிலோ, ஆர்ப்பாட்டங்களிலோ, பேரணி களிலோ கலந்து கொள்ள வேண்டாம்-என்று தெரிவிக் கப்பட்டுள்ளது. (ச-31)

**இந்த மாத இறுதியில் நடைபெற இருக் கும் ஜெனிவா கூட்டத் தொடர் முடியும் வரை தமிழ் மக்கள் எந்தக் கூட்டங் களிலோ, ஆர்ப்பாட்டங் களிலோ, பேரணிகளிலோ கலந்து கொள்ள வேண்டாம் என்கிறது கூட்டமைப்பு.**

# வாகரை பிரதேசத்தில் மட்டும் 265 பேரைக் காணவில்லை

## பிரதேச செயலாளர் தகவல்

வாகரை,மார்ச் 3
1990 தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரையான காலத்தில் அசாதாரண சூழ்நிலையின் போது மட்டக்களப்பு, வாகரைப் பிரதேச செயலர் பிரிவில் 265 பேர் காணாமற்போயுள்ளனர் என்று பிரதேச செயலாளர் எஸ்.ஆர். ராகுலநாயகி தெரி வித்தார்.
ஏற்கெனவே தாம் தமது பிர தேச செயலகப் பிரிவில் வாழும் குடியிருப்பாளர்களின் குடும்ப விவரங்களைத் திரட்டும் நட வடிக்கையை ஆரம்பித்துள் ளோம்.
அதன்போதே காணாமற் போனோர் பற்றிய விவரங்கள் எமக்குக் கிடைத்துள்ளன என்று அவர் கூறினார்.
காணாமற்போனவர்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழு விசாரணைக ளின் கிழக்கு மாகாணத்துக் கான முதலாம் அமர்வு எதிர் வரும் 20 ஆம் திகதி மட்டக் களப்பு மாவட்டத்தில் ஆரம் பமாகவுள்ளது.
அந்த விசாரணைகளின் ஒரு அமர்வு வாகரையிலும் இடம் பெறவுள்ளது என்று அவர் குறிப்பிட்டார். (ச)

# 114 சிங்கள பொலிஸாருக்கு தமிழ்மொழி பயிற்சி நிறைவு

## வெளியேறும் நிகழ்வு இன்று

மட்டக்களப்பு,மார்ச் 3
மட்டக்களப்பு, கல்லடியிலுள்ள பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் 114 சிங்களப் பொலிஸார் தமிழ் மொழியைக் கற்று வெளியே றும் நிகழ்வு நடைபெறவுள்ளது என்று கல்லடிப் பொலிஸ் பயிற் சிக் கல்லூரியின் பொறுப்பதி காரி பொலிஸ் பரிசோதகர் பிர சன்ன தினேஸ் தெரிவித்தார்.
இன்று திங்கட்கிழமை பயிற்சி யின் நிறைவு நிகழ்வு மட்டக் களப்பு, கல்லடியில் அமைந் துள்ள பொலிஸ் பயிற்சிக் கல் லூரியில் இடம்பெறவுள்ளது.
கல்லடிப் பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் இருந்து தமிழ் மொழிப் பயிற்சியை முடித்து வெளியேறும் 7 ஆவது சிங்கள மொழி மூலப் பொலி ஸாரைக் கொண்ட அணி இதுவாகும் என்று அவர் கூறினார். (ச)

# விஷ ஜந்து தீண்டி ஒருவர் சாவு

மட்டக்களப்பு,மார்ச் 3
விஷ ஜந்து தீண்டியதாகச் சந்தேகிக்கப்படும் மட்டக்களப்பு , எருவில் கிராமத்தைச் சேர்ந்த மாணிக்கப்போடி ஞானமுத்து (வயது- 50) என்ற நபர் நேற்று ஞாயிற்றுக்கிழமை உயிரி ழந்துள்ளார் என்று களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலை யின் வைத்திய அத்தியட்சகர் குணசிங்கம் சுகுணன் தெரிவித்தார்.
களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலைக்கு நேற்று ஞாயிற் றுக் கிழமை காலை கொண்டுவந்தபோது அவர் உயிரிழந்துள்ளார்.


## வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 01.09.1942
மறைவு 03.02.2014
கடந்த 03.02.2014 திங்கட்கிழமை
சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்
**அமரர் கந்தையா நடராஜா**
அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (04.03.2014) செவ்வாய்க்கிழமை மதியம் 12.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும்.
அத்தருணம் தாங்களும் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
பத்தமேனி,
அச்சுவேலி.
மனைவி - சயந்திரா
மகள் - தாட்சாயினி
(அ/123491)(7.6)


# மாநகரசபை கணக்காளர் வீட்டுக்கு கல்வீச்சு

## இனந்தெரியாதோரால் தாக்குதல்

மட்டக்களப்பு,மார்ச் 3 -
மட்டக்களப்பு மாநகரசபையின் கணக் காளரின் வீட்டின் மீது நேற்றுமுன் தினம் சனிக்கிழமை அதிகாலை இனந்தெரியாத நபர்களினால் கல் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
மட்டக்களப்பு மாநகரசபையின் கணக் காளர் திருமதி சிவராஜாவின் வீட்டின் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட் டுள்ளது.
இதன்போது வீட்டு யன்னல் கதவுக ளுக்கு சேதமேற்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இந்த தாக்குதல் நடத்தியோர் யார் என்று அடையாளம் காணமுடியவில்லை என்று கணக்காளர் திருமதி சிவராஜா தெரிவித்தார்.
எனினும் அருகில் பொருத்தப்பட்டி ருந்த பாதுகாப்புக்கமெராவில் தாக்குதல் நடத்தப்பட்டோரின் படம் பதியப்பட் டுள்ளது. அவற்றைப் பொலிஸாரிடம்வழங் கியுள்ளோம் என்று அவர் கூறினார்.
இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்ற னர். (ச)

**பொருத்தப்பட்டிருந்த பாதுகாப்பு கமெராவில் தாக்குதல் நடத்தப்பட் டோரின் படம் பதியப்பட்டுள்ளது.**


## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
30.12.1989
மறைவு
03.03.2009
**செல்வி சிவபாலன் சிவகௌரி**



எம்மினிய சோலையிலே துளிர்விட்டு
பெருவிருட்சமதாய் தாங்கி நின்று
மாபெரும் சபைதனில் நீ நடக்க
மலர் மாலைகளாயிரம் விழுந்திடவே
மாற்றுக்குறைந்திடா மங்கையாய்-உனை
போற்றும் நாளுக்காய் நாமிருந்தோம்

கூற்றுவன் வென்றிடவே
தோற்றுவிட்டோம் நாமம்மா
ஆண்டுகள் ஐந்து கடந்ததுவோ எம்கனவு தொலைந்து
நம்ப முடியவில்லையம்மா நம்ப முடியவில்லை

என்றும் உன் நினைவுடன் வாழும்
அப்பா, அம்மா, தம்பி.

மறைவு:
10.03.2009
**முருகையா ரவிச்சந்திரன்**
**ரவிச்சந்திரன் நிர்மலாதேவி**



சுற்றிவரும் பூமியிலே சுந்தரமாய்
வெற்றிநடை போடுகின்ற வேளையிலே
ஈவிரக்கமின்றி ஈனர் செய்த செயல்
பாலகர் இருவரை பாரினிலே தவிக்கவிட்டு
பரமனடி அழைத்ததுவே

பிள்ளைகள், சகோதரர்கள், சகோதரிகள்,
மைத்துனர் மைத்துனிகள், உறவினர்கள்.

மறைவு
10.03.2009
**சின்னையா முருகையா**



தந்தைக்கு கொள்ளியிட தனயனவன் இங்கிருந்தும்
தனயனுடன் ஒன்றாக உம் வாழ்வு தொலைந்ததுவோ
வேரறுந்த விருட்சமாய் பாரினிலே நாமிங்கு தவிக்கிறோம்
ஆண்டுகள் ஐந்து கடந்தும் ஆறாது உம் நினைவு

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

611/6, இராமநாதபுரம், கிளிநொச்சி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயாதீன சர்வதேச விசாரணையை நடத்தினால் படையினருக்கே ஆபத்து

## அரசின் நிராகரிப்பு போக்கைக் கண்டிக்கிறார் கிரியெல்ல

கொழும்பு.மார்ச் 3
சர்வதேச விசாரணைகளை அரசு நிராகரித்தால், சர்வதேச சமூகம் சுயாதீன சர்வதேச விசாரணைகளை நடத்தும் என்று ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.
ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையுடன் அரசு இரகசிய உடன்படிக்கைகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.
ஆளும் கட்சியின் அமைச்சர்கள் கோமாளிக் கூட்டத்தைப் போன்று செயற்படுகின்றனர்.
அரசு ஐக்கிய நாடுகள் அமைப்புக்கு வாக்குறுதிகளை அளித்துள்ள அதேவேளை, சில ஆளும் கட்சி அமைச்சர்கள் குற்றச்செயல்களுக்குத் தண்டனை விதித்தல் தொடர்பில் முட்டாள்தனமான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர் என்று அவர் குறிப்பிட்டார்.


லக்ஸ்மன் கிரியெல்ல

இலங்கை அரசியல் வரலாற்றில் தேசப்பற்றுடைய அரசு என்று தங்களை மார்தட்டிக்கொள்ளும் இந்த ஆட்சியாளர்கள், ஐக்கிய நாடுகளுடன் இரகசிய உடன் படிக்கைகளை செய்து கொண்டுள்ளது என்று அவர் சுட்டிக்காட்டினார்.
தருஸ்மன் அறிக்கையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பகிரங்கமாக நிராகரித்த போதிலும், ஐக்கிய நாடுகள் அமைப்புடன் இணக்கப்பாடுகள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.
இறுதிக் கட்டப் போரில் பொது மக்கள் கொல்லப்படவில்லை என்று கூறும் அரசு, இரகசியமாக மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றதாக ஒப்புக்கொள்கின்றது என்று அவர் தெரிவித்தார்.
இவ்வாறு விசாரணை நடத்தப்பட்டால் அப்பாவிப் படையினர்கள் தண்டிக்கப்படக் கூடிய அபாயம் காணப்படுகிறது என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)

# இந்தியர் நீரில் மூழ்கி உயிரிழப்பு

அளுத்கம பிரதேசத்தில் உள்ள கடலில் நீராடிக் கொண்டிருந்த இந்தியர் ஒருவர் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளார்.
நீரில் அடித்துச் சென்ற அவரை பிரதேச மக்களும் பாதுகாப்பு அதிகாரிகளும் மீட்டு வைத்திய சாலையில் சேர்த்துள்ளனர். எனினும், சிகிச்சை பயனளிக்காது அவர் உயிரிழந்துள்ளார். (ச)

# அரச வைத்தியசாலைக் கட்டடங்களுக்கு இவ்வருடம் 1800 கோடி ரூபா ஒதுக்கீடு

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு.மார்ச் 3
அரச வைத்தியசாலைகளில் நிலவும் கட்டடக் குறைபாட்டை நிவர்த்தி செய்ய இந்த வருடம் 1800 கோடி ரூபா செலவிடப்படும் என்று சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
ஹம்பாந்தோட்டை பொது வைத்தியசாலையில் சி. ரி. இயந்திரப் பிரிவைத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இந்நிதி மூலம் வைத்தியசாலைக் கட்டடங்கள் மாத்திரமல்லாமல் வைத்தியர், தாதியர் மற்றும் ஊழியர்களுக்கான தங்கும் விடுதிகளும் நிர்மாணிக்கப்படும்.


மைத்திரிபால சிறிசேன

2014 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக சுகாதாரத் துறைக்கு 157 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.
சுகாதாரத் துறை கட்டடங்களை நிர்மாணிக்கவென 18 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.
இந்தநிதி வெளிநாட்டு நிதியங்கள் மூலம் நன்கொடைகளாகவே எமக்குக் கிடைக்கின்றது.
இந்த நிதி மூலம் வைத்திய சாலைக் கட்டடங்கள் மற்றும் வைத்தியர்கள், தாதியர்கள், ஊழியர்களுக்கான தங்கும் விடுதிகள் என்பன நிர்மாணிக்கப்படும்-என்றார். (ச)

# அபிவிருத்தி என்ற பெயரில் வீடுகளை உடைக்கத் திட்டம்

## மனோ கணேசன் குற்றச்சாட்டு

கொழும்பு.மார்ச் 3
கொட்டாஞ்சேனை முதல் கொலொன்னாவை வரை நகர அபிவிருத்தி என்ற பெயரில் வீடுகளை உடைக்கத் திட்டம் தீட் டப்பட்டுள்ளது என்று ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் குற்றம் சாட்டியுள்ளார்.
முன்னாள் மாகாணசபை உறுப்பினர் எஸ். ராஜேந்திரனின் ஏற்பாட்டில் கொழும்பு, ஸ்ரீ நாராயணகுரு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற, கொலொன்னாவை பிரதேச மக்களுடனான சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கொழும்பு மாவட்டத்தில் கொட்டாஞ்சேனை முதல் கொலொன்னாவை வரையிலான கோயில்கள், தேவாலயங்கள், பள்ளிவாசல்கள் நிறைந்த பகுதிகளில் நகர அபிவிருத்தி செய்கிறோம், வீதிகளை அகலப்படுத்துகிறோம் என்ற பெயரில் கட்டடங்களை உடைத்து ஊடுருவிச் செல்லும் பாதைகளை அமைக்க நகர அபிவிருத்தி சபை திட்டங்களைத் தீட்டி வருகிறது.


மனோ கணேசன்

நகர அபிவிருத்திக்கு நாங்கள் எதிரானவர்கள் அல்ல.
ஆனால், அபிவிருத்தி என்ற பெயரில் தமிழ் பேசும் சிறுபான்மை மக்களையும், இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மக்களையும் குறிவைத்து அச்சுறுத்தி அகற்றும் நடவடிக்கைகளை நாம் அனுமதிக்க முடியாது.
சம்பந்தப்பட்ட பிரதேசங்களின் வாழும் மக்களின் ஒப்புதல் இல்லாமல் இந்தத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுமானால், இவற்றை இனவாத நடவடிக்கைகளாகவே நாம் தேசிய, சர்வதேச ரீதியாக அடையாளப் படுத்துவோம் -என்றார். (ச)

# உண்டியல் முறை மூலம் பரிமாறிய போதைப் பணம்

கொழும்பு.மார்ச் 3
போதைப் பொருள் பணத்தை உண்டியல் முறையில் திரட்டிய நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.
போதைப்பொருள் விற்பனையின் மூலம் திரட்டப்படும் பணம் இவ்வாறு உண்டியல் முறையில் பரிமாறப்பட்டுள்ளது.
சுமார் இரண்டரைக் கோடி ரூபா பணம் உண்டியல் முறைமையின் மூலம் கொடுக்கல், வாங்கல் செய்யப்பட்ட போது சந்தேகநபரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்,
இந்த நபர் சட்டவிரோதமான முறையில் கொள்கலன் மூலம் வேறு பொருள்களை நாட்டுக்குள் இறக்குமதி செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


கோப்புப்படம்

கொழும்பைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். போதைப் பொருள் விற்பனையின் மூலம் ஈட்டப்படும் பணம் இவ்வாறு திரட்டப்பட்டுள்ளது.
ஒரு தொகுதி பணத்தை குறித்த நபர் வெளிநாட்டில் வாழ்ந்து வரும் பாதாள உலகக் குழுவினருக்கு அனுப்பி வைத்துள்ளார் என்று பொலிஸார் கூறினர். (ச)

மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 24 ☆ 06 ★ 1944

மறைவு 03 ☆ 03 ★ 2011



நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், உருத்திரபுரத்தை வாழ்விடமாகவும் கொண்ட

அமரர்
முருகேசு சண்முகராசா
(ஓய்வுபெற்ற பிரதிக்கல்விப் பணிப்பாளர்- கிளிநொச்சி கல்வி வலயம்)

ஓராயிரம் கனவுகளோடு ஓய்வின்றி ஓடியோடி எமக்காய்
உழைத்தீர் உயர்வான கல்விப் பணியால்
ஊரெங்கும் உறவுகளைக் கொண்டீர்!
விழி சொரியும் நீரிங்கே அனலாய் கொதித்து
ஆற்ற முடியாமல் தவிக்கின்றோம் ஐயா!
வந்திடாயோ உமக்காய் வழிபார்த்து
வாசலில் காத்திருக்கின்றோம்.

இரத்தினம் பண்ணை,
உருத்திரபுரம்.
(43538)(3.6.4)
குடும்பத்தினர்.

வீட்டுக்கிருத்திய அழைப்பு

56 ஆம் நாள் நினைவஞ்சலி
8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 17.07.1914
மறைவு 07.01.2014

தோற்றம் 11.06.1927
மறைவு 08.02.2006



அமரர்
கதிரவேலு சுப்பிரமணியம்

திருமதி
சுப்பிரமணியம் பாக்கியம்

கடந்த 07.01.2014 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர்
அமரர் கதிரவேலு சுப்பிரமணியம் அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள்
இன்று (03.03.2014) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும்.
அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப்
பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும்
கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.109/42 கரந்தன், நீர்வேலி மேற்கு, நீர்வேலி.
குடும்பத்தினர்.
(45196)(45.6))

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நியாய வழியில் தடம்பதிக்க சிந்தித்துச் செயற்படலாகாதா?

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின், இருபத்தைந்தாவது ஆண்டுக்கான அமர்வு, இன்று ஜெனிவாவில் ஆரம்பமாக உள்ளது. இந்த அமர்வில் இலங்கை அரசுக்கு எதிராகக் கொண்டுவரப்பட உள்ள பிரேரணை அனைத்துலக மட்டத்தில் கவனத்தை ஈர்க்க உள்ளது.

அமெரிக்க அரசினால் சமர்ப்பிக்கப்பட உள்ள இந்தப் பிரேரணை, தோற்கடிக்கப்பட வேண்டும் என்பதில், அதீத அக்கறை காட்டுகிறது எமது நாடு. அதே வேளையில், அமெரிக்காவும் பிரிட்டனும் இந்தப் பிரேரணை தீர்மானமாக நிறைவேற்றப்பட வேண்டும் என்பதில், அதற்கு ஆதரவு தேடுவதில் முழு மூச்சுடன் செயற்பட முனைந்து விட்டன.

இதேவேளை-

மனித உரிமைகள் ஆணையாளர் சமர்ப்பிக்க உள்ள அறிக்கை, கடந்த ஆண்டில் பேரவையில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்களை, சம்பந்தப் பட்ட நாடுகளின் அரசுகள் செயற்படுத்தினவா, என்பதிலேயே அதிக அக்கறை செலுத்துவது வழமை.

இந்த ஆண்டுக்கான இலங்கை குறித்த அறிக்கையின் வடிவம், கடந்த இருபத்தைந்தாம் திகதி மனித உரிமைகள் ஆணை யாளரினால் உத்தியோகபூர்வமாக (இணையத் தளத்தில்) வெளியிடப்பட்டது. அந்த அறிக்கை ஊடகங்களில் பிரசுரமாகியதும் தெரிந்ததே.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர், சபையின் பொதுச் செயலாளர் பதவிக்கு அடுத்த நிலையில் உள்ள அதிகாரி எனக் கருதப்படுபவர். கடந்த வாரம் அவர் வெளியிட்ட அறிக்கை, ஐ.நா.சபையின் கோட் பாடுகளுக்கு முரணற்ற வடிவத்திலேயே பேரவையில் சமர்ப்பிக்கப்படும்.

இதேவேளை,மனித உரிமைகள் ஆணையாளர், பேரவையின் இப்போதைய மாநாட்டில் நேரில் சமர்ப்பிக்க உள்ள அறிக்கை, இலங்கை அரசுக்கு பெரும் தலை யிடியைத் தரும் என்று நோக்கர்கள் கருதுகிறார்கள்.

ஜெனிவாவில் இடம்பெற உள்ள பிரேரணைச் சமர், இம் மாதம் இருப்பத்தாறாம் திகதி களைகட்டும் என்று தகவல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அதாவது இலங்கை அரசுக்கு எதிரான பிரேரணை , அதனை தோற் கடிப்பதற்கான கொழும்பின் நகர்வுகள் மாத இறுதியில் முட்டி மோதும் நிலை உண்டாகலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது.

ஜெனிவாவில் மாத இறுதியில் இலங்கை அரசுக்கு எதிரான பிரேரணை நிறைவேற்றப்பட்டாலும் கூட, மனித உரிமைகள் பேரவைக்கு அதனை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் கிடையாது.

ஐ.நா.பாதுகாப்புச் சபையின் பரிசீலனையின் பின்னரே முடிவும் அதன் விளைவும் தெரியும்.

எனினும், மனித உரிமைகள் பேரவையில் அரசுக்கு எதிரான தீர்மானம் எதுவும் நிறைவேற்றப்படாமல் தடுப்பதில் கொழும்பு அரசு மிகுந்த முனைப்புடன் செயற்படுகிறது.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் தனக்கு எதிரா கத் தீர்மானம் கொண்டு வருவதை தடுப்பதில் காட்டும் அதீத அக்கறையையும் அவசரத்தையும், பொறுப்புக் கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான அனைத்துலக நாடுகள் பலவற்றின் வற்புறுத்தல்களையும் கருத்தில் கொண்டு இலங்கை அரசு செயற்பட்டிருந்தால் இப்போதைய நிலை- வினை - சூழ்ந்திருக்காது.

மனித உரிமைகளையும், மனித கௌரவத்தையும் மறுக்கும் போக்கு இலங்கையில், இப்போதைய அரசின் ஆட்சியில், மலிந்து விட்டதாக அமெரிக்காவும் மற்றும் பல நாடுகளும் அடையாளம் காட்டுகின்றன.

மிகக் குறிப்பாக, சுமார் ஆறு ஆண்டுகளாக, அனைத்துலக மனித உரிமை மற்றும் மனிதாபிமானச் சட்ட மீறல் கள் தொடர்பாகவும், அவற்றில் சம்பந்தப்பட்ட எவரும் பொறுப்புக் கூற (இலங்கை அரசால்) வகை செய்யப்பட வில்லை என்பதும் அனைத்துலக நாடுகள் பலவற்றாலும் இலங்கை அரசுக்கு எதிராக முன்வைக்கப்படும் முதன்மை சார் குற்றச் சாட்டுகளாகும்.

இத்தகைய ஒரு பின்னணியில், அனைத்துலக நாடுகள் மீது குறை குற்றம் கண்டு, மனித உரிமைகள் விடயத்தில் தனது ஒவ்வாத போக்கைக் காட்டுவதனால் -

ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் இந்நாட்டு அரசின் மீது சுமத்தப்படுவதாக விளம்புவதால்-

நாடும் மக்களும் பல ஒவ்வாத விளைவுகளை எதிர் கொள்ளவும், அதன் பலனாக பின்னடைவுகளை காணவும் அனுபவிக்கவும் நேரிடலாம்.

இத்தகைய பாதிப்புகளை கருத்தில் கொண்டு, ஆட்சியாளர்கள் நியாய வழியில் தடம் பதிப்பது குறித்துச் சிந்திக்கக் கூடாதா?

# அரசில் இருக்க முடியாவிடில் வெளியே போய் விடுங்கள்

## முஸ்லிம் காங்கிரஸ் தலைவருக்கு கடும் தொனியில் ஜனாதிபதி

சண்டே ரைம்ஸ் கட்டுரையிலிருந்து - கோகுலன்

“அரசில் தொடர்ந்து இருக்க விருப்பமில்லை யென்றால் நீங்கள் வெளியேறி விடலாம் ” இவ்வாறு முஸ்லிம் காங்கிரஸ் தலை வரை எச்சரித்துள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. கடந்த வெள்ளிக் கிழமை நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் இது நிகழ்ந்தது. ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி அரசின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் அமைச்சர் ஹக்கீமை பார்த்து நாட்டைக் காட்டிக் கொடுக்கிறார் என்று ஜனாதிபதி குற்றஞ்சாட்டினார். இலங்கையில் இடம்பெற்ற முஸ்லிம் மற்றும் முஸ்லிம் அமைப்புகள் மீதான தாக்குதல்கள் குறித்து முஸ்லிம் நாடுகளில் நடைபெற்றுள்ள பரப்புரைகளின் பின்னணியில் முஸ்லிம் காங்கிரஸ் இருந்துள்ளது என்ற குற்றச்சாட்டுக்களையடுத்தே ஜனாதிபதி இவ்வாறு கோபமுற்று ஹக்கீமை பேசியுள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

கடந்த வருடம் மனித உரிமைகள் ஆணையாளர் நவிப்பிள்ளை இலங்கை வந்திருந்த பொழுது முஸ்லிம் நிறுவனங்கள் தாக்கப்பட்டமை தொடர்பான அறிக்கையொன்றை அமைச்சர் அவரிடம் வழங்கியிருந்தார் என்ற வகையிலும் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறார். என்றாலும் இந்தக் குற்றச்சாட்டுக்களை அவர் மறுத்துள்ளார். ஜெனிவாவில் மனித உரிமைகள் சபை ஆரம்பமாகியுள்ள நிலையில் இந்தக் குற்றச்சாட்டுக்கள் மீளவும் கிளப்பப் படுகின்றன.

விஞ்ஞான, தொழில்நுட்ப அமைச்சரும் ஜாதிக ஹெல உறுமயவின் முன்னணி தலைவர்களில் ஒருவருமான பாட்டலி சம்பிக்க குணவர்தனவே இந்த விடயத்தை முதலில் அமைச்சர்கள் கூட்டத்தில் கிளப்பினார். அவருடன் அமைச்சர் விமல் வீரவன்சவும் சேர்ந்து கொண்டார். ஆனால் அமைச்சர் ஹக்கீம் குற்றச்சாட்டுக்களை எதிர்த்துப் போராடியதாகவும் தமது கட்சி சில கொள்கைகளைக் கொண்டிருப்பதாகவும் எடுத்துரைத்ததாக நம்பகமான அமைச்சரவை வட்டாரங்கள் தெரிவித்தன. தமது கட்சியிலுள்ள சிலர் முஸ்லிம்கள் மீதான தாக்குதல்களை தீவிரவாத அமைப்புகள் நடத்தியிருப்பது குறித்து கவலை கொண்டிருப்பதாகவும் தெரிவித்துள்ள அமைச்சர் ஹக்கீம் முஸ்லிம் அல்லாத சில வட்டாரங்களிலும் கூட இது கவலையை ஏற்படுத்தியிருக்கிறது என்பதும் உண்மை நிலைதான் என்று அவர் எடுத்துக் கூறியிருந்தார். முஸ்லிம் காங்கிரஸில் இருப்பவர்களை விட வேறு சில உறுப்பினர்கள் இதை விட பாரதூரமான பிரச்சினைகளை உருவாக்கியிருக்கிறார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒரு சம்பவத்தில் வேறு ஒரு முஸ்லிம் தரப்பினரின் கருத்துக்களை அறிவதற்கு வெளியுறவு அமைச்சர் ஜி.எல். பீரிஸ் அந்தக் குழுவினருடன் சந்திப்பை நடத்தியிருந்தார். என்பதையும் ஹக்கீம் சுட்டிக்காட்டியிருந்தார். சமய சகிப்புத்தன்மையில்லாமை மற்றும் தாக்குதல்கள் குறித்து பல வெளிநாட்டு ஊடக அறிக்கைகள் வெளிவந்துள்ளன என்று தெரிவித்த அமைச்சர் எல்லாவற்றையும் தம்மால் மறைத்த வைக்க முடியாதென்று கூறி அது ஒரு கோப்பை சோற்றில் முழு பூசணிக்காய் ஒன்றை மறைக்க முயல்வது போலிருக்கும் என்றும் விளக்கமளித்தார். ஆனால் அவரை எந்த ஒரு அமைச்சரும் ஆதரித்துப் பேசியதாகத் தெரியவில்லை. இருந்தாலும் கூட்டம் முடிந்த பின் இந்த விடயத்தை பெரிதாக [illegible] கொள்ள வேண்டாம் என்று சிரேஷ்ட அமைச்சர்கள் அவருக்கு ஆலோசனை வழங்கிக் கொண்டிருந்தது தெரிந்தது. வேறு பலர் அமைச்சரவையில் இனிமேலும் அவருக்கு இடம் கிடையாது என்று பேசிக்கொண்டதாகவும் தெரிகின்றது.

இலங்கை முஸ்லிம் காங்கிரஸ்க்கும் அதன் தலைவருக்கும் எதிராக ஜனாதிபதி அமைச்சரவையில் வைத்து கடின வார்த்தைகளால் பேசியிருப்பது இது முதல் தடவையன்று.


முஸ்லிம்கள் மற்றும் அவர்களின் நிறுவனங்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டிருப்பது தொடர்பாக மேற்காசிய நாடுகளில் பரப்புரைகள் இடம்பெற்றிருப்பது காரணமாக ஜனாதிபதி சினமுற்றுள்ளார். முதல் தடவை ஹக்கீம் நவிப்பிள்ளைக்கு அறிக்கையொன்றை கையளித்தாரா என்பதை அறிவதற்காக ஜனாதிபதி அவருக்கு தொலைபேசியில் அழைப்பு விடுத்திருந்தார். அவ்வாறான பரப்புரைகளில் தமது கட்சிக்கு எந்தவித சம்பந்தமும் இல்லையென்று அமைச்சர் மறுத்திருந்தார். பெப்ரவரி 13 ஆம் திகதியும் அமைச்சரவையில் இந்த விடயம் எழுப்பப்பட்டிருந்தது. பின்னர் முஸ்லிம் நிறுவனங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளமை தொடர்பாக ஆவணம் ஒன்று முஸ்லிம் காங்கிரஸினால் விநியோகிக்கப்பட்டிருப்பது தொடர்பாக ஜனாதிபதி கேள்வி எழுப்பினார். மேற்கு ஆஸிய நாடுகளில் குறிப்பாக சவூதி அரேபியாவும் குவைத்தும் ஜெனிவாவில் மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா கொண்டுவரவிருக்கும் தீர்மானத்தை ஆதரிக்கும் நிலைக்கு சென்றிருப்பதன் பின்னணியில் முஸ்லிம் காங்கிரஸ் பரப்புரைகள் இருந்துள்ளமைதான் ஜனாதிபதியின் கோபத்துக்கு காரணம் என்று தெரிகின்றது. கடந்த முறை அமெரிக்க தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்திருந்த ஐக்கிய அரபு எமிரேட்ஸின் நிலைப்பாடு இன்னமும் சரியாகத் தெரியாமல் இருக்கின்றது.

இலங்கை மீது பொருளாதாரத் தடை வரலாம் என்ற பிரச்சினை எழுந்த போது மனித உரிமைகள் சபை மூலமாக பொருளாதாரத் தடையொன்று வருவதற்கு சாத்தியமில்லை. இந்த விடயம் பொது மக்களுக்கு விளங்கப்படுத்த வேண்டும் என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க கூறினார். முன்பு ஜி எஸ் பி பிளஸ் திரும்பப் பெறப்பட்டமை போன்ற ஐரோப்பிய யூனியன் பொருளாதாரத் தடை ஏற்படுத்தப்பட்டமை பற்றி ராஜபக்ஷ குறிப்பிட்டார். என்னைப் பொறுத்தவரை அப்படி ஒன்றும் நடக்கும் என்று தோன்றவில்லை என்று கூறிய ஜனாதிபதி அரச நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கருத்தரங்குகளை நடத்தி பொருளாதாரத் தடை பற்றி அவர்களுக்கு விளக்கமளிக்கும்படி பிரதம கொறடா தினேஷ் குணவர்த்தனாவை கேட்டுக் கொண்டார். பொதுக் கூட்டங்களில் பலவாறு அவர்கள் கருத்துக்களை வெளியிடாமலிருக்கச் செய்வதற்கு இது அவசியம் என்றார்.

### மாணவர்கள் தனியாரால் தூண்டப்படுவது

சில பாடசாலை மாணவர்கள் வெளியாரால் அதிபர்களுக்கு எதிராக முரண்படும்படியாகத் தூண்டப்படுகிறார்கள் என்று கூறி சில பத்திரிகை செய்திகளையும் வாசித்துக் காட்டினார் கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன.

பாடசாலைகளில் அதிபர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள், பகுதி முதியவர்கள் மற்றும் புத்திஜீவிகள் அடங்கிய குழுக்களை அமைப்பதற்கு தாம் உத்தேசித்திருப்பதாகத் தெரிவித்தார். இந்தக் குழுக்கள் பாடசாலை மாணவர்களின் செயற்பாடுகளை அடுத்த 52 வாரங்களுக்கு கண்காணிப்பு செய்வார்கள் என்றும் தெரிவித்தார்.



அதன் பின்னர் தேர்தல் தொடர்பாக கருத்து வெளியிட்ட ஜனாதிபதி அது 2016 ஆம் ஆண்டுதான் நடைபெறும் . அதற்கான முடிவும் எடுத்தாகிவிட்டது என்றார். ஆனால் எந்தத் தேர்தல் ஜனாதிபதி தேர்தலா, நாடாளுமன்றத் தேர்தலா என்பதைக் அவர் விளக்கமாக கூறவில்லை.

### இந்திய வீடுகளின் பகிர்வு பற்றி அமைச்சர் பதியுதீன்

மன்னார் மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்யும் அமைச்சர் றிஷாத் பதியுதீன் இந்திய வீடுகள் பகிர்ந்தளிக்கப்படும் இடம்பெயர்ந்த மக்கள் பற்றிய பிரச்சினையொன்றைக் கிளப்பினார். அப்படியானவர்களின் பெயர்ப்பட்டியலொன்றை இந்திய ஸ்தானிகர் வலியுறுத்துகிறார் என்றார் பதியுதீன். இந்த விடயம் முற்றிலும் இலங்கை அரசுக்குரியது. இதில் இந்திய ஸ்தானிகர் தலையிடக் கூடாது என்றார் அவர்.

இந்திய ஸ்தானிகரை அழைத்து விடயத்தை தெளிவுபடுத்திக் கொள்ளுமாறு வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸை அறிவுறுத்தினார் ஜனாதிபதி. அவர் மேலும் கூறுகையில்; இந்தியாவில் இது தேர்தல் காலம். இந்தியா தொடர்பான விடயங்களைக் கையாளும் போது இது மனதில் கொள்ளப்பட வேண்டும் - என்றார்.

பதியுதீன் முன்னர் தமது பட்டியலொன்றின் படி வீடுகளை வழங்கும்படி இந்திய ஸ்தானிகரிடம் கேட்டிருந்தார். ஆனால் அது நிராகரிக்கப்பட்டது. அதனால் பதியுதீன் நேரடியாக பாகிஸ்தான் பிரதமருக்கு எழுதி இந்தியர்கள் பாகு காட்டுவதாகத் தெரிவித்து முஸ்லிம்களுக்கு வீடுகள் வழங்க உதவும்படி கேட்டிருந்தார்.

வரும் நாள்களில் ராஜபக்ஷ மியான்மார் தலைநகரில் இந்திய பிரதம மந்திரியைச் சந்திக்கவிருக்கிறார். பல் பிராந்திய மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளச் செல்லும்போது இந்தச் சந்திப்பு புற நிலையில் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தியா, மியான்மார், தாய்லாந்து, பூட்டான், நேபால் ஆகிய நாடுகளும் இதில் கலந்து கொள்ளவிருக்கின்றன. மஹிந்த நாடு திரும்பியதன் பின்னர் பாதுகாப்புத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இந்தியாவுக்குச் செல்லவிருக்கிறார். இந்தியா, மாலைதீவுகள் மற்றும் இலங்கை நாடுகளின் முத்தரப்பு பாதுகாப்புத் தெர்டர்பான வருடாந்த சந்திப்பாகும் இது. இந்திய பாதுகாப்புத்துறை ஆலோசகர் சிவ்சங்கர் மேனனையும் அவர் சந்தித்துப் பேசவிருக்கிறார். இதற்கிடையில் பொதுநலவாய மாநாடு ஒன்றுக்காக லண்டன் செல்லவிருந்த தமது பயணத்தை ஜனாதிபதி கைவிட்டிருக்கிறார். வரும் செவ்வாயன்று அமெரிக்க தெற்கு மற்றும் மத்திய விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் நிஷாதேசாய் பிஸ்வால் புதுடில்லிக்கு வருகிறார். இரு தரப்பு மற்றும் பிராந்திய விவகாரங்கள் தொடர்பாக அவரது பிரயாணம் அமைவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயல்களுக்கு நன்மையும் மக்களுக்கு தொல்லையும் தரும் நந்தாவில் குளம்

லக்ஸ்மன்



கொக்குவில் பகுதியில்உள்ளவயல்களின் விளைச்சலுக்கு முக்கியமான காரணியாக உள்ள நந்தாவில் குளம் மாரி காலத்தில் மக்களுக்குத் தொல்லை தரும் ஒன்றாகவும் அவர்களைக் குடிபெயர வைக்கும் வல்லமை கொண்டதாகவும் அமைந்துள்ளது. இவ்வாறு அந்தப் பகுதி மக்கள் கூறுகின்றார்கள். இந்தக் குளம் தற்போது அணை கட்டப்பட்டுப் புனரமைக்கப் பட்டிருந்தாலும் மழை காலத்தில் இடப்பெயர்வுகளை ஏற்படுத்தும் தனது வித்தையைக் கைவிடவில்லை. இந்தமுறை மழையின்மை காரணமாக வீட்டை விட்டு வெளியேற வேண்டிய அவலநிலை இடம் பெறவில்லை. ஆனால் நெற் பயிர்களின் விளைச் சலில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக வருத்தத்துடன் தெரிவிக்கின்றனர். குளத்தின் சுற்றாடலில் உள்ள மக்கள் குளத்தை அண்டிய பகுதி களில் டெங்கு நோய்களை உரு வாக்கும் நுளம்புகள் பெருகக் கூடிய சூழ்நிலை நிலவுவது குறித்து அச்சம் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் குளத்தை அண்டிய பகுதியில் உள்ள ஒருவர் டெங்கின் தாக்கத்துக்கு உள்ளானதே இதற்கான காரணமாகும். ஆனால் அந்தப் பகுதியில் புகையூட்டல்கள் நடவடிக்கை இடம்பெற்று அது கட்டுப்படுத்தப்பட்டதையும் அவர்கள் ஒப்புக்கொள்கிறார்கள். பெரிய அளவில் பற்றைகள் இல்லாவிடினும் ஆங்காங்கே சிறிய பற்றைகளும் இருக்கத்தான் செய்கின்றன. சிறிய அளவில் காணப்படும் இவற்றைக் காணி உரிமையாளர்களும், பொது அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் சிரமதான அடிப்படையில் துப்புரவு செய்தால் பிரச்சினை தீர்ந்துவிடும். மேலும் சுகாதாரத்துக்கு இடையூறு எனக் கருதினால் மக்கள் தாமாக முன்வந்து அவற்றை அகற்றிக் கொள்ள முடியும். பெரிய அளவில் பற்றைகள் வளர்ந்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தான் கவனிக்க வேண்டும் என்ற நிலை அந்தப் பகுதியில் காணப்படவில்லை.

மழை காலங்களில் அதிகாரிகள் இந்தப் பகுதியில் கவனம் செலுத்துவது அவசியமாகும். மாரியில் பெய்யும் மழை காரணமாக வெள்ளம் ஏற்பட்டு அங்கிருந்து இடம் பெயர வேண்டிய நிலை அந்தப் பகுதி மக்களுக்கு ஏற்படுகின்றது. மழை காலங்களில் குளத்தின் சுற்றாடலில் மட்டுமன்றி நந்தாவில் அம்மன் கோயில் வரையான பகுதிகளிலும் மூன்று அல்லது நான்கு அடி உயரத்துக்கு வெள்ளம் தேங்கி நிற்பது வழமையாகும். இதனால் மாரி காலத்தின் போது வீடுகளை விட்டு இடம்பெயரும் மக்கள் தை.மாசி மாதத்தின் பின்னரேயே தமது வீடுகளுக்குத் திரும்புவதாகச் சொல்லப்படுகின்றது.

நந்தாவில் குளப்படுகைகளுக்கு மேல் தாவடிச் சந்திக்கு அருகாமை வரை சுமார் 45 க்கும் அதிகமான குடும்பங்கள் குடியிருப்பதாகக் கூறப் படுகின்றது.

மழைக் காலங்களில் நீர் வீதியிலுள்ள வாய்க்காலுக்குள் வழிந்து அதனூடாக நந்தாவில் குளத்துக்கும் மிகுதி நீர் கீழ்நோக்கி காக்கை தீவுக்கும் செல்கிறது. இந்தப் பகுதியில் நீர் விரைவாக வடிவதற்கு வாய்க்காலின் கொள்ளளவு போதாத நிலையிலும், வண்டல்மண், புல்பூண்டுகளால் நிரம்பி விடுவதாலும் அவற்றில் நீர் தேங்கி விடுவதால் மக்கள் கஷ்டங்களை எதிர்கொள்வதாகவும் சொல்லப்படுகின்றது.

வாய்க்கால்களில் காணப்படும் வண்டல் அகற்றப்படுவதுடன் வடிகால்களை ஆழப்படுத்தித் தடுப்புச் சுவர்களையும் உயரமாக அமைப்பதன் மூலமாக நீர் சுலபமாக வடிந்து செல்லும் என்பது விவரம் தெரிந்தவர்களின் கருத்தாக உள்ளது. குளத்துக்கு நீரை விரைவாகக் கொண்டு செல்லக் கூடியதாக வீதிகளுக்குக் குறுக்கே தேவையான பகுதிகளில் மதகுகளை அமைக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. நந்தாவில் குளத்திலிருந்து காக்கைதீவு வரை நீர் சுலபமாகப் பாய்வதற்குரிய வகையில் வாய்க்கால்களைப் புனரமைக்க வேண்டும் எனவும் மக்கள் தெரிவிக் கின்றனர்.

குளத்தின் வாய்க்கால்களிலும் ஆங்காங்கே புல்பூண்டுகள், பற்றைகள் என்பன காணப்படுகின்றன. இந்த வாய்க்கால்களைத் துப்புரவு செய்ய வேண்டியது கமநல சேவைகள் திணைக்களமா அல்லது வீதி அபி விருத்தி அதிகார சபையா என்பதில் பொதுமக்களுக்குத் தெளிவில்லாத நிலை காணப்படுகின்றது. வாய்க்காலின் துப்புரவைப் பொறுத்தவரை அது தனது கட்டுப்பாட்டில் இல்லை என்கிறது நல்லூர் பிரதேச சபை. நீர் வெளியேறுவதற்கும் ஆபத்தான நோய்களில் இருந்து மக்களை பாது காக்கவும் கூடியதாக இவற்றுக்குப் பொறுப்பான திணைக்களங்கள் ஒரு தடவை இந்தப் பிரதேசத்திலும் தமது பார்வையைத் திருப்பினால் நல்லது.

குளத்தின் வாய்க்கால்களிலும் ஆங்காங்கே புல்பூண்டுகள், பற்றைகள் என்பன காணப்படுகின்றன. இந்த வாய்க்கால்களைத் துப்புரவு செய்ய வேண்டியது கமநல சேவைகள் திணைக்களமா அல்லது வீதி அபி விருத்தி அதிகார சபையா என்பதில் பொதுமக்களுக்குத் தெளிவில்லாத நிலை காணப்படுகின்றது. வாய்க்காலின் துப்புரவைப் பொறுத்தவரை அது தனது கட்டுப்பாட்டில் இல்லை என்கிறது நல்லூர் பிரதேச சபை. நீர் வெளியேறுவதற்கும் ஆபத்தான நோய்களில் இருந்து மக்களை பாது காக்கவும் கூடியதாக இவற்றுக்குப் பொறுப்பான திணைக்களங்கள் ஒரு தடவை இந்தப் பிரதேசத்திலும் தமது பார்வையைத் திருப்பினால் நல்லது.

மேலும் இந்தக் குளத்தின் மேற்குப் பகுதியில் கள் விற்பனை இடம் பெறுவதாகவும் அதனால் குளத்துக்குப் பக்கத்தில் குடியிருக்கும் குடும்பங்கள் 'பெருங்குடி' மக்களால் பெரும் சிரமங்களை எதிர் கொள்வதாகவும் தெரிவிக்கப் பட்டது. இங்குள்ள சிறிய வீதிகளில் ஒட்டோ மற்றும் வாகனங்கள் நிறுத்தி வைப்பதைக் காண முடிகின்றது.

வீடுகளுக்கு முன்பாக இந்த வாகனங்களை நிறுத்திவிட்டு அவற்றில் வருபவர்கள் கள்ளை அருந்திய பின்னர் போதை தலைக்கேறியதால் உதிர்க்கும் வாசகங்கள் காது கொடுத்துக் கேட்கமுடியாத அளவுக்கு இருப்பதால் தாம் தினமும் அவஸ்தைப்படுவதாக அங்கு வசிப்பவர்கள் தெரிவிக்கின்றனர்.

## மார்கழி மாதத்தில் பஞ்சபுராணம், படிக்கலாமா?...

வாசகர் திருமுகம்

பன்னிரண்டு மாதங்களில் மார்கழி மாதம் மிகவும் விசேடமானது. இந்த மாதத்தில் மணிவாசக சுவாமிகள் அருளிச் செய்த திருவாசகப் பதிகங்களுக்கே முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும். ஆலயங்களாக இருந்தாலும் சரி. வேறு நிகழ்வுகளாக இருந்தாலும் சரி திருவாசகப் பதிகங்களையே ஓத வேண்டும். இன்றும் எத்தனையோ ஆலயங்களில் மார்கழி மாதத்தில் பஞ்சபுராணம் படிக்கின்றார்கள். இது தவறு. அர்ச்சகர்களும், சைவ சமய சொற்பொழிவாளர்களும் இதைச் சுட்டி காட்ட வேண்டும் எத்தனையோ ஆலயங்களில் ஒலிப்பெருக்கியில் விடியற் காலையில் சுப்ரபாதம் ஒலிக்க விடுகின்றார்கள். திருவெம்பாவைக் காலத்தில் வீதிப் பஜனைசெய்யும் குழுவினரும் "பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்" அன்பருக்கு அன்பனே வா வா முருகா" என்றும் இன்னும் எத்தனையோ பாடல்களைப் படித்துச் செல்கின்றார்கள். அது அவர்களுடைய அறியாத் தன்மையாகும். மாணிக்க வாசக சுவாமிகளின் பதிகங்களில் விடியற் காலையில் இறைவனை துயில் எழுப்ப திருப்பள்ளிஎழுச்சியை அழகாகப் பாடியிருக்கிறார்கள். நமச்சிவாய பதிகம் அச்சோப்பதிகம், திருபொற் சுண்ணம், திருபொன்னூஞ்சல் என எத்தனையோ பதிகங்களை மிகவும் அற்புதமாகப் பாடியிருக்கின்றார். இந்தப் பதிகங்களை, பஜனைக் குழுவினர் படித்தவாறு செல்லலாம். திருவாசகத்தைத் தவிர வேறு பதிகங்களுக்கும் இந்த மார்கழி மாதத்துக்கும் எதுவித தொடர்புகளுமில்லை. இந்த மாதத்தில் ஆலயங்கள், சமய நிறுவனங்களில் திருவாசக முற்று மோதல் நிகழ்வைத் திறம்படச் செய்கின்றார்கள், ஏன்?... திருவாசகத்துக்கு மார்கழி மாதமே உரியது என்ற படியால் தானே! வெள்ளைக்கார பாதிரியார் கூட திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். இவ்வளவு மகிமை பொருந்திய தேனினும் இனிய திருவாசகப் பதிகங்களை ஓதி யாவரும் இன்புற்று பேரானந்த பெருவாழ்வு வாழ்வோமாக.

"நமச்சிவாய வாழ்க! நாதன் தாழ் வாழ்க!!

"மாணிக்க வாசக சுவாமிகள் பொற்பாதம் சரணம்"

*சங்கானையூர்*
*நி.சிவதாண்டவன்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



மேடம்: அதிகாரப்பூர்வமாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்ப்பீர்கள்.



**இடபம்**: பளிச்சென்று பேசி எல்லோரையும் கவருவீர்கள். உத்தியோகத்தில் சகஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். பிரபலங் களின் சந்திப்பு நிகழும். அரசகாரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். உறவினர்களால் இருந்துவந்த மனக்கசப்புகள் விலகும்.



**மிதுனம்**: தைரியமான முடிவுகளை எடுத்து வெற்றி காண்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பீர்கள். நண்பர்களின் சந்திப்பு நிகழும்.



**கடகம்**: சிக்கனமாக இருக்க வேண்டும் என்று நினைத்தாலும், அத்தியாவசியச் செலவுகள் அதிகரிக்கும். மற்றவர்களுடன் உங்களை ஒப்பிட்டுக் கொண்டிருக்க வேண்டாம். உங்களின் அணுகுமுறையை மாற்றுங்கள்.



**சிங்கம்**: யோகா, தியானத்தில் மனம் லயிக்கும். புது வேலை கிடைக்கும். வியாபாரத்தில் எதிர்பாராத இலாபம் உண்டு. உத்தியோகத்தில் மேல்திகாரி ஆதரிப்பார். எதிலும் நிதானித்து செயற்படுங்கள்.



**கன்னி**: மனக்குழப்பங்கள் விலகும். வெளியூரிலிருந்து உறவினர்கள், நண்பர்களின் வருகையுண்டு. உத்தியோகத்தில் வேலைப்பளு குறையும். எதிர்பார்த்த இடத்திலிருந்து உதவி கிடைக்கும். அரச வேலைகள் சுமுகமாக முடியும்.



**துலாம்**: வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். மனதுக்குப் பிடித்தவர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். மன நிறைவுடன் சில வேலைகளைச் செய்து முடிப்பீர்கள். வெளியூரிலிருந்து உறவினர்கள், நண்பர்களின் வருகையுண்டு.



**விருச்சிகம்**: சோர்வாக இருந்த நீங்கள் சுறுசுறுப்படைவீர்கள். சிந்தனைத்திறன் அதிகரிக்கும். வியாபார ரீதியாக முக்கிய பிரமுகர்களைச் சந்திப்பீர்கள். அரச காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். மாணவர்கள் பரபரப்புடன் காணப்படுவார்கள்.



**தனுசு**: சோர்வு நீங்கிப் புத்துணர்ச்சியுடன் காணப்படுவீர்கள். நீங்கள் பார்க்க நினைத்த நபரே உங்களை வந்து சந்தித்து மகிழ்ச்சியில் ஆழ்த்துவார். பணவரவு சீராக இருக்கும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள்.



**மகரம்**: துடிப்புடன் காணப்படுவீர்கள். எதிரிகளின் கொட்டம் அடங்கும். முன்கோபம் குறையும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். தாயாரின் நீண்டநாள் கோரிக்கைகளைப் பூர்த்தி செய்வீர்கள்.



**கும்பம்**: திட்டமிடாத செலவுகளும், பயணங்களும் குறுக்கிட்டாலும் சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள். சிலவற்றுக்கு உங்கள் அவசர முடிவுகள் தான் காரணம் என்பதை உணர்வீர்கள். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களைக் கற்றுக் கொள்வீர்கள்.



**மீனம்**: வெளிவட்டாரத்தில் நிதானம் அவசியம். வியாபாரம் சுமாராக இருக்கும். உத்தியோகத்தில் பொறுப்புகள் அதிகரிக்கும். எதிலும் எச்சரிக்கையுடன் செயற்படுங்கள்.

## நாளை

**மாசி-20 செவ்வாய்க்கிழமை | 04.03.2014**

திதி: திருதியை மு.ப.10.03 வரை
நட்சத்திரம்: ரேவதி
மா.06.09 வரை

சுபநேரம்: 10.56-12.26 வரை
இராகுகாலம்:.03.26-04.56 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து... விடுதலை பெறுவது எப்படி?



இயற்கையில் உள்ளவை எல்லாம் ஒரு நியதிப்படியே இயங்குகின்றன; எதுவும் இதற்கு விதிவிலக்கல்ல. மனமும் வெளி உலகிலுள்ள அனைத்தும் நியதியால் ஆளப்பட்டும், அடக்கப்பட்டும் வருகின்றன.

அக இயற்கை, புற இயற்கை, மனம், ஜடம் ஆகிய எல்லாம் காலம், இடம் எனும் இரண்டிற்கும் உள்ளடங்கியவை; காரண, காரிய நியதிக்குக் கட்டுப்பட்டவை.

மனம் விடுதலை பெறுவது என்பது ஒரு கற்பனை. அது ஒரு நியதிக்குக் கட்டுப்பட்டு இயங்கும்போது, எப்படிச் சுதந்திரமாக இருக்க முடியும்.

கர்மபலன் என்பது காரணகாரிய நியதியேயாகும். நாம் சுதந்திரமுள்ளவர்களாக வேண்டும். எப்பொழுதும் சுதந்திரம் உள்ளவர்களாகவே இருக்கின்றோம். அதை அறிதலே நாம் செய்ய வேண்டிய பணி. அடிமைத்தனம் எல்லாவற்றையும், பந்தபாசங்கள் எல்லாவற்றையும் விட்டொழிக்க வேண்டும். இந்த உலகுடனும், உலகத்து மாந்தருடனும் உலகப் பொருள்களுடனும் நமக்கு இருக்கும் பற்றை அறவே ஒழித்துவிட வேண்டும். அவற்றுடன் வாழ்வு, சுவர்க்கம், சந்தோசம் என்பன போன்ற எண்ணங்களையும் அறவே ஒழித்துவிட வேண்டும்.

ஆசையினால் இந்த உலகத்தில் நாம் கட்டுண்டு இருக்கிறோம். இதே ஆசையால்தான் கடவுள், சுவர்க்கம், தேவர் ஆகியவர்களுக்கும் நாம் கட்டுண்டு இருக்கின்றோம். மனிதர்களுக்காயினும் சரி, தேவர்களுக்காயினும் சரி, கடவுளுக்காயினும் சரி – எவர்க்கு அடிமையாக இருந்தாலும் அடிமை அடிமையே.

சுவர்க்கத்தைப் பற்றிய எண்ணம் நீங்க வேண்டும். சுவர்க்கம் என்ற ஒன்று இருக்கிறது. மரணத்தின் பின்னர் நல்லவர்கள் அங்கே நிரந்தரமாக மகிழ்ச்சியுடன் வாழ்கிறார்கள் என்பதெல்லாம் பகற்கனவு; துளியும் கருத்தற்றவை; பொருளற்றவை. எங்கே மகிழ்ச்சி இருக்கிறதோ, அங்கே எப்போதாவது ஒரு சமயம் துன்பம் தொடர்வது உறுதி. எங்கே இன்பம் இருக்கிறதோ, அங்கே துன்பமும் இருந்தே தீர வேண்டும். இது உறுதி; முக்காலும் உறுதி. ஒவ்வொரு செயலும் ஏதாவது ஒரு பிரதிபலன் கொண்டதே.

# இறந்ததாக கருதப்பட்டவர் மீண்டும் உயிருடன் வந்தார்



இறந்ததாகக் கருதப்பட்டு சவப்பெட்டியில் அடைக்கப்பட்ட நபர் மீண்டும் உயிருடன் எழும்பிய சம்பவம் அமெரிக்காவில் இடம்பெற்றுள்ளது.

அமெரிக்காவின் மிசிசிப்பி பகுதியில் வசித்து வந்த வோல்டர் வில்லியம்ஸ் (வயது78) என்பவர் சில தினங்களுக்கு முன் திடீரென்று மூச்சுப்பேச்சின்றி கிடந்தார்.

உடனே அவர் இறந்து விட்டதாகக் கருதிய உறவினர்கள், வோல்டரின் உடலைச் சவப்பெட்டியில் வைத்து நன்றாக இழுத்து மூடிவைத்தனர். பின்னர் இறுதிச் சடங்கு நடக்கும் இடத்துக்குத் தூக்கிச் சென்று ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தனர்.

அப்போது சவப்பெட்டிக்குள் இருந்து கையால் குத்துவிடுவதைக் கவனித்த ஊழியர்கள் அதிர்ச்சி அடைந்தனர். உடனடியாகப் பெட்டியைத் திறந்த போது வோல்டர் வில்லியம்ஸ் உயிருடன் இருப்பது தெரிய வந்தது. அதன்பின் அவரை மருத்துவமனையில் அனுமதித்தனர்.

இந்தச்சம்பவம் பற்றி மருத்துவர் கூறுகையில், இது ஓர் ஆச்சரிய சம்பவம் தான். இவருடைய பேஸ்மேக்கர்(இதய துடிப்பை சீராக இயங்க வைக்கும் சாதனம்) சற்று நின்று விட்டு பிறகு மீண்டும் இயங்கியுள்ளதே குழப்பத்துக்கு காரணம் என்று தெரிவித்துள்ளார்.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 4 | 3 | | | | 9 | 6 | |
| 8 | | | 3 | | 6 | | 7 | |
| 6 | 2 | 1 | 4 | | | | | |
| 9 | | 6 | | 3 | | | 4 | 5 |
| | | | 1 | | 5 | | | |
| 3 | 1 | | | 9 | | 2 | | 7 |
| | | | | | 8 | 6 | 2 | 4 |
| | 6 | | 7 | | 3 | | | 9 |
| | 9 | 4 | | | | 7 | 3 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 4 | 1 | 9 | 3 | 7 | 2 | 5 | 8 |
| 2 | 9 | 8 | 5 | 4 | 6 | 1 | 7 | 3 |
| 5 | 7 | 3 | 1 | 8 | 2 | 9 | 4 | 6 |
| 3 | 5 | 6 | 2 | 9 | 1 | 7 | 8 | 4 |
| 4 | 1 | 9 | 7 | 5 | 8 | 6 | 3 | 2 |
| 8 | 2 | 7 | 4 | 6 | 3 | 5 | 9 | 1 |
| 1 | 8 | 5 | 3 | 2 | 9 | 4 | 6 | 7 |
| 7 | 6 | 4 | 8 | 1 | 5 | 3 | 2 | 9 |
| 9 | 3 | 2 | 6 | 7 | 4 | 8 | 1 | 5 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண்கள் மீதான வன்முறை

அனுஜன்

எனக்குத் தெரிந்து சில ஆண்டுகளுக்கு முன்பாகத்தான் இங்கே பெண்கள் தினம் என ஒன்று இருப்பது தெரிய வந்தது. அன்றைய தினம் குறுஞ்செய்திகளும் மின்மடல்களும் அழைப்புகளுமென வாழ்த்துக்களுடன் நன்றாகத் தான் செல்கின்றது. பெண்கள் தினத்திற்கென பிரத்தியேக விற்பனைகளும் வந்தாயிற்று. ஆடைகளிலிருந்து கணிப்பொறி வரை. தொலைக் காட்சி சிறப்பு நிகழ்ச்சிகள். அலுவலகத்தில் கொண்டாட்டங்கள். போட்டிகள் என எதற்கும் குறைவில்லை.

இதுவும் மேலை நாட்டுக் கலாசாரம் எனக் கொடி தூக்குபவர்களும், நம் நாட்டில் பெண்களுக்கு என்ன மரியாதைக்குறைவு இருக்கிறது ? அனைத்திலும் பெண்கள் தானே அங்கம் வகிக்கின்றனர் என வாதிடுபவர்களும் இல்லாமல் இல்லை. தொலைக்காட்சியில் எப்போதாவது பெண்களின் பிரச்சினை தொடர்பாக அலசும்போது ஒளிபரப்பை மாற்றிவிடுபவர்களும்இல்லாமல்இல்லை. சென்ற நூற்றாண்டின் கடைசி பத்து, இருபது வருடங்களுடன் ஒப்பிடும் போது பெண்களிடம் அசாதரணமான வளர்ச்சியைக் காணமுடிகிறது இன்னொருபுறம், பெண்கள் மீதான வன்முறை நிகழ்வுகள் ஒவ்வொரு மூன்று நிமிடங்களுக்கு ஒருமுறை நிகழ்த்தப்படுகிறது. ஏனிந்த முரண்பாடு? நடப்பதில் எதை நம்புவது. எந்தச் செய்தித் தாளையேனும் எடுத்து வாசித்துப் பார்த்தால் எந்த மூலையிலேனும் பெண்கள் சாதித்த கதை தெரியலாம். இதில் பரவலாகத் தெரிவது என்னவெனச் சற்றுப் பொறுமையாகப் புரட்டிப் பார்த்தால். எத்தனை எத்தனை சிக்கல்கள் பெண்ணாய் இருப்பது என்ற ஒரே காரணத்தினால் ஏற்படுகின்றன என்பது புரியும்.

ஒரு நீதிமன்றத் தீர்ப்பு. கோமாவில் இருக்கும் அறுபது வயதாகும் ஒரு மூதாட்டியை கருணைக்கொலை செய்ய நீதின்றம் மறுப்பு. அதிலென்ன சிக்கல்? நல்ல தீர்ப்பு தானே என யாரும் யோசிக்கும் முன்னரே தொடர்கிறது அவரின் கதை. தாதியாக வேலை செய்து வந்த அவர் இருபத்துமூன்று வயதில் ஒரு துப்புரவுத் தொழிலாளியால் பாலியல் வன்முறைக்கு ஆளாகினார். அவர் எதிர்க்கக்கூடாது என்பதற்காக நாய்களைக் கட்டும் இரும்புச் சங்கிலியில் அவர் கழுத்தை நெரித்திருக்கிறான். மூளைக்குச் செல்லும் நரம்புகள் பாதிக்கப்பட்டு இத்தனை வருடங்களாகக் கோமாவில் கழிக்கும் அவரது வாழ்க்கையின் அவலம். கருணைக்கொலை செய்ய விண்ணப்பிக்கும் அளவுக்குச் சென்றுவிட்டது.

வெளியே தெரிவது மிகச்சில. யாரும் அறியாமல் நிகழ்த்தப்படும் கொடூரங்கள் பலப்பல. யாரும் அறியாமல் சிந்தப்படும் பெண்களின் கண்ணீர்த் துளிகளும் பல கோடி. மேற்கூறிய கடைநிலை வக்கிரங்கள் இல்லாமல், மிகச் சாதரணமாக நடந்துகொண்டிருக்கும் நிகழ்வுகள் பற்றி தனியே சொல்லவேண்டுமா என்ன? பொது இடங்களில் உரசும் உடல் ரீதியான செயல்களில் இருந்து மிக நுணுக்கமான உணர்வு ரீதியிலான செயல்கள் வரை. ஒன்றா இரண்டா ?

படித்தவர் படிக்காதவர் என்ற பாகுபாடே இல்லாமல் பொருந்தக் கூடிய சில விஷயங்கள் இவை. எத்தனைப் பெண்கள் இதெல்லாம் தேவையில்லை என்ற தன் குடும்பத்தின் கருத்துக்காக தங்கள் ஆசையை, கனவுகளை நொருங்கக் கொடுத்து வந்திருக்கிறார்கள். எத்தனை பெண்களின் நட்புவட்டங்கள் கணவனுக்குப் பிறகு காணாமலேயே போய்விடுகின்றன. எத்தனை பெண்களின் சின்னச் சின்ன ஆசைகள் கூட அநாவசியமாய் அவசியமற்றதாய் ஒதுக்கப்படுகின்றன. பெண்களாய் இருப்பதன் ஒரே காரணத்தினால் இளக்காரமாகப் பார்க்கப்பட்ட தருணங்கள் எத்தனை. அவளை நோக்கி வீசப்படும் கேள்விகள் எத்தனை? துளைக்கும் பார்வைகள் எத்தனை? அத்தனையையும் விட்டுக் கொடுத்து அவர்களையும் புன்னகையுடன் அரவணைத்துச் செல்லும் பெண்கள் எத்தனை பேர்?

ஆடை விடயங்களில் இன்னமும் கட்டுப்பாடுகளைச் சந்திக்கின்றது பெண்களின் மனநிலை. அரைகுறையாய் செல்வது சுதந்திரமா என வாதிக்க நான் இங்கே விரும்பவில்லை. இது அது தொடர்பானதும் இல்லை. மிகச் சாதாரண ஒரு விடயத்திற்குக்கூட ஒரு வரைமுறையின் கீழ் அடக்கியே வைக்கப்பட்டிருக்கும் பெண்ணின் மனநிலையிலிருந்து படித்துப் பாருங்கள் புரியும்.

# துணிவு கொள்வாய் பெண்ணே!

பெண் எனப்படுபவள் எதற்கும் ஆண்களைச் சார்ந்து நிற்கும் வழக்கத்தைக் கொண்டிருப்பதன் காரணமாகவே ஆணாதிக்கத்துக்கு உள்ளாக வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்படுகின்றாள். இதைவிடுத்து என்னாலும் தனித்து நிற்க முடியும் என்ற துணிவுடன் பெண் ஒருத்தி தனது சொந்தக் காலில் நிற்பதற்கான துணிவைக் கொண்டுவிட்டால் ஆண்களின் அதிகார பிடிக்குள்ளிலிருந்து விடுவிக்கப்படும் முதற்கட்டமாக இதனைக் கொள்ள முடியும். ஆனால் பெண்களில் பலர் இவ்வாறு முயற்சி செய்வதாகத் தெரியவில்லை. ஆணும் பெண்ணும் உலக வாழ்க்கைக்கு மிகவும் வேண்டியவர்களாகவே காணப்படுகின்றனர். இதில் இந்த இருவரில் ஒருவர் உயர்ந்தவர் என்ற பேச்சுக்கே இடமில்லை.

இந்த நிலையில ஆண்களை உயர்ந்த நிலையில் வைத்துப் போற்றுவதும் பெண்களை அடுத்த இடத்தில் வைத்து மதிப்பதும் எந்த வகையில் நியாயம் என்பது புரியவில்லை.

முன்னரெல்லாம் ஆண்கள் வெளியே சென்று பொருள்தேட பெண்கள் வீட்டில் தங்கியிருந்து வீட்டுக் காரியங்களை நிறைவேற்றி வைக்கும் வழக்கமே காணப்பட்டது. இதனால் தனது எந்தவிதமான தேவைக்கும் ஆண்களின் கைகளை எதிர்பார்த்துக் காத்திருக்கும் அவலநிலை பெண்களிடம் காணப்பட்டது. ஆனால் இன்று எவ்வளவோ மாற்றங்கள் ஏற்பட்டு விட்டன. பெண்கள் உயர்கல்வி கற்று உயர்ந்த பதவிகளில் அமர்ந்துள்ளனர். சில நாடுகளில் தலைமைப் பதவியில் கூட பெண்கள் இருப்பதைக் காண முடிகின்றது. மேலும் பெண்களும் ஆண்களுக்குச் சமனாக தொழில் புரிந்து சம்பாதிக்கின்றார்கள். இதனால் ஆண்களை எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டிய நிலை அவர்களுக்கு இல்லை. ஆனால் இந்த நிலையில் கூட பெண்ணானவள் ஆண்களின் அதிகாரங்களுக்கு அடிபணிந்து நிற்கவேண்டியதாக உள்ளமைதான் வேதனை தருகின்றது. இதற்குப் பெண்களின் துணிவு இன்மையை முக்கிய காரணமாகக் கூற முடியும்.

துணிவு படைத்த பெண்களை நெருங்குவதில் ஆண்கள் எபபோதுமே எச்சரிக்கையாக இருப்பார்கள். பெண்ணானவள் மீண்டும் மீண்டும் குனியும் போதுதான் ஆண்களும் தமது கைவரிசையைக் காட்ட முயல்வர்.

சில குடும்பங்களை நாம் பார்க்கும் போது அங்கு பெண்களின் ஆதிக்கம் காணப்படுகின்றது. ஆண்கள் அடங்கி ஒடுங்கிய நிலையில் காணப்படுகின்றனர்.



பிரேமா

இது அவர்களின் பலவீனமான மனநிலையையே எடுத்துக் காட்டுகின்றது. பெண்களுக்கு மதிப்பு வழங்குவது மேலும் அவர்களிடம் சரணாகதி அடைவது போதும் இந்த நிலையும் நல்லதல்ல. பெண்கள் ஆண்களுக்கு அடங்கியிருப்பது தவறு என்று கூறுவதை அவர்கள் ஆண்கள் மீது அதிகாரம் செலுத்த வேண்டும் என்று தவறாக அர்த்தம் கொள்ளக் கூடாது.

ஆகவே பெண்ணாகப் பிறந்தவள் முதலில் துணிவுள்ளவர்களாகத் தம்மை மாற்றிக்கொள்ள வேண்டும். தமது சொந்தக் காலில் நிற்கக் கூடிய வல்லமையைப் பெற்றிருக்க வேண்டும். ஆண்களுக்கு எப்போதுமே அடங்கியிருக்க வேண்டும் என்ற மனப்பான்மையிலிருந்து விடுபட வேண்டும். அப்போதுதான் அவளுக்கு ஆண்களிடமிருந்து உண்மையான சுதந்திரம் கிடைக்கும்.

# இழப்புகள்

உறக்கங்கள் பறிக்கப்படும்
ஒவ்வொரு நடுநிசிகளிலும்
உள் வாங்கும் சுவாசத்துடன்
ஒட்டிக் கொள்கிறது ஒரு மரண



பயம் !
மீதம் இருக்கும் வாழ்க்கை
எதற்கென்றே புரியாத
பூகம்பமாய்
இமை மூடி திறப்பதற்குள் மீண்டும்
ஓர் உறவின் உயிர் பிரியும் சத்தம்
என் செவிகளை துளைத்துக்
கொண்டிருக்கிறது.சொல்லி அழ
இயலாத
மரணங்கள். விம்மி விம்மி
வெளிவரும் கண்ணீர்த்துளிகள்
துடைப்பதற்கு கைகள்
விடுவிக்கப்படவில்லை.
தூண்டிலில் மாட்டிய மீனாய்
துன்புறுத்தலின் உச்சத்தில்
மீண்டும் மீள்கிறது கற்பையும்,
உறவையும் ஒன்றாய்
இழந்த கணங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல்

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி
## 2014 ஆம் வருடத்திற்கு தேவையான வழங்கல்கள் / சேவைகள்

01. கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவிற்குட்பட்ட வைத்தியசாலைகளிற்கு 2014 ஆம் ஆண்டுக்கான பின்வரும் வழங்கல்கள்/ சேவைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

**அ. சமைத்த உணவு வழங்கல்கள்**

**ஆ. அழுக்குத் துணிகள் சலவை செய்தல்.**

**இ. குடிநீர் விநியோகம்**

2014 ஏப்ரல் முதலாம் திகதி முதல் 2015 மார்ச் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கான இவ் வழங்கல்கள் சேவைகளுக்காக இலங்கையர் அல்லது இலங்கை வியாபார நிறுவனங்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. கேள்வி ஆவணங்கள் 05.03.2014 தொடக்கம் 12.03.2014ஆம் திகதி பிற்பகல் 3.00மணி வரையும் கிளிநொச்சியில் இயங்கும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் வழங்கப்படும். ஒரு வைத்தியசாலைக்கு/தொகுதிக்கு குறிப்பிட்ட ஒரு வழங்கல் சேவைக்கான ஒரு ஆவண தொகுதி மட்டுமே வழங்கப்படும்.

02. அரசாங்க ஒப்பந்தத்தை செய்ய முடியாதவாறு தடைசெய்யப்பட்டவர்களுக்கோ அல்லது தடைசெய்யப்பட்ட நிறுவனங்களுக்கோ கேள்விப் பத்திரங்கள் விநியோகிக்கப்படமாட்டா.

03. விண்ணப்பிக்கத் தகுதியானோர் கீழ்க் குறிப்பிடப்படும் தொகையை செலுத்துவதுடன் வழங்கல்கள்/சேவைகள் என்பவற்றுக்கான பெறுமதி ஆவணத்தையும் கிளிநொச்சியில் இயங்கும் கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் சமர்ப்பித்து கேள்வி ஆவணத்தைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் 19.03.2014 ஆம் திகதி பி.ப 2..30 மணிக்கு முன் கிடைக்கக்கூடியவாறு தலைவர், கேள்விச்சபை, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாக அலுவலக கேள்விப்பெட்டியிலோ இட முடியும். கேள்விகள் யாவும் பிற்பகல்.3.00 மணிக்குத் திறக்கப்படும்.

04. வைப்புத் தொகைகளும் ஆவணங்களும்

**அ. சமைத்த உணவு**

| வைத்தியசாலை | உணவு வகை | மீளளிக்கப்படாத வைப்புத் தொகை(ரூபா) | பெறுமதி ஆவணம் (ரூபா) |
|---|---|---|---|
| பிரதேச வைத்தியசாலை, தர்மபுரம் | சமைத்த உணவு | 1000.00 | 50,000.00 |
| பிரதேச வைத்தியசாலை, பூநகரி | சமைத்த உணவு | 1000.00 | 50,000.00 |
| பிரதேச வைத்தியசாலை, உருத்திரபுரம் | சமைத்த உணவு | 1000.00 | 50,000.00 |
| பிரதேச வைத்தியசாலை, பளை | சமைத்த உணவு | 1000.00 | 50,000.00 |
| பிரதேச வைத்தியசாலை, வேரவில் | சமைத்த உணவு | 1000.00 | 50,000.00 |
| பிரதேச வைத்தியசாலை, வட்டக்கச்சி | சமைத்த உணவு | 1000.00 | 40,000.00 |

**ஆ. அழுக்குத் துணிகள் சலவை செய்தல்**

| வைத்தியசாலை | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை (ரூபா) | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை (ரூபா) |
|---|---|---|
| மா.பொது.வைத்தியசாலை, கிளிநொச்சி. | 1000.00 | 50,000.00 |
| ஆதார வைத்தியசாலை,முழங்காவில், | 500.00 | 10,000.00 |
| பிரதேச வைத்தியசாலை, அக்கராயன்குளம், | 500.00 | 10,000.00 |
| பிரதேச வைத்தியசாலை, தர்மபுரம் | 500.00 | 5000.00 |
| பிரதேச வைத்தியசாலை, பூநகரி | 500.00 | 5000.00 |
| பிரதேச வைத்தியசாலை, உருத்திரபுரம் | 500.00 | 5000.00 |
| பிரதேச வைத்தியசாலை, பளை | 500.00 | 5000.00 |
| பிரதேச வைத்தியசாலை, வேரவில் | 500.00 | 5000.00 |
| பிரதேச வைத்தியசாலை, வட்டக்கச்சி | 500.00 | 5000.00 |

**இ. குடிநீர் விநியோகம்**

| வைத்தியசாலை | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை (ரூபா) | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை (ரூபா) |
|---|---|---|
| பிரதேச வைத்தியசாலை, வேரவில் | 500.00 | 5000.00 |

**ஈ. ஆவணங்கள்**

1. 31.01.2014ஆம் திகதிக்குப் பின் அந்தந்த பிரதேச செயலாளர்களிடம் இருந்து பெறப்பட்ட தமது சொத்துக்களின் பெறுமதி உறுதிப்படுத்தும் சான்றுக் கடிதமும் (பி.எஸ்.எம்.201,பொது 170 படிவம்) அல்லது வங்கி உத்தரவாதக் கடிதம்.
2. ஏற்கனவே சேவையினை வழங்கி வரும் ஒப்பந்தகாரர் எதிர்வரும் காலங்களுக்குப் புதியவர்களாக கருதியே தீர்மானம் எடுக்கப்படும்.
3. கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். விண்ணப்பதாரரோ அல்லது எழுத்துமூலம் நியமிக்கப்பட்ட பிரதிநிதியோ கேள்விகள் திறக்கும் போது சமுகமளிக்கலாம்.
4. கேள்வி தொடர்பான கேள்விச் சபையின் தீர்மானமே இறுதித் தீர்மானம் ஆகும்.
5. மேலதிக விவரங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**Dr .P.கார்த்திகேயன்,** தலைவர், (C/12328)(2.3.6)
பெறுகைகள் குழு, பி.சு.சே.பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி.

## மெய்வன்மை போட்டி

அச்சுவேலி, மார்ச் 3
பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.
பாடசாலை அதிபர் சு.மோகனராஜன் தலைமையில் நடைபெறும் விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராக கோப்பாய்க் கோட்டக் கல்வி அதிகாரி ஆ.சு.சற்குணராசா கலந்துகொள்வார்.
சிறப்பு விருந்தினராக வலி. கிழக்கு பிரதேச சபையின் எதிர்க் கட்சித் தலைவர் இ.ஜங்கரன்மற்றும்மதுவரித்திணைக்கள உத்தியோகத்தர் பொ.ஸ்ரீபவன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (வ-11)



இலங்கை மக்களின் சுபீட்ச வாழ்வுக்காக அகில இங்கை சிவாலய தரிசன சைக்கிள் யாத்திரை, சிவராத்திரி தினத்தன்று சித்தன்கேணி ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வரர் தேவஸ்தானத்திலிருந்து ஆரம்பமாகியது. வாழ்நாள் சாதனை வீரர்களான சு.குணசேகரா, வை.கைலைநாதன் ஆகிய இருவரும் தமது பயணத்தை ஆரம்பித்துள்ளனர். ஆலய பிரதம குரு சிவஸ்ரீ.சபா வாசுதேவக்குருக்களால் யாத்திரை ஆரம்பித்து வைக்கப்பட்டது. வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நா.ஐங்கரனும், பெருமளவான அடியார்களும் கலந்துகொண்டனர். (வ)

## வட இலங்கை சங்கீத சபையின் பட்டமளிப்பு விழா

வட இலங்கை சங்கீத சபையின் 18 ஆவது பட்டமளிப்பு விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு மருதனார் மடத்தில்அமைந் துள்ள வட இலங்கை சங்கீத சபையின் தற்பரானந்தன் கலை, கலாசார மண்டபத்தில் வட இலங்கை சங்கீத சபையின் தலைவரும் யாழ்ப்பாணம் கல்வி வலய கல்விப் பணிப்பாளருமான ஆர்.உதயகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.
நிகழ்வுக்குபிரதமவிருந்தினராக யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் கலாநிதி என். சண்முகலிங்கனும், சிறப்பு விருந்தினராக வைத்திய கலாநிதி திருமதி அஜந்தா கேசவராஜாவும், கௌரவ விருந்தினராக வலிகாமம் கல்வி வலய முன்னாள் உதவி கல்விப் பணிப்பாளர் திருமதி அனந்தி சிவஞான சுந்தரமும் கலந்து கொள்ளவுள்ளனர்.
நிர்வாக சபை உறுப்பினர்களில் கலாபூஷணம் விருது பெற்றவர்கள் கௌரவிப்பு, கலைஞர்கள் கௌரவிப்பு மற்றும் பட்டமளிப்பு நிகழ்வும் இடம் பெறவுள்ளன. (வ-86)

## தொழிற்பூங்காவுக்கு நிதியுதவி

யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் கீழ் இயங்கும் கைதடி தொழிற்பூங்காவுக்கு அமரர் திருமதி நாகலிங்கம் மகேஸ்வரி ஞாபகார்த்தமாக சுழிபுரம் வடக்கைச் சேர்ந்த அவரது கணவர் சண்முகம் நாகலிங்கம் ஒரு தொகை நிதியை கடந்தவாரம் வழங்கியுள்ளார். (ஒ-288)

## வீடமைப்புக் கடன்

மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள குடும்பங்களின் வீடமைப்பு மற்றும் வீடு புனரமைப்புத் திட்டமான "ரட்ட விருவ" திட்டத்தின் கீழ் வரணி சமுர்த்திச் சங்கத்தைச் சேர்ந்த இருவருக்கு வீடமைப்புக் கடன்கள் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன. (ஒ-9)

**கரைச்சி புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலய ஆண்டு உற்சவ பொங்கல் விழாவின்போது**
**வாணிபம் மேற்கொள்ளும் வாணிபர்களுக்கான அறிவித்தல்**

நாகதம்பிரான் ஆலய பொங்கல் விழா எதிர்வரும் 17.03.2014 திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. இந்த விழாவின்போது வாணிபம் மேற்கொள்ளும் வாணிபர்களுக்கான வியாபார நிலையங்களுக்கான ஏலமும் வாகன தரிப்பிடங்களுக்கான ஏலமும் எதிர்வரும் 09.03.2014 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆலய முன்றிலில் நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.

**முக்கிய குறிப்பு:**
2014 ஆம் ஆண்டுக்கான வியாபார அனுமதிப்பத்திரம், 2014ஆம் ஆண்டுக்கான கரைச்சி பிரதேச சபையின் தற்காலிக உரிமம் என்பன பெற்றிருத்தல் வேண்டும். ஏலத்தின் போது முழுப்பணமும் செலுத்தப்படல் வேண்டும்.

புளியம்பொக்கணை. ஆலய பரிபாலன சபை. (43539)(10.6)

**பிறந்தநாள் வாழ்த்து** இன்று (03.03.2014)
அகவை 51காணும் ஆசானே நீ வாழ்க
**ஆறுமுகம் இரவீந்திரன்**



அகவை ஐம்பத்தொன்று காணும் ஆசானே
மணிமகுடம் தரிக்கா வணங்கா மண் பெற்றெடுத்த
ஆறுமுகம் தங்கமணியின் புத்திரனே நீ வாழ்க.

அன்னை அன்னலட்சுமியின் ஆற்றல் மிகுமாணவனே
கல்வியோடு கலைகள் பல பயின்றவனே
சாந்தமாய் வாழுகின்ற சமாதானநீதிவானே நீ வாழ்க

பலகலையில் நாம்பயில உம்கரத்தில் எமைவளர்த்து
உலகமெலாம் வியந்து பார்க்கும்
வாழ்வக இல்லத்தை வழுவின்றி நடத்தும் தலைவனே
உம் கீர்த்தி என்றும் உயர நாமல்ல
நம் தேசமும் வாழ்த்திடும் இந்நாளில்.

வாழ்த்துவோர்:
வாழ்வக பல்கலைக்கழக மாணவர்கள்
சபாபதிப்பிள்ளை வீதி,
சுன்னாகம் தெற்கு, சுன்னாகம். (45289)(7.6)

**அறிவித்தல் V.S.P**




மூலப் பொருளின் (எள்) விலை அதிகரிப்பால் V.S.P நல்லெண்ணெய் விலை இன்று (03.03.2014) திங்கட்கிழமை தொடக்கம் (750ml) ஆகக்கூடிய சில்லறை விலை 580/= ரூபாவாக அதிகரித்துள்ளது என்பதனை விற்பனையாளர்களுக்கும் பாவனையாளர்களுக்கும் மனவருத்தத்துடன் தெரிவிக்கின்றோம்.

பொ.பாஸ்கரன்,
உரிமையாளர்.
(சி/12348)(7.6)

**வைக்கோல் விற்பனைக்கு**
வைக்கோல் விற்பனைக்குண்டு.
T.P:077 256 6941 (45287) (3.6.4)

**வீடு வாடகைக்கு**
அத்தியடி அம்பலவாணர் வீதி யாழ்ப்பாணத்தில் மூன்று அறையுடன் தனி வீடு வாடகைக்கு உண்டு.
உத்தியோகத்தர் விரும்பத்தக்கது.
தொடர்பு : 077 844 9312 (45262)(7.6.3)

**வீடு வாடகைக்குண்டு**
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு அருகில் வீடு வாடகைக்குண்டு. மாணவிகள், பெண் உத்தியோகத்தர்கள் மற்றும் சிறிய குடும்பம் விரும்பத்தக்கது.
தொடர்பு : 077 175 1334 (45293)(45.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச் செயற்பாட்டில் தளர்வு ஏற்பட்டால் மாவட்ட கல்வி தரம் மீளவும் வீழ்ச்சியுறும்

## மெய்வன்மைப் போட்டியில் மாகாண சபை உறுப்பினர் தவநாதன் தெரிவிப்பு

கிளிநொச்சி, மார்ச் 3
கல்வி மேம்பாட்டுக்கான செயற்பாடுகளில் தளர்வு நிலை ஏற்படும் இடத்து மாவட்டத்தின் கல்வித்தரம் மீளவும் பின்நோக்கிச் சென்றுவிடும் என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன் தெரிவித்தார்.
கடந்த செவ்வாய்க்கிழமை பரந்தன் அ.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில்;
கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட கல்விசார் செயற்பாடுகளின் பிரதிபலனை எமது மாணவர்கள் தமது பெறுபேறுகளின் மூலம் வெளிப்படுத்தியிருந்தார்கள்.


ஓட்டப் போட்டியில் ஆர்வத்துடன் பங்கேற்ற மாணவர்கள்....

எனவே தொடர்ந்தும் அதே வீச்சுடன் கல்விச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அந்த செயற்பாடுகளில் தளர்வுகள் ஏற்படுமிடத்து மாவட்டத்தின் கல்வித் தரம் மீளவும்தாழ்நிலைக்குச்சென்றுவிடும். எனவே கல்விச் செயற்பாடுகளை அரசியல் நோக்கில் அணுகப்படக் கூடாது.
இந்த நிலையில் கல்வி வளர்ச்சியில் ஆசிரியர்களும் பெற்றோர்களும் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்ற சந்தர்ப்பத்தில் தொடர்ந்தும்மாவட்டத்தின் கல்வித் தரத்தை தக்க வைத்துக் கொள்ள முடியும் - என்றார்.
இந்த நிகழ்வில் கண்டாவளைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வீ.இராஜகுலசிங்கம் மற்றும் கிளிநொச்சி வலய ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.கணேசலிங்கம், பாடசாலையின் முன்னாள் அதிபர் க.பத்மநாபன், சமாதான நீதிவான் திருமதி பத்மநாதன் மற்றும் அயற்பாடசாலைகளின் அதி பர்கள், வங்கிகளின் பிரதிநிதிகள், அரசதிணைக்களங்களின் அதிகாரிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (வ-18)

## பளை நோயாளர் நலன்புரி சங்கத்தைச் செயற்படுத்துக

### அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை

பளை, மார்ச் 3
பளை பிரதேச மருத்துவமனை சொந்தக் கட்டடத்தில் இயங்கத் தொடங்கியுள்ளதால் அங்கு இயங்கிய நோயாளர் நலன்புரி சங்கத்தை செயற்படுத்துமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
மருத்துவமனைக்கு நிரந்தர மருத்துவ அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளதை அடுத்து நோயாளர்களுக்கு சிறந்த சேவை வழங்கப்பட்டு வருகிறது.
இந்த நிலையில் நோயாளர் நலன்புரி சங்கத்தின் தேவை அவசியம் என்பதால் ஏற்கெனவே இயங்கிய சங்கத்தைப் புனரமைத்து மருத்துவமனை யின் அத்தியாவசிய தேவை கள் மற்றும் நோயாளர்களுக்கான சேவைகளை வழங்குமாறு உரிய தரப்பினரை மக்கள் கேட்டுள்ளனர். 2000 ஆம் ஆண்டுக்கு முன்னர் மருத்துவமனை சொந்தக் கட்டடத்தில் சேவையாற்றி யது. (வ-9)

## பாடசாலைக்கு நிரந்தர கட்டடம் அமைத்து தருக

### வடமாகாண கல்வி அமைச்சரிடம் பாடசாலை அபிவிருத்திக் குழு மனு

கிளிநொச்சி, மார்ச் 3
கிளிநொச்சி அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்துக்கு நிரந்தரக் கட்டடம் ஒன்றை அமைத்துத் தருமாறு பாடசாலை அபிவிருத்திக் குழு வடமாகாண கல்வி அமைச்சரிடம் மனு ஒன்றைக் கையளித்துள்ளது.
அந்த மனுவில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது: நிரந்தரக் கட்டடம் மற்றும் தற்காலிக கொட்டகையில் மாணவர்கள் கற்றலில் ஈடுபட் டுள்ளனர்.
5 வகுப்புக்கள் நடத்தக் கூடிய நிரந்தரக் கட்டடம் ஒன்றை அமைத்துத் தர வேண்டாம். விளையாட்டு முற்றம், சிறுவர் பூங்கா அமைத்துத் தருவதுடன் பாடசாலைக்கு மின்சாரம் இதுவரை பெற்றுத் தரவில்லை. மின்சாரம் பெற்றுத் தர வேண்டும். திறந்த கிணறு அமைத்து நீர் விநியோகம் ஒன்றும் ஏற்படுத்தித் தருவதுடன் களஞ்சிய அறை, ஒன்று கூடல் மண்டபம், தளபாட வசதி, நூலகம், கணினி வசதி போன்றவற்றையும் ஏற்படுத்தித் தருமாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-18)



## மெழுகுதிரி உற்பத்திக்கான அச்சுக்கள் அன்பளிப்பு

கருவி மாற்றுத் திறனாளி களின் சமூக வள நிலைய அங்கத்தவர்களின் உற்பத்தித் திறன் விருத்தியை மேம்படுத் தும் வகையில் 'Barath State Bank of India' யாழ்ப்பாணக் கிளையால் மெழுகுதிரி உற்பத்திக்கான அச்சுக்கள் அண்மையில் அன்பளிப்புச் செய்யப்பட்டன. இந்த நிகழ்வில் குறித்த வங்கியின் முகாமையாளர் வேலாயுதம் சிவபாலன் கலந்து கொண்டு அச்சுக்களை வழங்கினார். கருவி சமூக வள நிலையத்தின் தலைவர் க.தர்மசேகரம் அச்சினைப் பெற்றுக் கொள் கிறார். (வ)

## வேம்பொடுகேணி பாடசாலைக்கு இரு மாடிக் கட்டட தொகுதிகள்

கிளிநொச்சி, மார்ச் 3
கிளிநொச்சி பச்சிலைப்பள்ளியின் வேம்பொடுகேணி பாடசாலையில் இரு மாடிகளைக் கொண்ட கட்டடத் தொகுதிகள் அமைக்கும் பணிகள் இடம் பெற்று வருகின்றன.
சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்தால் 22 மில்லியன் செலவில் குறித்த கட்டடம் அமைக்கப்பட்டு வருகின்றது.
162 மாணவர்கள் கல்வி கற்றுவரும் குறித்த பாடசாலையில் வளப்பற்றாக்குறை நிலவுகிறது. எனவே பாடசாலைக்கு உரிய வளங்களை ஏற்படுத்தித் தருமாறு பெற்றோர் மற்றும் பாடசாலைச் சமூகம் சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.
முக்கியமாக பாடசாலையின் 10 மீற்றர் தூரத்தில் காணப்படும் மிதிவெடி அபாயப் பகுதியை இல்லாதொழிக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ-18)



இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் அதிபரும் முன்னாள் உதைபந் தாட்ட வீரருமான அருட்தந்தை ஜே.எ.யேசுதாசன் வலிகாமம் உதைப்பந்தாட்ட லீக்கினால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார். தலைவர் வெற்றிக் கிண்ணத்துக் கான உதைபந்தாட்டப் போட்டியின் பரிசளிப்பு நிகழ்வும் மற்றும் அருட்தந்தையைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும் வலிகாமம் உதைபந்தாட்ட தலைவர் நா.நவரத்தினராசா தலைமையில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது அருட்தந்தை அவர்களுக்கு இலங்கை உதைபந் தாட்ட சம்மேளனத்தின் தலைவர் ரஞ்சித் றொட்ரிக்கோ பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். (வ-86)

## தென்மராட்சி இலக்கிய அணி நடத்திய வள்ளுவர் விழா

தென்மராட்சி. மார்ச் 3
தென்மராட்சி இலக்கிய அணியின் வள்ளுவன் விழா நிகழ்வுகள் நேற்று சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் காலை, மாலை நிகழ்வுகளாக இடம் பெற்றன.
இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை தலைமையில் நடைபெற்ற காலை நிகழ்வில் 'வள்ளுவர் வழி நடப்போம்' நூல் வெளியீடும் சுழலும் சொற்போரும் இடம்பெற்றன.
நூலை சாவகச்சேரி மக்கள் வங்கிக் கிளையின் முன்னாள் முகாமையாளர் க.சண்முகலிங்கம் வெளியிட சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற உப தலைவர் மருத்துவர் எஸ்.எஸ்.அருளானந்தம் [illegible] கொண்டார்.
[illegible] நிகழ்வுகளைக் [illegible]


பட்டிமன்றக் குழுவினர்

மளவு மக்கள் வருகை தந்ததால் மண்டபம் நிறைந்துகாணப்பட்டது.
சாவகச்சேரி [illegible] கல்லூரி அதிபர் திரு[illegible] ல.முகுந்தன் தலைமையில் நடைபெற்ற மாலை நிகழ்வில் சான்றோர் கௌரவிப்பு நிகழ்வில் ஓய்வு நிலை மருத்துவர் ச.அம்பிகைபாகன் கௌரவிக்கப்பட்டார்.
'வள்ளுவன் வகுத்த வாழ்க்கைத் துணை நயத்தின் வழி நின்று பெரும்புகழ் கொண்டவர்' என்னும் தலைப்பில் பட்டி மன்றமும் இடம்பெற்றது. (வ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் சமூகத்தை அறநெறியூடாக நல்வழிப்படுத்துவது காலத்தின் தேவை

*திசைகாட்டி நிறுவனத்தில் நடந்த நிகழ்வில் உரை*

யாழ்ப்பாணம். மார்ச் 3
அறநெறியூடாக மாணவர் சமூகத்தை நல்வழிப்படுத்த முடியும். அதற்கான தேவை தற்போது வந்துள்ளது. அது காலத்தின் தேவையாகும். இதற்கு அரசை நம்பி இருக்காமல் தனியார் சமூக நிறுவனங்களின் உதவிகளைப் பெற்று பிரதேச ரீதியாக செயற்றிட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்று இந்து சமய கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் மகிந்தினி விஜயகுமார் தெரிவித்தார்.



துன்னாலையில் அறநெறி பாடசாலை ஆரம்பிப்பது தொடர்பான கலந்துரையாடல் நடைபெற்ற வேளையில்....

திசைகாட்டி நிறுவனத்தின் நிதிப் பங்களிப்புடன் துன்னாலை பிரதேச கல்வி, சமய அபிவிருத்தி மன்றத்தால் அறநெறிப் பாடசாலையை ஆரம்பிப்பது தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் திசைகாட்டி விஸா ஆலோ சனை நிறுவனத்தில் இடம் பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் கருத்துரை நிகழ்த்திய அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது;

"எமது பிரதேசத்தில் செய்யப்பட வேண்டிய காலத்தின் தேவையாக தற்போது இருப்பது மாணவர்களை நல்வழிப் படுத்துவதே. எதிர்கால சந்ததியினரை அறநெறியூடாகவே வளர்த்தெடுக்க முடியும். எல்லாவற்றுக்கும் நாம் அரசை நம்பி இருக்க முடியாது. அறநெறியை எங்களுடைய பிள்ளைகளது காலத்தில் நல்ல பழக்க வழக்கங்களை, சமயம் சார்ந்த விழுமியங்களை நாம் கற்றுக் கொடுப்பதற்கு மற்றவர்களை நம்பிக் கொண்டிருக்கக் கூடாது.

எங்களுடைய சமூகத்தில் இருக்கக் கூடிய நல்ல உள்ளம் படைத்தவர்கள் மற்றும் சமூக நலன் விரும்பிகளை இதற்கு நாம் பயன்படுத்திக் கொள்ளலாம். சமூக நலனில் அக் கறை கொண்ட நிறுவனங்களை இதில் ஈடுபாடு காட்ட வைக்க முடியும்.

இந்து சமயத்தை யாராலும் அழித்து விட முடியாது. அறநெறி இன்றைய காலத்தில் அத்தியாவசியமான ஒன்று. ஆலயங்கள் ஊடாக அறநெறியை வளர்க்க வேண்டும்.

ஆனால் உளப்பாங்குகள் அற்றுப்போய் உள்ளன. சமூக நோக்கு கொண்ட நிறுவனங்களால் மட்டும் தான் அவற்றை மேற்கொள்ள முடியும். எல்லா மதத்திலும் இந்த அறநெறிப் பாடசாலைகள் உள்ளன. சமயம் சார்ந்த விழுமியங்களுக்கு நல்ல மதிப்பு கொடுக்கிறார்கள். அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கு பெருளாதார பிரச்சினைகளுக்கு மத்தியில் குறிப்பிட்டளவு கொடுப்பனவையாவது அவர்களுக்கு வழங்க வேண்டி உள்ளது.

சமயம் என்பது வெறுமனே புத்தகத்தில் உள்ளதை மட்டும் கற்பிப்பது இல்லை. வாழ்வியலுடன் எப்படி ஒன்றித்து ஆர்வத் தையும் விருப்பத்தை யும் ஏற்படுத்த நவீனத்துவத் துடன் சமயத்தை எங்களது வாழ்வியலுடன் ஒப்புவித்து யதார்த்த பூர்வமாக செயலாற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம்.

பாடசாலைகளில் நடைபெறும் கல்விப் போதனை வெறும் பரீட்சையை இலக்காகக் கொண்டது. அது போதாது என்ற நோக்கத்தைக் கொண்டு தான் அறநெறிப் பாடசாலைகள் உருவாக்கப்பட்டன.

அங்கு கற்றுக் கொடுக்கத்தவறும் விடயங்கள் அவற்றை இங்கு பூர்த்தி செய்யக் கூடியதாக இருக்க வேண்டும். எங்களுடைய சமய விழுமியங்கள், காரியங்கள் அர்த்த பூர்வமானவை. நடைமுறை வாழ்வியலுடன் நாம் அவற்றைச் சேர்க்க வேண்டும்" - என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் கலை, இலக்கிய மன்றத்தின் தலைவர் கலாமணி, துன்னாலை வடக்கு மெதடிஸ்த மிஷன் பாடசாலையின் அதிபர் எஸ்.சிவ கணேசன், துன்னாலை பிரதேச கல்வி, சமய அபிவிருத்தி மன்றத்தின் தலைவர் திருமதி. குமுதினி தர்மராஜு ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ஓ-வ-14)

# நாகபூஷணி அம்பாள் ஆலய அறங்காவல் சபை தெரிவு

யாழ்ப்பாணம், மார்ச் 3
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய அறங்காவல்சபைத் தெரிவுக் கூட்டம் மகாசபை உறுப்பினர்களால் முறைப்படி கலைக்கப்பட்ட பின் கடந்த 26 ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு முன்னாள் அறங்காவல்சபைத் தலைவர் ப.க.பரமலிங்கத்தின் தலைமையில் புதிய அறங்காவல் சபை தெரிவு செய்யப்பட்டது.

புதிய அறங்காவல் சபைத் தலைவராக மரபு வழி அறங்காவலர் ஆ.தியாகராசாவும், செயலாளராக ந.மோகனரூபனும், பொருளாளராக செல்வி.சு.நாகேசும் உட்பட 7 பேர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். சபை முறைப்படி எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ளும் எனத் தெரிகின்றது.

(வ-7)


# 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 14 . 11 . 1941



உதிர்வு 19 . 02 . 2007

## அமரர் சிவசம்பு மனோகரசீலன்

(முன்னாள் உரிமையாளர் - சுரேக்கா ரெக்ஸ், முன்னாள் தலைவர் மானிப்பாய், வர்த்தகர் சங்கம், மானிப்பாய் வட்ட லயன்ஸ்கழக உறுப்பினர்.)

திதி: 03.03.2014

ஏழு ஆண்டுகள் கடந்தாலும்
உங்கள் நினைவுகள் எங்கள்
நெஞ்சங்களில் நீங்காமல் நிலைத்துள்ளன
எத்தனை ஆண்டுகள் கடந்தாலும்
உங்கள் நினைவுகள் நிலைத்திருக்கும்.

நாவலடி லேன்,
மானிப்பாய்.

உங்கள் பிரிவால் வாடும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(45122)(45,6,3)



# மரண அறிவித்தல்

## திருமதி சின்னத்தங்கச்சியம்மா நாகலிங்கம்



நந்தாவிலைப் பிறப்பிடமாகவும், 3 ஆம் கட்டை கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தங்கச்சியம்மா நாகலிங்கம் 01.03.2014 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு-நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லர்-தங்கம் தம்பதியரின் ஆசை மருமகளும், காலஞ்சென்ற நாகலிங்கம் (முன்னாள் தலைமை ஆசிரியர், குரு/இந்து தமிழ் மகா வித்தியாலயம்) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் V.T.நடராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும், தில்லைநாயகி (துளசி-கனடா), கிருஸ்ணதாசன் (தாசன்), முருகநாயகி (அகிலா- கனடா), குமாரதாசன் (குட்டி -கனடா), தேவநாயகி (செல்லா -நோர்வே) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஸ்ரீஸ்கந்தராஜா (காந்தன்-கனடா), பத்மராணி (பத்மா), கீதா(கனடா), ஸ்ரீதர் (ஸ்ரீ-கனடா), திலகேஸ்வரன் (தம்பி- நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியும், கருணாகரன், சிவராஜா (விரிவுரையாளர், சந்தைப்படுத்தல்துறை, முகாமைத்துவ வணிக கற்கைகள் பீடம், யாழ். பல்கலைக்கழகம்), சொர்ணதேவா, மனோகரன், பாஸ்கரன் ஆகியோரின் ஆசைக் குஞ்சம்மாவும், யோகராஜ், ஜனனி, அருள்ராஜ், கிருசாந்தி, ஸ்ரீவித்யா, கபில்ராஜ், சந்தியா, ரூபன், தமியா(முன்னாள் ஆசிரியை, வேம்படி மகளிர் கல்லூரி), ராஜிதன், மிதுரஜா (5ஆம் வருட மாணவி, சித்தமருத்துவத்துறை- யாழ். பல்கலைக்கழகம்), கஸ்தூரி, மயூரி, அனோஜினி, ரசிகா, ராகேஷ் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், சரண்ஜா, சஜானா, சச்சின், தர்மிகா, ஜனனிகா, மனிசா, ருவித்சன் ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகன்-கிருஸ்ணதாசன்
(Nila Travels and School Service)

3 ஆம் கட்டை,
கல்வியங்காடு,
தொ.பே. 021 223 0387, 077 614 1358

(45292)(3,6,4)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாகன விபத்தில் சிறுவன் உயிரிழப்பு

திருகோணமலை,மார்ச் 3
திருகோணமலை - ஹபரணை வீதியின் அக்போபுர, 37 ஆவது சந்தி பிரதேசத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில் 5 வயதுச் சிறுவன் உயிரிழந்துள்ளான்.
ஹபரணை நோக்கி சென்ற வான் ஒன்று வேகத்தை கட்டுப்படுத்த முடியாது குடை சாய்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
வாகனம் குடைசாய்ந்து வீதியால் நடந்து சென்ற சிறுவர்கள் மீது விழுந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவத்தில் காயமடைந்த மேலும் இரண்டு சிறுவர்கள் மற்றும் ஒரு பெண் கந்தளாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கந்தளாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## மரத்திலிருந்து தவறி வீழ்ந்து காயம்

தென்மராட்சி, மார்ச் 3
குழை வெட்ட வேப்ப மரத்தில் ஏறியவர் தவறி வீழ்ந்ததில் இடுப்பு எலும்பில் பாதிப்பு ஏற்பட்டது.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை மீசாலை வடக்கில் இடம்பெற்றது.
அதே இடத்தைச் சேர்ந்த கார்த்திகேசு நடேசபிள்ளை (வயது-63) என்பவர் பாதிப்புக்கு உள்ளான நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (வ-9)



மன்னார் மாவட்டத்தின் முசலிப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பொற்கேணிக் கிராமத்துக்கு அண்மையில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், பிரதேச அபிவிருத்திக் குழுத் தலைவருமான சட்டத்தரணி ஹுனைஸ் பாரூக் வீட்டுத்திட்டத்தைப் பெற்றுக் கொடுத்து முதலாவது வீட்டுக்கு அடிக்கல் நட்டு வைத்தார். (வ)

# சர்வதேச அழுத்தங்கள் நாட்டின் மீது பிரயோகம்

## அதனை முறியடிக்கும் ஆற்றல் ஐ.தே.கவுக்கு மட்டுமே உண்டு என்கிறார் திஸ்ஸ அத்தநாயக்க

கொழும்பு,மார்ச் 3
நாட்டின்மீது வெளிநாட்டுஅழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன. இந்த அழுத்தங்களை முறியடித்து நாட்டையும் மக்களையும் காப்பாற்றும் ஆற்றல் ஐக்கிய தேசியக் கட்சிக்கு மட்டுமே காணப்படுகின்றது.
இவ்வாறு கட்சியின் பொதுச் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.
காலி, கோதகொட பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
சர்வதேச சமூகத்தினால் பிரயோகிக்கப்படக் கூடிய அழுத்தங்களை எதிர்நோக்கும் ஆற்றல் ஐக்கிய தேசியக் கட்சிக்கு மட்டுமே காணப்படுகின்றது.
ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபை மாநாட்டில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்படவுள்ள தீர்மானம் குறித்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சமூகத்தை அரசு ஏமாற்றி வருகின்றது.
அரசுடன் மக்கள் இருப்பதாக பரப்புரை செய்யப்பட்டு வருகிறது-என்றார். (ச)



திஸ்ஸ அத்தநாயக்க

## எஞ்சக் கதைகள் கொஞ்சம்........

செல்வ வேலாயுதம்

### இவர்களும் சமூக விரோதிகளே...!

பம்மாத்து வேலைகளைச் செய்வோரை வெள்ளைப் பூச்சுக்காரர் எனச் சொல்வதுண்டு. கடல் சிப்பிகளை சூளையிலிட்டுப் பெறப்பட்ட நீறிய சுண்ணாம்பை கொதிநீரில் ஊறவைத்துக் கரைத்து, வச்சிரம் சேர்த்து வீடுகள், அலுவலகங்கள் மற்றும் நிறுவனங்களுக்கும் பூசுவார்கள். எங்கும் வெள்ளை நிறமே பளிச் சென்றிருக்கும். இப்போது பத்துக்கு மேலான பெயின்ற் நிறுவனங்களின் விதவிதமான வர்ணங்கள் கொண்ட தீந்தை வகைகள் தான் எங்கும் வியாபித்துள்ளன. காலமாற்றத்துக்கு ஏற்றமாதிரி நாங்களும் வீடுகளைப் போல் எங்களையும் மினுக்க ஆரம்பித்து விட்டோம்.
மங்கலம், பொது வைபவம், விழாக்கள், பயணங்கள் என பேர்சியல் எனும் அழகு படுத்தல் மயம்தான். இதற்கு வீடியோ கலாசாரமும் அனுசரணையாகவுள்ளது. மணப்பெண் அலங்காரத்துக்கு ஒரு லட்சம் ரூபா வரை போகிறார்கள் என்றால் 'மேக்கப்' எனும் ஒப்பனையின் மவுசைப் பார்க்க வேண்டியது தான்.
வீட்டுக்கும் நமக்கும் மேக்கப் தேவைதான். அவரவர் விரலுக்கேற்ற வீக்கம் அவ்வளவுதான். பச்சை மஞ்சள் அரைத்துப் பூசிக் குளித்தவர்கள், சிந்தாமணிக் கடலைக்கும் கட்டி மஞ்சளை அரைத்துப் பூசி வறுத்தார்கள். இப்போ கேசரிப்பவுடரைப் பூசி வறுத்து விற்கின்றனர். சிவப்புக் கோதுக் கோழி முட்டைக்கு யாழில் பிரியம் அதிகம் என்பதால் 'கொண்டிஸ்தூள்' கரைத்த நீரில் வெள்ளைக்கோது முட்டையை முழுக்காட்டி சிவப்பாக்கி விற்கின்றனர். விற்பனைப் பிரியத்தை ஏற்படுத்தும் இவைகளால் எமக்குத் தீங்கு ஏற்படுத்துவதாகக் கொள்வதற்கில்லை.
இந்த வகையில் பழுதடைந்த அல்லது பாவனைக்குதவாத உணவுப் பொருள்களுக்கு 'மேக்கப்' செய்வதுதான் மிகவும் கொடுமையானது. பழுதடைந்த பெருந்தொகையான அரிசிக்கு சாயமூட்டி மீண்டும் மினுக்கி புத்தரிசியாக்கியும், காலாவதியான ரின் மீனுக்கு திகதி மாற்றிய புத்தாடை சுற்றியும், கழிவுத் தேயிலைக்கு வாசனை கலந்து புத்துயிரூட்டியும் 'மேக்கப்' செய்து சந்தைக்கு விடும் படுபாதகமான செயற்பாடுகள் மனித உயிருடன் விளையாடுவதாகும். இதில் ஈடுபடும் ஈனர்களின் ஒரே குறி பணம் பண்ணுவது ஒன்றே.
சமூக நலன் மீது அக்கறை கொண்ட அதிகாரிகளால் உணவுப் பண்டங்களுக்கு 'மேக்கப்' செய்யும் சிந்தனைச் சிற்பிகள் இனங்காணப்பட வேண்டும். உணவுக்கு ஒப்பனை செய்ய அரிதாரம் பூசுவோரிடமிருந்து சமூகத்தைப் பாதுகாக்க வேண்டியது சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கடமையாகும்.

# தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பில் இதுவரை 44 பேர் கைது

கொழும்பு,மார்ச் 3
மாகாண சபைகளுக்கான தேர்தல் தொடர்பில் இதுவரையில் 42 முறைப்பாடுகள் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்றுள்ளன. இந்த முறைப்பாடுகள் தொடர்பில் 44 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.
தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 436 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என்று தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது. இவற்றில் அதிகளவான முறைப்பாடுகள் கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளன என்று தேர்தல்கள் செயலகத்தின் முறைப்பாட்டு பணியகம் குறிப்பிட்டுள்ளது.
கொழும்பு மாவட்டத்தில் 120 முறைப்பாடுகளும், கம்பஹா மாவட்டத்தில் 48 முறைப்பாடுகளும், களுத்துறையில் 60 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன என்று முறைப்பாட்டு பணியகம் அறிவித்துள்ளது.
காலியில் 45 முறைப்பாடுகளும், மாத்தறையில் 67 முறைப்பாடுகளும், ஹம்பாந்தோட்டையில் 52 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன.
அதிகமான முறைப்பாடுகள் தேர்தல் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் ஊர்வலங்கள் தொடர்பில் பதிவாகியுள்ளன.
இந்த விடயங்கள் தொடர்பில் 119 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தேர்தல்கள் முறைப்பாட்டு பணியகம் அறிவித்துள்ளது.
தேர்தல் விதிகளை மீறும் வகையிலான சுவரொட்டிகள், பதாகைகள் என்பன தொடர்பில் 101 முறைப்பாடுகளும், அரச வாகனங்களை தேர்தல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தியமை தொடர்பில் 38 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன என்று தேர்தல்கள் முறைப்பாட்டு பணியகம் சுட்டிக்காட்டியுள்ளது. (ச)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

செல்வி அஜாலினி மகாலிங்கம் (BFA)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் (11.01.2014)
நடைபெற்ற 29ஆவது பட்டமளிப்பு விழாவில்
செல்வி அஜாலினி மகாலிங்கம் அவர்கள்
நுண்கலைமாணி - BFA (பரத நாட்டியம்) பட்டத்
தினைப் பெற்றமையையும், இன்று (03.03.2014)
வடஇலங்கை சங்கீத சபையால் வழங்கப்படும்
கலாவித்தகர் (பரதநாட்டியம்) பட்டத்தினைப்
பெற்றுக் கொள்வதனையும் பெருமகிழ்வோடு
பாராட்டி வாழ்த்துகின்றோம். அத்துடன் அவரது
குரு திருமதி விமலகுமாரி ஸ்ரீரவிகுலன்
(சிவசக்தி சங்கீத நர்த்தனாலயம் - மீசாலை)
அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளையும்
தெரிவித்துக்கொள்கிறோம்.

வாழ்த்துவோர்:
அம்மம்மா - சிவபூரணம் அம்மா - வசந்தா
அண்ணா - அமலதீபன் அண்ணி - சிந்துஜா
அண்ணா - புவனதீபன்

"பூரணபதி" வேளையடி ஒழுங்கை,
மந்துவில் கிழக்கு, கொடிகாமம்.

(33392)(7.6)



திறப்புவிழா அழைப்பு

குணம் கிறீம் ஹவுஸ்

அன்புடையீர்!
இன்று 03.03.2014 திங்கட்கிழமை பருத்தித்துறையில்
சொந்தக் கட்டடத்தில் கோலாகலமாகத் திறக்கப்படவுள்ளது.

நண்பகல் 12.00மணிக்கு இறைஆசீர்வாதத்துடன் திறப்புவிழாவும்
பி.ப.4.00 மணிக்கு வியாபாரமும் ஆரம்பிக்கப்படும்

திறப்புவிழாவை முன்னிட்டு
பி.ப 4.00 மணியில் இருந்து
வடமராட்சி இசைக்கலைஞர்களுடன்
முன்னணிப் பாடகர்களும் பங்கு கொள்ளும்
இன்னிசை சங்கமமும்
இடம் பெறும்

விசேடமாகச்
சிறுவர்களுக்கான
பந்துக் கடாகமும்
அமைக்கப்பட்டுள்ளது.

குடும்பத்துடன் வாரீர் !
குதூகலம் அடைவீர் !

குணம் கிறீம் ஹவுஸ்
துறைமுக வீதி
(கொட்டடி பிள்ளையார் ஆலயம் அருகில்)
பருத்தித்துறை.
தொலை பேசி :0771869015

(C/12356)

(இதனையே தனிப்பட்ட அழைப்பாகக் கொள்ளவும் - அன்பளிப்புக்களைத் தவிர்த்துக் கொள்ளவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'பேஸ்புக்' தொடர்பாக அதிபர்களுக்கு பயிற்சி

### ஆராய்கிறது கல்வி அமைச்சு

கொழும்பு,மார்ச் 3

பேஸ்புக் உள்ளிட்ட இணையத்தள பாவனையின் போது மாணவர்கள் பின்பற்ற வேண்டிய விடயங்கள் தொடர்பில் அதிபர்களை தெளிவுப்படுத்துவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன் முதலாவது கட்டமாக தேசிய பாடசாலைகளின் அதிபர்களை தெளிவுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சின் செயலர் அநுர திசாநாயக்க தெரிவித்தார்.

இதுகுறித்து கொழும்பில் செயலமர்வொன்றை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

பாடசாலை மற்றும் அதற்கு வெளியில் மாணவர்களின் இணையத்தள பாவனையின் போது பின்பற்ற வேண்டிய பாதுகாப்பு வழிமுறைகள் மற்றும் அவற்றை மேற்பார்வை செய்யும் வழிமுறைகள் தொடர்பில் அதிபர்கள் தெளிவு படுத்தப்படவுள்ளனர்.

சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக அமைக்கப்படவுள்ள கேந்திரமயப்படுத்தப்பட்ட பாடசாலை குழுக்கள் தொடர்பிலும் அதிபர்கள் தெளிவூட்டப்படவுள்ளனர் என்று அவர் மேலும் கூறினார். (ச)

# பொருளாதாரத் தடைகளை நாங்கள் எதிர்கொள்வோம்

### அமைச்சர் வீரவன்ச தெரிவிப்பு



விமல் வீரவன்ச

கொழும்பு,மார்ச் 3

இலங்கைக்கு எதிராக ஜெனிவா மனித உரிமைசபையில் பொருளாதார அல்லது வேறு ஏதேனும் தடைகளை கொண்டு வந்தால் அதற்கு நேராக முகம் கொடுத்து வெற்றி பெறுவதை விட வேறு வழியில்லை என்று வீடமைப்புத்துறை அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

கண்டி, பொல்கொல்லையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற சமய நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித் ததாவது:-

இன்று அமெரிக்கா உள் ளிட்ட மேற்கத்தேய நாடுகள் இலங்கைக்கு எதிராக பல பிரேரணைகளை முன்வைத்துள் ளன.

அரசு அவர்கள் கூறுவது போன்று வடக்கிலிருந்து இரா ணுவ முகாம்களை அகற்றாமை, சிங்கள, முஸ்லிம் மக்களை மீள்குடியேற்றம் செய் வதை நிறுத்தாமை போன்ற வற்றினால் அவர்கள் ஆத்திரம் கொண்டுள்ளனர்.

இதன் காரணமாக எமக்கு எதிராக பல பிரேரணைகளை முன்வைத்துள்ளனர். இதன் விளைவாக எமக்கு பொருளாதார அல்லது வேறு தடைகளேதும் விதிக்கப்படுமா? என்று கேட்கப்படுகின்றது.

அவ்வாறான தடைகள் ஏற்படுமா? இல்லையா? என்று உறுதியாக கூறமுடியாது. அப்படி தடைகள் ஏற்பட்டாலும் அதற்கு நேராக முகம் கொடுத்து வெற்றி பெறுவதைத் தவிர வேறு வழி இல்லை. அதற்கான சக்தி எமக்கு உண்டு.

இவ்வாறான பிரேரணைகளைக் கொண்டு வருவத ன் நோக்கம் மேற்கத்தேய நாடுகளுக்கு அடங்காத தற்போதைய அரசை பதவி கவிழ்த்துவிட்டு அவர்களுக்கு அடங்கிப் போகும் அரசு ஒன்றை உரு வாக் குவதாகும்-என்றார். (ச)

## கடற் கண்காணிப்பு நடவடிக்கை தீவிரம்

### விமானப்படையினர் திட்டம்

கொழும்பு,மார்ச் 3

கடற் கண்காணிப்பு நடவடிக்கைகளை அதிகரிக்க விமானப் படையினர் திட்டமிட்டுள்ளனர். சர்வதேச கடல் எல்லை தொடர்பில் கண்காணிப்பு நடத்தப்பட உள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. இந்திய மீனவர்களின் அத்து மீறல்களை கட்டுப்படுத்தும் நோக்கில் விமானப்படையினர் இவ்வாறு கண்காணிப்பு பணிகளைஅதிகரிக்கஉள்ளனர். இலங்கைக் கடற்பரப்பில் அத்து மீறி பிரவேசிக்கும் இந்திய மீனவர்கள்பற்றியதகவல்களைதிரட்டி உரிய தரப்பினருக்கு வழங்கப் படும் என்று புதிய விமானப் படைத் தளபதி எயார் மார்ஷல் கோலித குணதிலக்க தெரிவித்தார்.கண்காணிப்புப்பணிகளை விஸ்தரிக்க வேண் டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

விமானங்களையும் ஏனைய கருவிகளையும் பயன்படுத்தி அத்து மீறல்கள் தொடர்பில் கண்காணிப்பு நடத்தப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## கஞ்சா போதைப் பொருளுடன் பிரதேசசபைத் தலைவர் கைது

கொழும்பு,மார்ச் 3

கஞ்சா போதைப் பொருள் கொண்டு சென்ற போது, வில்கமுவ பிரதேச சபைத் தலைவ ரும் மற்றுமொரு சந்தேகநப ரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வில்கமுவ நிபோன் பாலத் துக்கு அருகில் நேற்றுமுன் தினம் சனிக்கிழமை மாலை சந் தேகநபர்கள் கைது செய்யப் பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. சந்தேகநபர்களிடமிருந்து 275 கிராம் கஞ்சா போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. (ச)

## ஐ.தே.கட்சியின் அலுவலகம் மீது தாக்குதல்

கொழும்பு,மார்ச் 3

காலியில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதான அலுவலகம் மீது தாக்குதல் நடத்தப் பட்டுள்ளது என்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல் நேற்றுமுன் தினம் இரவு நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரி வித்தனர்.

அலுவலகத்தில் இருந்த தேர் தல் பரப்புரை தட்டிகள், பதா கைகள் உடைத்து சேதப்படுத்தப்பட்டுள்ளன என்று முறைப் பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் காலி அலுவலகம் கடற்படை முகாமுக்கு அருகில் அமைந்துள்ளது. இவ்வாறான அதியுயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் நடைபெற்றுள்ள இந்த சம்பவம் குறித்து விசாரணைகளை நடத்தி சந்தேகநபர்கள் கைது செய்யப்படுவார்கள் என்று நம்புவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் காலி மாவட்ட வேட் பாளர் சஞ்ஜீவகருணாதிலக்க தெரிவித்தார். (ச)


**கண்ணீர் அஞ்சலி**



எமது பிரதேச செயலகத்தில் பணியாற்றும் **ஜோர்ஜ் ரவிக்குமார்** அவர்களின் பாசமிகு தந்தையார்

**அல்பிறட் ஜோர்ஜ் ரவீந்திரன்**

அவர்களின் மறைவால் துயருற்று இருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின் றோம்.

ஊழியர் நலன்புரிச்சங்கம், பிரதேச செயலகம், நெடுந்தீவு

**மரண அறிவித்தல்**



**ஆபிரகாம்பிள்ளை ஜோர்ஜ்**

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், ஒட்டகப் புலத்தை வாழ்விடமாகவும், இளவாலையை வதிவிடமாகவும் கொண்ட ஆபிரகாம் பிள்ளை ஜோர்ஜ் நேற்று (02.03.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
5ஆம் கட்டையடி, இளவாலை. உ. புவனேந்திரன்

**மரண அறிவித்தல்**

**பத்மநாதன் பாலகணேசமூர்த்தி**



யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை முருகமூர்த்தி வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடாகவும் கொண்ட பத்மநாதன் பாலகணேசமூர்த்தி (01.03.2014) சனிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பத்மநாதன் - சரஸ்வதி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் சுப்பிரமணியம் காலஞ்சென்ற மனோன்மணி தம்பதியரின் மருமகனும் கலைவாணியின் அன்புக்கணவரும் பத்மபிரியா, பத்மநாதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுபத்திரா தேவி, ஆனந்தமூர்த்தி, கெங்காதரன் (கனடா), ரதிகாந்தன் (கனடா,) பத்மகாந்தன் (கனடா) ஆகியோரின் அன்புச்சகோதரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.03.2014) திங்கட்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
முருகமூர்த்தி வீதி, வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம். குடும்பத்தினர்

**மரண அறிவித்தல்**

**ஞானத்துரை திருச்சிற்றம்பலம்**

(ஓய்வு பெற்ற வைத்திய அதிகாரி மாங்குளம், அக்கராயன்)



வட்டுக்கோட்டை அராலி மத்தியை (கொட்டைக் காடு) பிறப்பிடமாகவும், காரைநகர் சம்பந்தர் கண்டியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட ஞானத்துரை திருச்சிற்றம்பலம் (ஓய்வு பெற்ற வைத்திய அதிகாரி) (02.03.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானத்துரை - இராசம்மா தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் சற்குணலீலாவதிஅம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற குணச்சித்திரன் மற்றும் நிஷாந்தினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் வடக்கு மாகாண கல்வித்திணைக்களம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் நாகலிங்கம் பாலகிருஷ்ணனின் சம்பந்தியும் பாலகிருஷ்ணன் சிவரஞ்சன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் சுகாதார திணைக்களம், யாழ்ப் பாணம்) அவர்களின் அன்பு மாமனும் நதீசன், அருணன் ஆகியோரின் அன்புப்பேரனும் காலஞ்சென்ற ஞானமலர் காலஞ்சென்ற புஸ்பராணி ஆகியோரின் அன்புச்சகோதரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.03.2014) திங்கட்கிழமை காரைநகர் இல்லத்தில் மு.ப. 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் சாம்பலோடை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சம்பந்தர் கண்டி, காரைநகர் குடும்பத்தினர்

**தேவை**

சுண்டிக்குழி குருநகர் பகுதியில் Room வாடகைக்குத்தேவை.

தொடர்பு : 077 4952925

**தேவை**

சகலவிதமான நெல் வகைகளும் மற்றும் தானிய வகைகளும் கொள்வனவு செய்யப்படும். (வாங்கப்படும்)

தொடர்பு : 077 7722215

மாப்பியன் அரிசி ஆலை

**அறிவித்தல்**

பிறின்ஸ் எலக்ரோனிக்ஸ் - சங்கானை

வாடிக்கையாளர் கவனத்திற்கு,

எமது இலத்திரனியல் நிறுவனம் சில தவிர்க்க முடியாத காரணங்களினால் குறுகிய காலப் பகுதிக்குள் 05.05.2014 இற்குள் மூட இருப்பதால் எமது நிறுவனத்தில் பழுதுபார்ப்பதற்குப் பெறப்பட்ட இலத்திரனியல் உபகரணங்களை தயவுசெய்து உரிமையாளர்கள் வந்து பெற்றுக்கொள்ளுமாறு மிக தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

பிரதான வீதி,
NSB வங்கி முன்பாக
சங்கானை.

வ. ஞானரூபன் (ரூபன்) உரிமையாளர்

(45111)(7.6)

**பணிப் பெண் தேவை**

வீட்டில் தங்கிநின்று வேலை செய்யக் கூடிய பணிப்பெண் தேவை.

தொடர்பு : 077 6333133

**உடன் பாவனைக்கு**

யாழ். பஸ்நிலையத்திலிருந்து 3/4 கிலோ மீற்றர் தூரத்தில் பாதுகாப்பான இடத்தில் பொருள்களை களஞ்சியப்படுத்துவதற்கும் வாகனங்கள் நிறுத்துவதற்கும் வசதியான வீடுகளுடன் இடம் உண்டு. சாரதி நடத்துநர் தங்குவதற்கும் வசதி உண்டு.

தொடர்பு : 077 8698909

**பியோன் தேவை**

யாழ்.நகரில் உள்ள நிறுவனம் ஒன்றிற்கு பியோன் தேவை. ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்பு : 078 5285342

**ELOCUTION CLASS**

சிறுவர் பூங்கா முன்பள்ளி குழந்தைகள் காப்பகம், 528, பலாலி வீதி, திருநெல்வேலி

"ENGLISH THROUGH FEELINGS"

பெற்றோர்களே உங்கள் சிறார்களுக்கு சிறப்பான ஆங்கில மொழித்தேர்ச்சியை வழங்க அரிய சந்தர்ப்பம்! இங்கிலாந்து நாட்டு ஆங்கில முறையிலமைந்த பாடத்திட்டம், கொழும்பு "CALSDA" நிறுவன வழிகாட்டலில் "ELOCUTION CLASS" 15.03.2014, காலை 8.30 மணிக்கு எமது முன்பள்ளியில் ஆரம்பமாகின்றது.

*. Spoken English * Written English * Preparing to the Colombo "CALSDA" Examination

*. 6 வயதுக்கு கீழ் - முன்பள்ளி, 5+, 4+ ஆரம்பக்கல்வி தரம் 1 *. 8 வயதுக்கு கீழ் - ஆரம்பக்கல்வி தரம் 2, தரம் 3

சனி, ஞாயிறு காலை 8.30 - 11.30 மணிவரை தரமான விரிவுரையாளர்களினால் மகிழ்ச்சிகரமான ஆங்கிலம் கற்கும் முறைகளான, ஆடல், பாடல், வர்ணம் தீட்டுதல், பேச்சு, நாடகம், விளையாட்டுக்கள் மூலம் கற்பிக்கப்படும். பெறுமதிவாய்ந்த வழிகாட்டி நூல்களுடன்!

வரையறுக்கப்பட்ட இடங்களே உண்டு பதிவுகளுக்கு முந்துங்கள்.

நிபுணத்துவ ஆலோசகர்:
பாலசுப்பிரமணியம் தனபாலன்
BA(Cey), PGDE (Merit), M.Phil in Pre School Education,
Dip in Psy 1st Class, Cert. in Vocational Guidance (Singapore)
Reading Phd University of Jaffna.

தொலைபேசி இல: 021 222 2106
Kids Park PreSchool &
Daycare Center
528, Palaly Road, Thirunelvely.

(45294) (10)

உதயன்
advt@uthayan.com
021 567 1111


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எட்டப்பட்ட இணக்கத்தை மீறினர் தமிழக மீனவர்

## மீண்டும் சிக்கலாகிறது இரு தரப்பு கடற்றொழில் பிரச்சினை

சென்னை,மார்ச் 03
இலங்கை - தமிழக மீனவர்கள் பேச்சுவார்த்தையில் எட்டப்பட்டிருந்த உடன்படிக்கையை தமிழக மீனவர்கள் மீறியுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்படுகிறது. எதிர்வரும் 13ஆம் திகதி வரையில் விசைப்படகுகளில் மீன்பிடிக்க வரமாட்டோம் என்று இலங்கை மீனவர்களுக்கு வழங்கியிருந்த உறுதிமொழியையே தமிழக மீனவர்கள் மீறியுள்ளனர் என்று கூறப்படுகிறது.

எட்டப்பட்ட இணக்கத்தைத் தமிழக மீனவர்கள் மீறியிருப்பது இரு தரப்பினருக்கும் இடையில் மீண்டும் இந்த மாதம் 10ஆம் திகதி கொழும்பில் நடத்துவதாக அறிவிக்கப்பட்டிருந்த பேச்சுகளைக் குழப்பும் வகையில் அமைந்துள்ளதாக இலங்கை மீனவர்கள் குற்றஞ் சாட்டுகின்றனர்.

**மீறப்பட்ட இணக்கம்**

ஜனவரி 27ஆம் திகதி சென்னையில் இலங்கை - தமிழக மீனவர்களுக்கு இடையில் சந்திப்பு நடந்தது. அதில், தமது விசைப்படகுகளில் இலங்கையை ஒட்டிய கடலுக்குச் சென்று மீன்பிடிப்பதை ஒரு மாத காலத்துக்கு நிறுத்திவைப்பதற்குத் தமிழக மீனவர் பிரதிநிதிகள் இணக்கம் தெரிவித்திருந்தனர்.

பெப்ரவரி 13ஆம் திகதி முதல் மார்ச் 13ஆம் திகதி வரையிலான ஒரு மாத காலத்துக்கு இலங்கை - இந்திய கடல் எல்லையோரம் மீன்பிடித் தொழிலை நிறுத்தி வைக்க தமிழக விசைப்படகு உரிமையாளர்கள் சம்மதித்திருந் தனர்.

இந்த இணக்கத்துக்கு ஏற்ப கடந்த இரண்டு வாரங்களாக விசைப்படகு மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை. ஆனால் தமிழ்நாடு மீன் வளத்துறையின் அனுமதியைப் பெற்று ராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் கடந்த சனிக்கிழமையன்று மீண்டும் கடலுக்குச் சென்றுள்ளனர். ராமநாதபுரம், நாகப்பட்டினம், தஞ்சாவூர், புதுக்கோட்டை, காரைக்கால் போன்ற கடலோர மாவட்டங்களிலும் விசைப்படகு மீனவர்கள் மீண்டும் தொழில் செய்யத் தொடங்கியுள்ளனர்.

தொழிலுக்கு செல்லாமல் வாழ்க்கையை கொண்டு நடத்த முடியவில்லை என்பதாலேயே ஏற்றுக் கொண்ட காலத்துக்கு முன்பாகவே தாங்கள் மீன் பிடிக்க ஆரம்பித்துள்ளனர் என்று தமிழ்நாடு விசைப் படகு மீனவர்கள் நல சங்கத் தின் பொதுச் செயலர் போஸ் தெரிவித்தார்.

விசைப்படகு மீன்பிடியை ஒரு மாத காலம் நிறுத்திவைக்கின்ற முடிவை இலங்கை தரப்பு கேட்காமல் தாங்களாகவேதான் அறிவித்திருந்தனர் எனவும், ஆனால் மீனவர்களின் வாழ்வாதாரம் கருதி மீண்டும் மீன்பிடிக்கத் தொடங் கியுள்ளனர் எனவும், இதனால் எதிர்கால பேச்சுவார்த்தைகள் பாதிக்கப்படாது என்று தாங்கள் நம்புகின்றனர் எனவும் போஸ் தெரிவித்தார். ஆனால் இணக்கம் காணப்பட்ட விடயத்தை அவர்கள் மீறியிருப்பது நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்று இலங்கை மீனவர்கள் கூறுகின்றனர். இந்த நிலையில் எதிர்வரும் 10 ஆம் திகதி நடக்க உள்ள பேச்சை எப்படி ஆக்கபூர்வமாக முன்னெடுக்க முடியும் என்றும் அவர்கள் கேள்வி எழுப்புகின்றனர். (உ-5)

# மூன்று விடுதிகள் நேற்று யாழ். நகரில் திடீர் சோதனை

***விபசாரம் நடக்கிறதா என தீவிர வேட்டை***
***எட்டுப்பேரிடம் பொலிஸார் இரவிரவாக விசாரணை***

யாழ்ப்பாணம், மார்ச் 03
யாழ்.நகரை அண்மித்து அமைந்துள்ள விடுதிகள் நேற்று திடீர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அங்கு விபசாரம் நடக்கிறதா என்ற சந்தேகத்தில் மேற்கொள்ளப் பட்ட இந்த நடவடிக்கையின் போது, தகுந்த காரணங்களின்றி தங்கியிருந்த 8 பேர் கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். கைதானவர்கள் தென்பகுதி மற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப் பட்டது.

> “ அனுமதிப் பத்திரமின்றி விடுதிகள் மற்றும் மசாஜ் நிலையங்களை நடத்தியவர்களும், விடுதிகளில் தகுந்த காரணங்களின்றி தங்கியிருந்தவர்களும் கைது செய்யப்பட்டு விசாரணைகளை மேற்கொண்டு நீதிமன்றில் முற்படுத்த உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அனுமதிப் பத்திரமின்றி விடுதிகள் மற்றும் மசாஜ் நிலையங்களை நடத்தியவர்களும், விடுதிகளில் தகுந்த காரணங்களின்றி தங்கியிருந்தவர்களுமே இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் என்றும் இவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டு நீதிமன்றில் முற்படுத்த உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். நல்லூர் கோயிலை அண்மித்துள்ள பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் இயங்கி வந்த மசாஜ் நிலையத்தில் வைத்து கொழும்பைச் சேரந்த இரண்டு பெண்களும் அந்த நிலையத்துக்குப் பொறுப்பாக இருந்த அநுராதபுரத்தைச் சேர்ந்த வைத்தியர் ஒருவரும் கைது செய்யப்பட்டனர்.

இவைபோன்று யாழ். அரியாலை பகுதியில் அமைந்துள்ள விடுதியில் தகுந்த காரணங்களின்றி தங்கியிருந்த 3 பெண்களும் முல்லைத்தீவைச் சேர்ந்த ஆண் ஒருவரும் விடுதி நடத்துநரும் என 5 பேர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டனர். விடுதி நடத்துநா தவிர ஏனையோர் அங்கு தங்கியிருந்ததற்கான உரிய காரணத்தைத் தெரிவிக்கவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் இன்று திங்கட்கிழமை நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். வட மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் மற்றும் விசேட பொலிஸ் குழுவினரும் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப் பட்டது. (ஜ-4-21)

# வீடு புகுந்து தாக்கியதில் நால்வர் காயம்

ஓட்டோக்களில் வந்தவர்கள் வீட்டுக்குள் அத்துமீறிப் புகுந்து தாக்கியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு பெண்கள் உட்பட நால்வர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியில் இடம்பெற்றது.

இதன்போது ஆறுமுகம் இராமஜெயம் (வயது-57) இவரது மனைவியான இராமஜெயம் சேதுநாயகி (வயது - 57), மகனான இராமஜெயம் - ஸ்ரீமதன் (வயது-20), உறவினரான இரத்தின சிங்கம் விமலநாயகி (வயது - 58) ஆகியோரே படுகாயமடைந்தவராவார்கள்.

குறித்த வீட்டில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அந்தியேட்டிக் கிரியையின் போது ஏற்பட்ட தர்க்கம் சாவகச்சேரி பொலிஸ் நிலையம் வரை சென்று அங்கு சமாதானம் செய்யப்பட்டது. இந்தச் சம்பவத்துடன் தொடர்பு உடையவர்களே நேற்று குழுவாக வந்து வீட்டில் இருந்தவர்களைத் தாக்கிக் காயப்படுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது. தாக்குதலில் காயமடைந்த நால்வரும் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள் ளனர். (ஜ-9-400)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### கடலில்

சிறிது நேரத்தின் பின் சக மீனவர்களுக்கு தகவல் வழங்கப் பட்டது. அவர்கள் நீரில் மூழ்கித் தேடியபோது வலை யில் சிக்கியபடி கிடந்த நல்ல தம்பியின் சடலத்தைக் கண்டுபிடித்தனர். சடலம் பேசாலை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக விசாரணைக்காக மன்னார் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டது. மேலதிக விசாரணைகளை தலைமன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (உ-56)

### கோபிதாஸின்

உறுப்பினர்கள் ஜனநாயக மக்கள் முன்னணி மாநகர சபை உறுப்பினர் நவசமசமாஜக் கட்சி பிரதிநிதிகள் உட்படப் பலர் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

**பயங்கரவாதிகள் இல்லை**

அரசியல் கைதிகளை விடுதலைசெய்வதற்கான அமைப்பு மற்றும் காணமற்போனோரைத் தேடிக் கண்டறியும் குழு என்பவற்றின் பிரதிநிதிகளும் போராட்டத்தில் பங்கேற்றனர். கோபிதாஸ் மாரடைப்புக் காரணமாகவே உயிரிழந்தார் என்று அவரது உடற்கூற்று பரிசோதனை அறிக்கை கூறுகின்றபோதும், கோபிதாஸின் உயிரிழப்பு கொலைக்குச் சமனானது என்று போராட்டத்தில் உரையாற்றிய வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் சாடினார். "மருந்து கொடுக்காமல் அதனால் ஒருவர் உயிரிழப் பதும் கொலைக்கு சமனா னது" என்று அவர் குறிப்பிட்டார்.

'தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்', 'சித்திரவதை செய்யாதே', 'தமிழ் அரசியல் கைதிகள், பயங்கரவாதிகள் அல்லர். அவர்கள் எங்கள் பிள்ளைகள்', 'வதைகூடம் வேண்டாம்', 'அரசியல் கைதிகளை உணவு மருந்தின்றி சாகடிக்காதே' போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளைப் போராட்டக்காரர்கள் தாங்கிப்பிடித்திருந்தனர். கோஷமும் எழுப்பினர்.

**பிரிட்டனுக்கு முதல் அடி**

அங்கு உரையாற்றிய ஜனநாயக மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் பாஸ்கரா, இலங்கைக்கு எதிராக ஜெனீவாவில் பிரிட்டன் நடவடிக்கை மேற்கொண்டதற்கு விழுந்த முதல் அடி இது என்றார். பிரிட்டன் தனது நாட்டுக் குடிமகனான கோபிதாஸின் திடீர் இறப்புத் தொடர்பில் கேள்வியெழுப்ப வேண்டும் என்று வலியுறுத்தினார்.

"மாடு வெட்டப்படுவதற்கு எதிராக குரல் கொடுக்கும் சிங்கள அமைப்புக்கள், மனிதர்கள் கொல்லப்படுவதற்கும் - தாக்கப்படுவதற்கும் எதிராக குரல் கொடுக்க தயங்குவது ஏன்?" என்றும் அவர் கேள்வி எழுப்பினார். நாம் தொடர்ச்சியாக முன்னெடுக்கும் மக்கள் மயப்படுத்தப்பட்ட போராட்டங்களின் ஊடாகவே விடுதலை கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

**கொலை**

வடக்கு மாகாண அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவிக்கை யில், சிறைச்சாலையில் கைதிகளுக்கு பனடோலும், சித்தாலேபவும் மட்டுமே மாரடைப்புக்கு மருந்தாக வழங்கப்படுகின்றது. கைதிகளுக்கு உரிய மருந்துகள் வழங்காமல் விட்டு, அவர்கள் உயிரிழந்தால் அதுவும் கொலையே - என்றார்.

காணாமற்போனோரை தேடிக் கண்டறியும் குழுவின் செயலாளர் சுந்தரம் மகேந்திரன் தெரிவிக்கையில், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எந்த அக்கறையுமில்லை என்று அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தங்களிடம் தெரிவித்திருந்தார் என்றார். (உ-5)

### ஆரம்பமே

நாயக ஆட்சிமுறைக்கும், மனித உரிமைகளுக்கும் இலங்கை மதிப்பளிக்க வேண்டும் என்றும், மீறல்கள் தொடர்பாக விசாரணை நடத்த வேண்டும் என்ற ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் அழைப்புக்கு ஆதரவளிப்பார் என்றும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இந்தக் கூட்டத் தொடரில் உயர்மட்டப் பிரதிநிதிகளின் உரை நிகழ்ச்சி நிரலில், இடம்பெற்றிருந்த பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹேக்கும், கனேடிய வெளிவகார அமைச்சர் ஜோன் பயார்ட்டும் இதில் பங்கேற்கமாட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்குப் பதிலாக, பிரிட்டன் வெளிவிவகார மற்றும் பொதுநலவாய பணியகத்துக்கான இணை அமைச்சர் ஹியூகோ சுவைரும், கனேடிய வெளிவிவகார இணைய அமைச்சர் லைன் யெலிச்சும் இன்றைய கூட்டத்தில் உரையாற்றவுள்ளனர். (உ-5)

### கடைசி

ஆணையாளர் நவிபிள்ளை சமர்ப்பிக்க உள்ளார்.

சபையின் இந்தக் கூட்டத் தொடரில், எதிர்வரும் 5ஆம் திகதி வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பிரிஸ் உரையாற்றவுள்ளார். இதற்காக நாளை செவ்வாய்க் கிழமை ஜெனிவா புறப்படுகிறார் பீரிஸ். தனது உரைக்கு முன்னதாக அவர் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவிபிள்ளையை சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

நவிபிள்ளையின் அறிக்கை தொடர்பான இலங்கை அரசின் நிலைப்பாட்டை அதிகார பூர்வமாக தாம் அவரிடம் எடுத்துக் கூறுவார் என்று ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள் ளார்.

இதற்கிடையே, ஜெனீவா கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக எழுப்பப்படலாம் என்று எதிர்பார்க்கப்படும் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலடி கொடுப்பது தொடர்பாக, ஜெனீவாவில் உள்ள இலங்கைக்கான தூதுவர் ரவிநாத் ஆரியசிங்க கடந்த வாரம் கொழும்பில் ஆலோசனைகளை நடத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-5)

### சுதந்திர

இலங்கை அரசுக்கு எந்த ஆயுதமும் வழங்கமாட்டோம் என்று உறுதியான முடிவு எடுக்கப்பட்டது. அதேபோன்று ஆயுதங்கள் எவையும் கொடுக்கப்படவும் இல்லை. ஆனால் காங்கிரஸ் தலைமையிலான ஆட்சியில் இலங்கை அரசுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டு, தமிழர்கள் கொல்லப்பட்டனர். அப்படித் தமிழர்களுக்குத் துரோகம் செய்த காங்கிரஸ் அரசை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்பதுதான் ஈழத் தமிழர்களின் விருப்பமாக உள்ளது. இந்தியாவின் பிரதமராக நரேந்திரமோடி வர வேண்டும் என்றே ஈழத் தமிழர்கள் விரும்புகின்றனர்.

**ஈழம் இலக்கு**

சுதந்திர ஈழமே எங்களின் இலக்கு. அதற்கான சூழல் கனிந்து வருகிறது. இந்தியாவிலும் விடுதலைப்புலிகள் மீதான தடை நீங்கும். காங்கிரஸ் தோற்கடிக்கப்பட்டு, அமையப் போகும் பாரதீய ஜனதாக் கட்சி ஆட்சியில் அந்தச் சூழல் உருவாகும் - என்றார் வைகோ. (உ-5)

### பலத்த

சாலைகள் ஆணையாளர் நாயகமும், இயற்கை மரணம் என்று தெரிவித்திருந்தார்.

பிரிட்டன் பிரஜையான கோபிதாஸ் 2007 ஆம் ஆண்டு கட்டுநாயக்கா விமானநிலையத்தில் வைத்து கைது செய்யப் பட்டிருந்தார். தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு பிரிட்டனில் நிதி சேகரித்தார் என்று இவர் மீது குற்றச்சாட்டு முன்வைக் கப்பட்டிருந்தது. இந்த நிலையில் இவருக்கு கடந்த 2011 ஆம் ஆண்டு நீதிமன்று 5 வருட சிறைத்தண்டனை விதித் திருந்தது. சிறைக்காவலில் இருந்த போதே கோபிதாஸ் மர்மமானமுறையில் உயிரிழந்தார்.

**மக்கள் அஞ்சலி**

கோபிதாஸின் உடல் கடந்த புதன்கிழமை, அவரது சொந்த ஊரான புலோலிக்கு கொண்டு வரப்பட்டு, மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

நேற்றையதினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சேனாதிராஜா, ஈ.சரவணபவன் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், வடக்கு மாகாண அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மற்றும் மாகாணசபை உறுப்பினர்களான த.சித்தார்தன், பா.கஜதீபன், திருமதி அனந்தி சசிதரன், ச.சுகிர்தன் ஆகியோர் நேரடியாகச் சென்று அஞ்சலி செலுத்தினர்.

**பொலிஸ் பாதுகாப்பு**

உயிரிழந்தவரின் மனைவி மற்றும் அவரது இரு பிள்ளைகள் பிரிட்டனிலிருந்து இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதற்காக வந்திருந்தனர். வீட்டில் முறைப்படி கிரியைகள் இடம்பெற்று சடலம், கருகம்பகன் மயானத்தில் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய புதைக்கப் பட்டது. கோபிதாஸின் இறுதிக் கிரியைகள் இடம்பெற்ற அவரது வீட்டிலிருந்து, மயானம் வரையில் பருத்தித்துறை பொலிஸார் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டிருந்தனர். பொலிஸாரின் கடும் பாதுகாப்புடனேயே இறுதிக் கிரியைகள் நடைபெற்றன. (ஜ-5)

### மன்னார்

முடிந்த நிலையில் தோண்டும் பணி மீண்டும் ஆரம்பிக்கப் படுகிறது. மன்னார் நீதி வான் மற்றும் அனுராதபுரம் சட்ட வைத்தியர் முன்னிலையில் பணிகள் முன்னெடுக்கப்படும்.

இதுவரை மீட்கப்பட்ட மனித எச்சங்களோடு அணிகலன்கள் சிலவும் நாணய வடிவிலான குற்றிகளும் மீட்கப்பட்டிருந்தன. (உ-ஜ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லையை வீழ்த்தியது பருத்தித்துறை லீக் அணி

யாழ்ப்பாணம், மார்ச் 3
இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் நடத்தும் சிரேஷ்ட லீக் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த வாரம் இமையாணன் மத்திய விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணி வெற்றிபெற்றுள்ளது.
இந்த ஆட்டத்தில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணியை எதிர்த்து முல்லைத்தீவு உதைபந்தாட்ட லீக் அணி களமிறங்கியது.
ஆட்டம் ஆரம்பமானது முதலே இரு அணியினரும் ஆக்ரோஷமாக மோதிக் கொண்டனர்.
விறுவிறுப்பான ஆட்டத்தில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணி வீரன் காண்டீபன் 23 ஆவது நிமிடத்தில் தனது அணிக்கான முதலாவது கோலைப் பெற்றுக் கொடுத்தார்.
எனினும் சுதாகரித்துக்கொண்ட முல்லைத்தீவு உதைபந்தாட்ட லீக் அணியினர் அதன் பின்னர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.
அதனால் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணியால் மேலதிக கோல் எதனையும் பெற முடியவில்லை.


பருத்தித்துறை லீக் உதைபந்தாட்ட அணி

அதனால் முதல் பாதி ஆட்டம் 1:0 என்ற கோல் கணக்கில் பருத்தித்துறை உதைபந் தாட்ட லீக் அணி முன்னிலையில் இருந்த நிலையில் முடிவுற்றது.
இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமானதும் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணி வேகமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. இதன் பலனாக பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணியின் முன்னணி வீரன் பிறேம்குமார் ஆட்டத்தின் 47 ஆவது மற்றும் 53 ஆவது நிமிடங்களில் தொடர் கோல்களைப் பெற்று தனது அணியை முன்னிலைப்படுத்தினர்.
அதன் பின்னர் ஆக்ரோஷமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர் முல்லைத்தீவு லீக் உதைபந்தாட்ட அணியினர்.
இதன் பயனாக 57 ஆவது நிமிடத்தில் அந்த அணி வீரன் பகீரதன் தனது சிறப்பான ஆட்டத்தின் மூலம் தனது அணிக்கான முதலாவது கோலைப் பெற்றுக் கொடுத்தார்.
அதன் பின்னர் இரு அணியினராலும் கோல் எதனையும் பெறமுடியவில்லை. ஆட்ட நேர முடிவில் 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது பருத்தித்துறை லீக் உதைபந்தாட்ட அணி. (ற-23)

# மகளிர் கரப்பந்தாட்டம் வெற்றி பெற்ற அணிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 3
வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான 15, 17, 19 வயதுப் பிரிவு மகளிருக்கான கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:-

*15 வயதுப் பிரிவு பெண்கள்*
முதலாமிடம் - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
இரண்டாமிடம் - சென்.தோமஸ் றோ.க. பெண்கள் பாடசாலை
மூன்றாமிடம் - பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.

*17 வயதுப் பிரிவு பெண்கள்*
முதலாமிடம்- மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை
இரண்டாமிடம்- சென்.தோமஸ் றோ.க.பெண்கள் பாடசாலை
மூன்றாமிடம்- உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

*19 வயதுப் பிரிவு பெண்கள்*
முதலாமிடம்- மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை
இரண்டாமிடம்- உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
மூன்றாமிடம்-வடமராட்சி மத்திய கல்லூரி (ற-23)

# கிண்ணத்தைச் சுவீகரித்தன சென்.மேரிஸ், சென்.மரியன்ஸ்

யாழ்ப்பாணம், மார்ச் 3
மடுப்பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆடவர் பிரிவில் குஞ்சுக்குளம் சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணியும் மகளிர் பிரிவில் கட்டை அடம்பன் சென்.மரியன்ஸ் விளையாட்டுக்கழகமும் வெற்றி பெற்றுச் சம்பியனாகத் தெரிவாகியுள்ளன. இந்த இறுதியாட்டங்கள் குஞ்சுக்குளம்சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றன.
முதலில் இடம்பெற்ற ஆடவருக்கான இறுதியாட்டத்தில் குஞ்சுக்குளம் சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சின்ன பண்டிவிரிச்சான் சென்.சேவியர் விளையாட்டுக்கழக அணி மோதியது.
அதில் குஞ்சுக்குளம் சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தது.
மகளிருக்கான இறுதியாட்டத்தில் கட்டை அடம்பன் சென்.மரியன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சின்ன வளையன் கட்டு உதய சூரியன் விளையாட்டுக்கழக அணி களமிறங்கியது.
அதில் கட்டை அடம்பன் சென்.மரியன்ஸ் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது. (ற-23)

# வென்றது அராலி சரஸ்வதி



சரஸ்வதி வித்தியாலய அணி

வலி வடக்கு மார்ச் 3
சங்கானைக் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 15 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் அராலி சரஸ்வதி வித்தியாலயம் மூன்றாவது ஆண்டாகவும் சம்பியனாகியது.
அராலி சரஸ்வதி மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலயமும் அராலி சரஸ்வதி வித்தியாலயமும் மோதிக் கொண்டன.
போட்டி ஆரம்பமாகிய நேரம் முதல் மைதானத்தில் சரஸ்வதி வித்தியாலய அணி அபார ஆட்டத்தை வெளிப்படுத்தியது. முதல்பாதி ஆட்டத்தில் சரஸ்வதி வித்தியாலயம் 09:03 புள்ளிகள் என முன்னிலையில் இருந்தது.
இரண்டாம் பாதி ஆட்டத்திலும் சரஸ்வதி வித்தியாலயம் 10:00 புள்ளிகள் என முன்னிலை பெற்றது. ஆட்ட நிறைவில் சரஸ்வதி வித்தியாலயம் 19:03 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றுச் சங்கானை கல்விக் கோட்ட சம்பியனாகியது. (கு-86)



# கரப்பந்து போட்டிகள் இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 3
தெல்லிப்பழை கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்படும் 15 வயது, 17 வயது, 19 வயதுப் பிரிவு ஆடவருக்கான கரப்பந்தாட்டப் போட்டிகள் இன்று திங்கட்கிழமை தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன. (ற-23)

## பூப்பந்தாட்ட சுற்றுத் தொடர்

# ஆடவர், மகளிர் பிரிவுகளில் யங்ஸ்ரார் வி.க. சம்பியன்

யாழ்ப்பாணம், மார்ச் 3
வவுனியா பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட பூப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் ஆடவர், மகளிர் இரு பிரிவுகளிலும் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி சம்பியனாகத் தெரிவாகியுள்ளது.
வவுனியா நகர சபை உள்ளரங்கில் இந்த இறுதியாட்டங்கள் இடம்பெற்றன.
முதலில் இடம்பெற்ற ஆடவருக்கான இறுதியாட்டத்தில் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கலைமகள் விளையாட்டுக்கழக அணி மோதியது.
அதில் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனாகத் தெரிவாகியது.
தொடர்ந்து இடம்பெற்ற மகளிர் இறுதியாட்டத்தில் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பமிலியன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது. அதில் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது. (கு-23)

# இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 3
யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் விசேட அனுமதியின் பேரில் அளவெட்டி கிழக்கு கும்பழை பாரதி விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியில் மட்டுப்படுத்தப்பட்ட கழகங்களுக்கிடையே மின்னொளியில் நடத்திவரும் தாச்சி சுற்றுப் போட்டியில் இன்று திங்கட்கிழமை இரவு ஏழு மணிக்கு சுதுமலை நாவலர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இணுவில் அண்ணா விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (ற-288)

# கலைமதியை வீழ்த்தி கொலின்ஸ் இறுதிக்குத் தகுதி


இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்ற கொலின்ஸ் விளையாட்டுக் கழக அணியினர்

பருத்தித்துறை, மார்ச் 3
பருத்தித்துறை உதைபந் தாட்ட லீக்கால் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் இறுதியாட்டத்துக்கு கொலின்ஸ் வி.க. தகுதி பெற்றுள்ளது.
இந்த அரை இறுதியாட்டம்கடந்த வெள்ளிக்கிழமை இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது. அதில் நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து குஞ்சர் கடை கொலின்ஸ் அணி மோதியது.
ஆட்டம் ஆரம்பமான போது இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்களல்ல என்பதனை நிரூபித்தன. எனினும் முற்பாதி ஆட்டம் கலைமதி அணிக்கே சாதகமாக அமைந்தது. ஆனால் அவர்கள் தமக்கு கிடைத்த பல சந்தர்ப்பங்களைத் தவறவிட்டனர். எனினும் 14 ஆவது நிமிடத்தில் கொலின்ஸ் அணி வீரர் பிரவீன்குமார் தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்தி கோல் ஒன்றைப் போட்டார். அதனால் ஆட்டம் மேலும் விறுவிறுப்படைந்தது.
இடைவேளைக்காக ஆட்டம் நிறுத்தப்பட்ட போது 1:0 என்ற கோல் கணக்கில் கொலின்ஸ் அணியினர் முன்னிலை வகித்தனர்.
இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடங்கிய போது கொலின்ஸ் அணியினர் தாம் முன்னேறுவதைக் கைவிட்டு தடுப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
அதனால் கலைமதி அணியினரின் முன்னேற்றங்களை இலகுவாக முறியடித்தனர். ஆட்ட வியூகங்களை மாற்றியமைத்து கலைமதிஅணியினர்களம்இறங்கியபோதும் அவர்களுக்கு அது கைகொடுக்கவில்லை.
அதனைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திய கொலின்ஸ் அணி [illegible] ஆவது நிமிடத்தில் மிக வேகமாகக் கொண்டு சென்ற பந்தை கலைமதி அணியின் பின்கள வீரர்கள் முறையற்ற விதத்தில் தடுத்தனர். அதனால் கொலின்ஸ் அணிக்கு தண்டனை உதை ஒன்று வழங்கப்பட்டது.
அதைச் சரியாகப் பயன்படுத்திய கொலின்ஸ் வீரர் பிரசாந் கோலாக்கினார். வெற்றி வாய்ப்பு கொலின்ஸ் அணி பக்கம் சாய நிலைகுலைந்தது கலைமதி அணி. இறுதியில் கொலின்ஸ் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றது. (ற-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தென்னாபிரிக்கா சம்பியன்

19 வயதுக்கு உட்பட்டவருக்கான உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் இறுதிச்சுற்றில் பாகிஸ்தானை வீழ்த்தி தென்னா பிரிக்க அணி சம்பியன் பட்டம் பெற்றது.

19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் டுபாயில் நடந்தது.


இதன் இறுதிச் சுற்றில் பாகிஸ்தான்-தென்னாபிரிக்கா அணிகள் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி, 44.3 பந்துப்பரிமாற்றங்களில் 131 ஓட்டங்களுக்கு அனைத்து இலக்குகளையும் இழந்தது.

தொடர்ந்து விளையாடிய தென்னாபிரிக்கா அணி, 42.1 பந்துப்பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 134 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. (கு)

தென்னாபிரிக்க அணி

# ரோஜர் பெடரர் சாம்பியன்



ரோஜர் பெடரர்

டுபாய் ஓபன் ரென்னிஸ் தொடரின் ஒற்றையர் பிரிவில் சுவிற்ஸர்லாந்தின் ரோஜர் பெடரர் கிண்ணம் வென்றார். டுபாயில் ஆண்களுக்கான சர்வதேச ரென்னிஸ் சம்பியன் ஷிப் தொடர் நடந்தது. இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதியில் சுவிற்ஸர்லாந்தின் ரோஜர் பெடரர், தர வரிசையில் 6ஆவது இடத்திலுள்ள செக் குடியரசின் தோமஸ் பெர்டிச்சை சந்தித்தார். முதல் செற்றை 36 என இழந்த பெடரர், அடுத்த செற்றை 64 என வென்று பதிலடி கொடுத்தார். வெற்றியாளரை நிர்ணயிக்கும் மூன்றாவது செற்றில் அசத்திய பெடரர் 63 என கைப்பற்றினார்.

முடிவில், ரோஜர் பெடரர் 36, 64, 63 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று, சம்பியன் பட்டத்தை தட்டிச்சென்றார். இந்தத் தொடரில் பெடரர் வெல்லும் 6 வது பட்டம் இதுவாகும். (கு)

# தோல்விக்கு என்ன காரணம்?



ஆசியக் கிண்ணப் போட்டியில் இலங்கை அணியிடம் இந்தியா 2 இலக்குகள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது. இதற்கு இந்திய அணியின் மோசமான துடுப்பாட்டம் காரணம் என தெரிவிக்கப்படுகிறது. 5 முறை பிடியைத் தவறவிட்டுள்ளனர். இலங்கை தொடக்க ஆட்டக்காரர் குசல் பெரேரா 7 ஓட்டங்களில் ஆடிக் கொண்டிருந்த போது கொடுத்த நல்ல பிடியை வாய்ப்பை, ரஹானே, ஷிகர் தவான் இருவரும் பிடிக்க முயற்சித்து முட்டிமோதி கோட்டைவிட்டனர். ஒருவர் மட்டுமே ஓடி வந்திருந்தால் பிடியை எடுத்திருக்கலாம். திரிமன்னே 5 ஓட்டங்கள் எடுத்திருந்த போது, வலுவாக அடித்த பந்தை அந்தரத்தில் பாய்ந்து ஜடேஜா பிடிக்க முயற்சித்தார், அது தவறியது.

38 ஓட்டத்தில் இருந்த போது குசல் பெரேராவுக்கு, மறுபடியும் ஜடேஜாவின் உருவத்தில் கருணை கிடைத்தது. ஜடேஜாவின் கையில் பந்து சரியாக விழுந்த போதிலும், கண்ணிமைக்கும் நேரத்தில் நழுவிப் போனது. சங்கக்கரா வழங்கிய வாய்ப்பை வீணடித்ததன் விளைவு தான் இந்தியாவுக்கு பேரிடியாக அமைந்தது. அவர் 30 ஓட்டங்களில் ஆடிக் கொண்டிருந்த போது, ஜடேஜாவின் பந்து வீச்சில் ஸ்ரம்பிங் ஆகியிருக்க வேண்டியது.

அவர் கிரீசை விட்டு வெளியே நின்ற போது பந்தை சேகரித்த இலக்குக் காப்பாளர் தினேஷ்கார்த்திக் உடனடியாக ஸ்ரம்பை தாக்க முயற்சித்த போது கை ஸ்ரம்பில் படவில்லை. பிறகு 2ஆவது முயற்சியில் அடிப்பதற்குள் சங்கக்கரா கிரீசுக்குள் வந்து தப்பி விட்டார். இலங்கை அணி வெற்றியின் விளிம்பில் இருந்த போது கூட கடைசி பந்துப்பரிமாற்றத்தின் முதல் பந்தில் திசரா பெரேரா வழங்கிய எளிதான பிடியை மிட்ஓப் திசையில் நின்ற ஷிகர் தவான் வீணடித்தார். (கு)



தினேஷ் சந்திமால்

# இலங்கை வீரர்களுக்கு புதிய ஒப்பந்தம்

இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்கான புதிய ஒப்பந்தத்தில் 20/20 அணியின் தலைவர் தினேஷ் சந்திமால் தரம் 2 இல் இருந்து தரம் ஒன்றுக்கு உயர்த்தப்பட்டுள்ளார். முன்னணி வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க, திலகரட்ண டில்ஷான் மற்றும் பிரசன்ன ஜெயவர்த்தன ஆகிய மூவருக்கும் விசேட ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட் வீரர்களின் 2014-2015 ஆம் ஆண்டுக்கான புதிய ஒப்பந்தப்பட்டியல் இலங்கை கிரிக்கெட் சபையினால் வெளியிடப்பட்டது. இதில் நான்கு வீரர்களுக்கு ஒப்பந்த உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், 20/20 அணியின் தலைவர் தினேஷ் சந்திமால் தரம் 2 இல் இருந்து தரம் ஒன்றுக்கும், லகிரு திரிமான்னே தரம் 3 இல் இருந்து தரம் 2 இற்கும், குஷால் ஜனித் பெரேரா தரம் 4 இல் இருந்து தரம் 3 இற்கும், கௌஷால் சில்வா மாகாண தரம் ஒன்றில் இருந்து தேசிய தரம் 4 இற்கும் உயர்த்தப்பட்டுள்ளனர். (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# போராடி வென்றது பாகிஸ்தான்

இந்தியா-பாகிஸ்தான்.அணிகளுக்கிடையில் நேற்று நடைபெற்ற பரபரப்பான போட்டியில் பாகிஸ்தான் இறுதிப் பந்துப்பரிமாற்றத்தில் 2 பந்துகள் மீதமிருக்க ஒரு இலக்கால் இறுதி வரை போராடி வென்றது பாகிஸ்தான். கடந்த போட்டியில் இந்திய அணியில் இடம்பெற்ற ஸ்டுவர்ட் பின்னிக்கு பதிலாக சுழற்பந்து வீச்சாளர் அமித் மிஸ்ரா சேர்க்கப்பட்டார்.

ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாக வழக்கம் போல் ஷிகர் தவானும், ரோகித் ஷர்மாவும் களமிறங்கினர். இருவரும் நிதானமாக ஆடி வந்த நிலையில் தவான் 10 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது எல்.பி.டபிள்யூ என நடுவரால் தவறாக ஆட்டமிழப்பு செய்யப்பட்டார். பின்னர் வந்த தலைவர் கோஹ்லி 5 ஓட்டங்களில் நடையை கட்டினார்.

இரு இலக்குகள் வீழ்ந்தபோதும் அதிரடியாக விளையாடிய ரோகித் 58 பந்துகளில் 56 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். 3ஆவது இலக்குக்கு களமிறங்கிய ரகானே தன் பங்குக்கு 23ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழந்தார் . பின் னர் வந்த ராயுடுவும், தினேஷ் கார்த்திக்கும் நிதானமாக ஆடி வந்தனர். ஆட்டத்தின் 38 ஆவது பந்துப்பரிமாற்றத்தில் கார்த்திக்கும் 23 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார் .

6ஆவது இலக்குக்கு களமிறங்கிய ஜடேஜா பாகிஸ்தான் பந்து வீச்சை வெளுத்துவாங்கினார். அவருக்கு போட்டியாக ராயுடுவும் தன் பங்குக்கு ஒரு சிக்ஸர் அடித்தார். ராயுடு 62 பந்துகளில் 58 ஓட்டங்கள் எடுத்திருந்த போது அஜ்மலின் பந்து வீச்சில்ஆட்டமிழந்தார். பின்னர் வந்த வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்த போதும் ஜடேஜா இரண்டு 6 ஓட்டங்கள் விளாசி 49 பந்துகளை சந்தித்து 52 ஓட்டங்கள்எடுத்து இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார்.

நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப்பரிமாற்றத்தில் முடிவில் இந்திய அணி 8 இலக்குகள் இழப்பிற்கு 245 ஓட்டங்களை எடுத்தது. தொடர்ந்து 246 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய பாகிஸ்தான்அணி இந்திய சுழற்பந்து வீச்சாளர்கள் பெரும் நெருக்கடியைக் கொடுத்தனர்.ஒருபுறம் இலக்குகள் மளமள என வீழ்ந்தாலும் முகமட் ஹபீஷ் போராடி அணியின் வெற்றிக்கு வித்திட்டார்.அவர் 130 பந்துகளை எதிர் கொண்டு 75 ஓட்டங்கள் பெற்று ஆட்டமிழந்தார். இவர் தவிர அகமட் ஷேஸத் 42 ஓட்டங்களையும் சொகைப் மக்சூட் 38 ஓட்டங்களையும் பெற்றதோடு சயிட் அவ்ரிடி ஆட்டமிழக்காமல்34 ஓட்டங்களையும் பெற்றனர். இந்தியப் பந்து வீச்சில் அஷ்வின் 3 இலக்குகளையும் மிஷ்ரா, குமார் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.போட்டியின் ஆட்ட நாயகனாக முகமட் தல்கா தெரிவு செய்யப்பட்டார். (400)

# தீபிகாவே எனது அதிர்ஷ்ட தேவதை

ஐ.பி.எல். போட்டிக்கான ஏலத்தில் அதிக தொகைக்கு ஏலம் போனது. இந்திய அணியில் மீண்டும் இடம்பிடித்தது எல்லாம் என் அதிர்ஷ்ட தேவதை வந்த நேரம் தான் என இந்திய அணி வீரர் தினேஷ் கார்த்திக் தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் இலக்குக்காப்பாளரும் துடுப்பாட்ட வீரருமான தினேஷ் கார்த்திக்.

இதுவரை 67 ஒருநாள் போட்டிகளில் பங்கேற்ற பின்பும், அணியில் நிரந்தர இடம் கிடைக்கவில்லை.

ஏனெனில் இந்திய அணியின் அணித்தலைவர் டோனி, இலக்குக் காப்பாளராகவும் இருப்பதுதான்.

இருப்பினும் துடுப்பாட்ட வீரராக அணியில் இடம் பெற்ற போதும், மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்த அணியில் இருந்து நீக்கப்பட்டார். இதற்கிடையே இந்தியாவின நம்பர்-1' ஸ்குவாஷ் வீராங்கனை தீபிகா பல்லீகலுடன் காதலில் விழுந்தார். கடந்த ஆண்டு இருவருக்கும் நிச்சயதார்த்தம் நடந்தது.

இந்நிலையில் சமீபத்தில் நடந்த ஐபிஎல் ஏலத்தில் ரூ. 12.5 கோடிக்கு டில்லி அணியால் வாங்கப்பட்டார்.

தற்போது, ஆசிய கிண்ணத் தொடரில் இருந்து டோனி விலக, இலக்குக்காப்பாளர் என்ற முறையில் வாய்ப்பு தினேஷ் கார்த்திக்குக்கு வந்தது. (400)



மிகப்புதிய வரவு அபூர்வ வரவு
கனடாவில் படிக்க உழைக்க
3 மாதங்களில் பறக்கலாம்
எதிர்பார்க்கப்படும் செலவினம்
22 இலட்சங்கள். எண்ணி 7 பேருக்கு மட்டுமே இவ் வாய்ப்பு
(யாவும் நிபந்தனைகளுடன்)
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 9016, 021 568 9090
(45278) (10.14)

யாழ்.FM இல் நேரடி அஞ்சல்
திசைகாட்டியின் துன்னாலைப்பிரதேச இலவச அறநெறிப்பாடசாலை ஆரம்பவிழா இன்று பிற்பகல் 3.00 மணி தொடக்கம் நேரடி அஞ்சல் செய்யப்படும்.
FM. 90.1 இல் இதனை அன்பர்கள் கேட்டு மகிழலாம்.
திசைகாட்டி (பிறைவேற் (லிமிற்)
175 பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்.
021 2219016, 021 5689090

சர்வதேச ஆங்கில பரீட்சைகள்
ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்
IELTS
(Duration: 40 hrs with free 4 mock exams)
• Latest training materials.
• Skills development in all four categories.
• Personalised guidance and ample of opportunities to interact with the lecturer.
• Depend on individual needs, the student can access other English Modules FREELY.
விரிவுரைகள் Oxford University UK postgraduate ஆல் வழங்கப்படும்
IELTS பரீட்சை பதிவுகளை எந்தக்கிளையிலும் இலவசமாக மேற்கொள்ள முடியும்
Spoken English
அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள்.
அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்.
அச்சடித்த பாடப்புத்தகங்கள்.
மல்ரிமீடியா ஊடான கற்பித்தல்.
நவீன வசதிகளுடன் கூடிய வகுப்பறைகள்.
புதிய பிரிவுகள் ஆரம்பம்
City & Guilds A1, A2, B1, B2
(ESOL) Diploma International English for Speakers of other Languages
சித்தியடைவதற்கான 100% உத்தரவாதம்
(சித்தியடையாவிட்டால் கட்டணம் மீளாளிக்கப்படும்)
திருமணம் செய்து நிரந்தர விசாவில் London செல்பவர்கள், உயர்கல்விக்கு UK செல்வோருக்கு பிரித்தானிய அரசால் கோரப்படும் ஆங்கில பரீட்சைகள் எமது நிறுவனத்திலே கற்று எமது நிறுவனத்திலேயே பரீட்சைக்கு இலகுவாக தோற்றமுடியும்.
DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம்: No.113. கன்னாதிட்டி வீதி, Tel.: 021-222 4403
நெல்லியடி: M.M.V வீதி, Tel.:021-226 2470
சாவகச்சேரி: கண்டி வீதி, (HNB அருகில்) Tel.:021-227 0775
சுன்னாகம்: Jet மோட்டேசன் சந்தி Tel.:021-224 1970

Physics Group Class
Thanchi Lane, Arasadi Road
A/L-2016 Mechanics
தமிழ்மொழி மூலம் — ஆரம்பம்:04.03.2014 (செவ்) 5.30 p.m
English Medium — Commence on: 04.03.2014 (Tue) 4.00 p.m
By:K.Selvan B.Sc (Hons) (45285) (3.6.4)

வேலையாள்கள் தேவை
கிளிநொச்சியில் புதிதாக ஆரம்பமாக உள்ள பிரபல உணவு வழங்கல் நிறுவனம் ஒன்றுக்கு பின்வரும் வேலையாள்கள் உடனடியாக தேவைப்படுகின்றனர்.
1. Cook (சமையல் காரர்)
- 5 வருட அனுபவம் ஹோட்டல் மற்றும் உணவுத்துறையில்
- சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.
2. சமையலறை உதவியாளர்
- G.C.E. O/L & 18 வயதுக்கு மேல்
3. காசாளர் & களஞ்சியக் காப்பாளர்.
- G.C.E. A/L & 18 வயதுக்கு மேல், அனுபமுள்ளவர்கள்.
மேற்குறிப்பிட்ட 3 பதவிகளுக்கும் தங்குமிடம், உணவு, சீருடை வழங்கப்படும். தகுதியுள்ளவர்கள் 06 March 2014 அன்று நடைபெறவுள்ள நேர்முகத் தேர்வுக்கு சமுகம் தரவும்.
தொலைபேசி: 021 567 1065 (சி/12345) (10.6)
முகவரி: 317 1/1, Clock Tower Rd, Jaffna.

IMMEDIATE VACANCIES
Join With Srilanka's #1
IT ,Management & English Education
Receptionist & Trainees
Should be a fast learner about our products and fluent in major languages. We are looking for tha trainee teachers for the KIDS program & Receptionist. The full time Position, Abillity to Work on the weekends is also a Compulsory.
Should passed in O/L and A/L. Diploma in IT will be an added advandage.
Condidates who lives in Point Pedro, Nelliady, vvt and uduppidy will be expectable.
mail your CV with in 7 Days.
ESOFT COMPUTER STUDIES
151,Jaffna Road Nelliady, Karaveddy
Tel:0212264940,Hotline:0771547677
Email:nelliady@esoft.lk,Web:www.esoft.lk

முக்கிய அறிவித்தல்
V.S.S நல்லெண்ணெய்
எள்ளு விலை அதிகரித்தமையினால் நல்லெண்ணெய் விலை 03.03.2014 இன்றுமுதல் ஒரு போத்தல் (750 ml) 580/= ரூபா சில்லறை விலையாக அதிகரிக்கப் பட்டுள்ளது என்பதை பாவனையாளர் கள், விற்பனையாளர்களுக்கு மனவருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.
V.S.S உரிமையாளர்,
வ.ச.சுந்தரலிங்கம்,
சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை.
(45288) (10.6)

கட்டடம் வாடகைக்குத் தேவை
யாழ் நகரப் பகுதிக்குள் ஸ்ரான்லி வீதி, கே.கே.எஸ். வீதி, ஆஸ்பத்திரி வீதிகளில் காட்சியறை ஒன்றுக்கு 40 அடி அகலமும் 2500 அடி விஸ்தீரணமும் உள்ள வாகனத் தரிப்பிடத்துடன் கூடிய கட்டடம் வாடகைக்குத் தேவை.
தொடர்பு: 071 856 1320
(சி/12345) (10.6)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.03.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org